

விலை ரூபா 80
பக்கங்கள் - 12 + xII

# ஒருவன்

ஆண்டு: 01 இதழ் : 11 குரோதி வருடம் மார்கழி மாதம்
07 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஹிஜ்ரி 1446 ஜமாதுல் ஆகிரா 20 (22.12.2024)




# சர்வதேச ஆய்வு கப்பல்களை கையாள தேசியக் கொள்கை

## விசேட குழுவொன்றை நியமிக்க அரசு தீர்மானம்



(சுப்ரமணியம் நிஷாந்தன்)

இலங்கைக்கு வருகைதரும் சர்வதேச கப்பல்களுக்கு அனுமதியளிக்கும் தேசிய கொள்கையொன்றை உருவாக்க அரசாங் கம் தீர்மானித்துள்ளதுடன்,குறித்த கொள் கையை வகுக்க விசேடகுழுவொன்றை நியமிக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகச் சந்திப்பில் கருத்து வெளியிட்ட அவர், மேலும் கூறியதாவது,

"இலங்கைக்கு வருகைதரும் ஆய்வு கப்பல்கள் தொடர்பில் தெளிவாக எமது நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளோம். இலங்கையின் தேசிய பாதுகாப்புக்கு ஆப த்தாகும் வகையிலான எந்தவொரு அனும தியும் வழங்கப்படாது. ஆய்வு கப்பல்கள் தொடர்பில் தேசிய கொள்கையொன்று அவசியமாகும். தேசிய கொள்கையை வகுக்க விசேட குழுவொன்றை நியமிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

ஆய்வு கப்பல்கள் மாத்திரம் அல்ல இலங்கைக்கு வருகைதரும் அனைத்து கப்பல்களும் பின்பற்ற வேண்டிய நடை முறைகள் என்ன என்பது தொடர்பில் ஆய் வுகளை நடத்தி சிபாரிசுகளை முன்வைக் கும் பொறுப்பு இந்த குழுவுக்கு வழங் கப்படும். அதன் பிரகாரம் தான் எதிர்கா லத்தில் நாம் செயல்படுவோம்.

இந்தியா அதன் கடல் மற்றும் தேசிய பாதுகாப்பு தொடர்பில் கரிசனை கொண் டுள்ளது. நாமும் அதனை உறுதியளித்து ள்ளோம். இந்தியாவின் தேசிய பாதுகாப்புக்கு (தொடர்ச்சி...) 02




மனுமகனாய் பிறந்தீரே
எமை மீட்க வந்தீரே
சோகம் நீங்க வேண்டுமென்றே
கரம் கூப்பி வேண்டுகின்றோம்
வாரும் ஐயா.. நலம் தாரும் ஐயா ..!

## திருமலையில் 'ரோஹிங்கிய' அகதிகள்




(எஸ். கீதபொன்கலன்)

(08 பக்கம்)

## நத்தார் பண்டிகை: பாதுகாப்பு கடமையில் 40,000 பொலிஸார்

(கனுஷியா புஷ்பகுமார்)

நத்தார் பண்டிகையை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் தேவாலயங்கள் மற்றும் மத ஸ்தலங்களின் பாதுகா ப்பிற்காக சுமார் 40,000 பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட வுள்ளதாக பொலிஸ் (தொடர்ச்சி...) 02

## எட்கா: பேச்சுக்களை தொடர இலங்கை - இந்தியா இணக்கம்

### அரசாங்கம் விளக்கம்

(சுப்ரமணியம் நிஷாந்தன்)

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் இந்திய பயணத்தில் எட்கா உடன்படிக்கை தொடர்பில் எவ்வித இறுதி இணக்கப்பாடுகளும் எட்டப்படவில்லை. இது தொடர்பான பேச்சுகளை முன்னோக்கி கொண்டுசெல்லவே இருதரப்பினரும் இணங்கியுள்ளதாக வெளிவி வகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார். ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் (தொடர்ச்சி...) 02

## இரவில் வெளியேறி காலையில் வீடு திரும்பும் மக்களின் அவலம்

( முகம்மட் முக்தார் )

பொத்துவில் பிரதேசத்தில் உள்ள பின்தங்கிய பிரதேசங்களில் காட்டுயானைகளின் நடமாட்டம் அதிகரித்துக் காணப்படுவதால் மக் கள் பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்டுள்ளதோடு, இரவு நேரங்களில் பீதியுடன் வாழ்ந்து (தொடர்ச்சி...) 02

## அரிசி இறக்குமதிக்கான கால அவகாசம் நீடிப்பு

(கனுஷியா புஷ்பகுமார்)

இலங்கைக்கு அரிசியை இறக்குமதி செய்வதற்காக வழங்கப்பட்ட கால அவகா சம் எதிர்வரும் ஜனவரி மாதம் 10ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக வர்த்தக அமைச்சு தெரிவித்துள்ளது. நாட்டில் ஏற்ப ட்டுள்ள அரிசி தட்டுப்பாட்டுக்கு தீர்வாக அரிசி இறக்குமதிக்கு அனுமதி வழங்கப்ப ட்டிருந்தது. அதன்படி, அரிசியை இறக்குமதி (தொடர்ச்சி...) 02













## ஜனாதிபதி நிதியத்திலிருந்து பெரும் தொகை பெறப்பட்டது ஏன்?



( பாலகணேஷ் டிலுக்ஷா )

2005 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளு க்கிடையில் ஜனாதிபதி நிதியத்தின் மூலம் பயனடைந்த அரசியல்வாதிகளில் பெயர் அண்மை யில் நாடாளுமன்றத்தில் பகிரங்கப்ப டுத்தப்பட்டமை தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர கருத்து வெளியிட்டுள்ளார். ஊடகங்களுக்கு (தொடர்ச்சி...) 02

## அரசாங்க சேவையை முறையான பொறிமுறையாக மாற்றுவது சவால்

### -ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க



எமது நாட்டின் அரச சேவையை முறை யான அரச பொறிமுறையாக மாற்றும்சவால் எம்முன் உள்ளதாக ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார். எமது நாட்டில் தற்போதுள்ள அரச நிறுவனங்களை மீளா ய்வு செய்ய நியமிக்கப்பட்டிருக்கும், புதிய குழுவின் ஊடாக அரசியல் செல்வாக்கை பொருட்படுத்தாமல், அவை தொடர்பில் தீர்மானம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க ப்படும் எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

நாரஹேன்பிட்டியில் உள்ள "நில மெதுர " கட்டிடத்தில் அமைந்துள்ள உள்நா ட்டலுவ ல்கள் அமைச்சின் கேட்போர் கூடத்தில் வெள்ளிக்கிழமை20) நடைபெற்ற மாவட்ட செயலாளர் ஃ அரசாங்க அதிபர்களின்மாநா ட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போ தே ஜனாதிபதி அநுரகுமார திசாநாய க்க மேற்கண்டவாறு (தொடர்ச்சி...) 02

## துப்பாக்கிகளை கையளிக்காதோருக்கு சட்ட நடவடிக்கை

(சுப்ரமணியம் நிஷாந்தன்)

பாதுகாப்பு காரணங்களுக்காக பாது காப்பு அமைச்சின் ஊடாக கடந்த காலத் தில் பொதுமக்கள் பெற்றிருந்த துப்பாக்கி கள் மற்றும் தோட்டாக்களை எதிர்வரும் ஜனவரி 20ஆம் திகதிக்கு முன்னர் மீள கையளிக்காதவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பாதுகாப்பு அமைச்சின் செயலாளர்எச்.எஸ் துய்யகொந்த (தொடர்ச்சி...) 02

## ஜனாதிபதி நிதியம்: விதிமுறைக்கு புறம்பாக நிதி வழங்கவில்லை



### ரணில் விளக்கம்

(கனுஷியா புஷ்பகுமார்)

தனது ஆட்சி காலப்பகுதியில் (2022- 2024 மருத் துவ உதவிகளை பெற்றுக்கொள்வதற்காக மக்கள் பிரதிநிதிகள் தனிப்பட்ட ரீதியில் பல்வேறு கோரிக்கை களை முன்வைத்த போதிலும், ஒரு கோரிக்கையைத் தவிர, ஜனாதிபதி நிதியத்தின் பொது நிர்வாக முறை யைப் பின்பற்றி 10 இலட்சம் ரூபாவுக்கு மேல் நிதியுதவி (தொடர்ச்சி...) 02

## வாஸ் குணவர்தன உள்ளிட்ட ஐவருக்கும் மரண தண்டனை உறுதியானது

### கொழும்பு மேல் நீதிமன்றம் அறிவிப்பு



( ஆர்.மனோசங்கர் )

கோடீஸ்வர தொழிலதிபர் முகமது ஷி யாம் கொலைச் சம்பவம் தொடர்பில்முன் னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபர்வாஸ் குணவர்தன உள்ளிட்ட ஐந்துபிரதி வாதிக ளுக்கு மரண தண்டனை உறுதிசெய்யப்பட் டுள்ளது.

கொழும்பு மேல் நீதிமன்றத்தின்மூவர டங்கிய அமர்வு விதித்த மரண தண்டனை யை உச்ச நீதிமன்றம் உறுதி செய்து ள்ளதாக (தொடர்ச்சி...) 02

மனிதத்தின் குரலாக - உங்களில் ஒருவனாக : ஒருவன்

## வாஸ் குனவர்தன...

பிரதிவாதிகளுக்கு வெள்ளிக்கிழமை (20) கொழும்பு மேல் நீதிமன்றில் அறிவிக்கப்பட்டது.

முன்னாள் பிரதி பொலிஸ் மா அதிபர் வாஸ் குணவர்தன, அவரது மகன் ரவிந்து குணவர்தன மற்றும் குறித்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட ஐவரும் சிறைச்சாலை அதிகாரிகளினால் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

குறித்த தண்டனைக்கு எதிராக பிரதிவாதிகள் முன்வைத்த மேன்முறையீட்டு மனுக்களை உச்ச நீதிமன்றம் நிராகரித்துள்ளதாக கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஆதித்ய படபாண்டிகே பிரதிவாதிகளுக்கு அறிவித்தார்.

அதன்படி, கொழும்பு மேல் நீதிமன்றத்தின் மூவரடங்கிய அமர்வினால் அவர்களுக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனையை உச்ச நீதிமன்றம் உறுதி செய்துள்ளதாக பிரதிவாதிகளுக்கு நீதிபதி ஆதித்ய படபாண்டிகே தெரிவித்தார்.

பிரதிவாதிகள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி நீதிமன்றத்தில் உண்மைகளை முன்வைத்ததுடன், பிரதிவாதிகளுக்கு விதிக்கப்பட்ட தண்டனையை நிறைவேற்றும் திகதியை உச்ச நீதிமன்றம் குறிப்பிடவில்லை என சுட்டிக்காட்டினார்.

குற்றவாளிகள் ஜனாதிபதியின் மன்னிப்பை எதிர்பார்க்கும் பட்சத்தில் தண்டனையை நிறைவேற்றும் திகதி அவர்களுக்கு மிகவும் முக்கியமானது என சுட்டிக்காட்டிய சட்டத்தரணி, அதற்கமைய தண்டனையை நிறைவேற்றும் திகதி தொடர்பில் உத்தரவு பிறப்பிக்குமாறும் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஆனால் இது தொடர்பில் உச்ச நீதிமன்றமே முடிவெடுக்க முடியும் எனவும், இது தொடர்பில் தாம் உத்தரவு பிறப்பிக்க முடியாது எனவும் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஆதித்ய படபாண்டிகே அறிவித்தார்.

## அரிசி இறக்குமதி...

செய்வதற்கு வழங்கப்பட்ட கால அவகாசம் வெள்ளிக்கிழமையுடன் (20) நிறைவடைந்தது.

தற்போது வரையில் தனியார் இறக்குதியாளர்கள் மூலம் 35,600 மெட்றிக் டொன் அரிசி இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக இலங்கை சுங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அரசாங்கம் மூலம் அரிசி இறக்குமதி செய்யப்படும் என அறிவித்திருந்தாலும் கூட கடந்த 19ஆம் திகதி வரையில் அரிசி இறக்குமதி செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## சர்வதேச...

அச்சுறுத்தலாகும் எந்தவொரு தீர்மானத்தையும் இலங்கை எடுக்காது என் றும் உறுதியளித்துள்ளோம். குறித்த குழுதான் இது தொடர்பில் முடிவெடுக்கும். சீன ஆய்வு கப்பல்கள் மாத்திரம் அல்ல அனைத்து கப்பல்களினதும் வருகையை அனுமதியளிக்கும் தேசிய கொள்கையே வகுக்கப்படும்” என்றார்.

## இரவில் வெளியேறி...

வருவதாக அப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

இன்ஸ்பெக்டர் ஏத்தம், குண்டு மடு, அறுகம்பே, செங்காமம் மற்றும் சர்வோதயபுரம் ஆகிய கிராமங்களுக்குள் காட்டு யானைகள் உட்புகுந்து அங்குள்ள வீடுகள் மதில்கள் பயன் தரும் பயிர்கள் போன்றவற்றை சேதமாக்கி வருவதாக தெரிவிக்கின்றனர்.

மக்கள் பீதியின் காரணமாக மாலை நேரங்களில் குடியிருப்பை விட்டு வெளியேறி பாதுகாப்பை தேடி தங்கள் குழந்தைகளுடன் பாதுகாப்பான இடங்களுக்கும் சென்று காலையில் வீடு திரும்பும் நிலை தமக்கு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

யானைத் தொல்லையை கட்டுப்படுத்த இது வரை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லையெனபொது மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். இதேவேளை பொத்துவில் கனகர் கிராமம் ஊரணி பகுதியில் காட்டு யானை ஒன்று கடந்த புதன்கிழமை (18) காலை உயிரிழந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது

சுமார் 45 வயது மதிக்கத்தக்க ஆண் யானை ஒன்று இவ்வாறு உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்டது.

பயிர் செய்யும் தோட்டம் ஒன்றுக்கு அருகாமையில் மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ள நிலையில் யானை ஒன்றின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக சந்தேகத்தின் பேரில் 53 வயதுடைய நபரொருவர் பொத்துவில் பிரதேச வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டு பொத்துவில் பொலிசாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

## நத்தார்...

ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக மனதுங்க தெரிவித்துள்ளார்.

மேல் மாகாணத்தில் மாத்திரம் சுமார் 6500 பொலிஸ் உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட உள்ளதாகவும், திருட்டில் ஈடுபடுபவர்களை கைது செய்வதற்கு 500 பொலிஸ் உத்தியோகத்தர்கள் சிவில் உடையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் மனதுங்க தெரிவித்தார். போக்குவரத்து நெரிசலை தடுக்கும் வகையில் கொழும்பு நகரில் போக்குவரத்தை கையாள்வதற்கு மாத்திரம் சுமார் 600 பொலிஸ் அதிகாரிகள் ஈடுபடுத்தப்படவுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

பண்டிகைக் காலங்களில் ஆடைகள் மற்றும் ஏனைய பொருட்களை கொள்வனவு செய்யச் செல்லும் போது மக்கள் தமது பணம், கையடக்கத் தொலைபேசிகள், தங்க ஆபரணங்கள் போன்றவை தொடர்பில் அவதானமாக இருக்க வேண்டுமென புத்திக மனதுங்க எச்சரிக்கை விடுத்தார்.

## துப்பாக்கிகளை...

தெரிவித்துள்ளார்.

“உயிர் அச்சுறுத்தல் உட்பட பல்வேறு காரணிகளின் அடிப்படையில் கடந்த காலத்தில் பொதுமக்கள் பலர் பாதுகாப்பு அமைச்சில் விண்ணப்பங்களை சமர்ப்பித்து துப்பாக்கிகள் மற்றும் தோட்டாக்களை பெற்றிருந்தனர்.

இவ்வாறு பெற்றுக்கொண்ட துப்பாக்கிகள் மற்றும் தோட்டக்களை கடந்த நவம்பர் 21ஆம் திகதிக்கு முன்னர் வழங்குமாறு உத்தரவிடப்பட்டது. குறித்த காலப்பகுதியில் 85 வீதமான துப்பாக்கிகள் மீள கையளிக்கப்பட்டன. அதன் பின்னர் குறித்த கால எல்லை ஒக்டோபர் 30ஆம் திகதிவரையும் பின்னர் டிசம்பர் 31ஆம் திகதிவரையும் நீடிக்கப்பட்டது.

கையளிக்கப்பட்டுள்ள துப்பாக்கிகள் அனைத்தும் ஜனவரி 20ஆம் திகதிக்குப் பின்னர் ஆய்வுக்கு உட்படுத்தப்படும். இன்னமும் பலர் துப்பாக்கிகளை கையளிக்கவில்லை. ஜனவரி 20ஆம் திகதிக்கு முன்னர் அவர்கள் அனைவரும் துப்பாக்கிகளை கையளிக்க வேண்டும். கையளிக்காதவர்களுக்கு எதிராக 1916ஆம் ஆண்டு 33ஆம் ஆண்டு துப்பாக்கி சட்டத்தின் பிரகாரம் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

பாதுகாப்பான சமூகத்தை உருவாக்கும் நோக்கில் அரசாங்கம் இந்த பணியை முன்னெடுக்கிறது. இதற்கு எதிராக செயல்படுபவர்களுக்கு சட்ட நடவடிக்கையெடுக்கப்படும்.” என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## எட்கா...

இந்திய பயணம் தொடர்பில் விளக்கமளிக்கும் விசேட ஊடகவியலாளர் சந்திப்பொன்று அரசாங்க தகவல் திணைக்களத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இந்த ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறியதாவது, அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்,

”ஜனாதிபதியின் இந்திய பயணம் இலங்கையர்களுக்கு மிகப்பெரிய வெற்றியை அளித்துள்ள பயணமாக மாறியுள்ளது. இலங்கையின் ஜனாதிபதி ஒருவருக்கு வழங்க கூடிய உயரிய கௌரவத்தை இந்தியாவின் அரச அதிகாரிகள் எமக்கு வழங்கினர். நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் இந்த கௌரவம் கிடைத்துள்ளது.

இந்திய வெளிவிவகார அமைச்சர், நிதி அமைச்சர் மற்றும் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல் ஆகியோருடன் முதல் நாளிலேயே ஜனாதிபதி சந்திப்புகளை நடத்தியிருந்தார். இந்த சந்திப்புகள் எமது நாட்டின் பொருளாதாரம், கலாசாரம் மற்றும் ஏனைய பிணைப்புகளை மேலும் வலுப்படுத்துவதாக அமைந்தன.

இந்தியாவுடனான எமது உறவை மற்றுமொரு அத்தியாயத்தை நோக்கி கொண்டுசென்ற பயணமாக இது இருந்தது. இரண்டாவது நாளில் அரச வரவேற்பு அளிக்கப்பட்டதுடன், இந்திய பிரதமர், ஜனாதிபதி மற்றும் அரச தரப்பினருடன் சந்திப்புகளை நடத்தினோம்.

இருதரப்புகளுக்கும் இடையில் உடன்படிக்கைகளும் கைச்சாத்திடப்பட்டன. ஜனாதிபதி மற்றும் இந்திய பிரதமர் இணைந்து கூட்டு அறிவிப்புகளை வெளியிட்டதுடன், இருநாடுகளும் இணைந்து கூட்டறிக்கைகளையும் வெளியிட்டோம். அதேபோன்று இந்திய சுகாதார அமைச்சர் மற்றும் இந்திய வர்த்தகர்களுடனும் சந்திப்புகளை ஜனாதிபதி நடத்தினார். மூன்றாம் நாள் மகாபோதியில் வழிபாடுகளில் ஈடுபட்டோம். இதற்கு அப்பால் நான் வெளிவிவகார அமைச்சராக சில நிகழ்வுகளில் கலந்துகொண்டேன். முதலாவது உடன்படிக்கையில் 1500 அரச ஊழியர்களுக்கு இரண்டு வார பயிற்சியை வழங்கும் இணக்கப்பாடு எட்டப்பட்டது. இரண்டாவது உடன்படிக்கையில் இரண்டு நாடுகளில் விதிக்கப்படும் வரிக்கு பதிலாக ஒரு நாட்டில் வரியை செலுத்தும் முறையை அறிமுகப்படுத்த இணக்கப்பாடு எட்டப்பட்டது. வர்த்தகர் ஒருவர் ஒரு நாட்டில்தான் இதன்மூலம் எதிர்காலத்தில் வரியை செலுத்த வேண்டும். இது மிகப்பெரிய நன்மையாகும்.

இவை மாத்திரமே இணக்கப்பாடுகள் எட்டப்பட்ட விடயமாகும். ஏனைய விடயங்கள் தொடர்பில் பேச்சுகள் நடத்தப்பட்டன. என்றாலும் இணக்கப்பாடுகள் எட்டப்படவில்லை.

வடக்கில் மீனவர்கள் மற்றும் தமிழக மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினை தொடர்பில் சில இணக்கப்பாடுகள் எட்டப்பட்டன. ரோலர் படகுகள் மூலம் மீன்பிடியில் ஈடுபடுவதால் ஏற்படும் பாதிப்பு மற்றும் மீனவர்கள் எல்லைத் தாண்டி மீன்பிடிப்பதால் ஏற்படும் கைதுகள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

இருதரப்பினரும் ஆழமாக இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாடியதுடன். விரைவாக நிரந்தர தீர்வை பெற்றுக்கொள்ள இருதரப்பினரும் இணங்கியுள்ளோம்.

இந்தியாவால் முன்னெடுக்கப்படும் வீட்டுத் திட்டங்களை தொடர்ந்து முன்னெடுத்து செல்ல இந்தியாவின் உதவி தொடர்ந்து வழங்கப்படும் என்றும் உறுதியளிக்கப்பட்டன.

மாஹவ மற்றும் அநுரதாரபுரம் இடையில் புனரமைக்கப்படும் புகையிரத பாதையை முழுமையாக மானிய அடிப்படையில் செய்துக்கொடுக்க இந்தியா இணங்கியுள்ளது.

எமக்கு சொந்தமான சர்வதேச கடல் எல்லை தொடர்பில் கலந்துரையாடல் நடத்தப்பட வேண்டும் என ஜனாதிபதி கோரிக்கை விடுத்தார். இதுதொடர்பில் ஐ.நாவில் இலங்கை கோரிக்கையொன்று முன்வைத்துள்ளது. இந்தியாவுடன் கலந்துரையாடி இருதரப்பும் இணக்கப்பாடுகள் எட்டப்பட வேண்டுமென எமது கோரிக்கையை முன்வைத்தோம்.

எமது நாட்டுக்கு சொந்தமான நிலப்பரப்பின் ஊடாக இந்தியாவுக்கும் ஆசிய பிராந்தியத்துக்கும் பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏற்படாத வண்ணம் எமது தீர்மானம் அமையும் என்ற உறுதிமொழியை வழங்கினோம்.

இலங்கையில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டிருந்த தருணத்தில் 4 பில்லியன் அமெரிக்க டொலர் உதவியை வழங்கி பொருளாதார நெருக்கடியில் இருந்து மீண்டெழ இந்தியா உதவியளித்தது. அதற்கு எமது நன்றியை தெரிவித்தோம். அதேபோன்று சர்வதேச நாணய நிதியத்துடன் கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகளுக்கு வழங்கிய உதவிகளுக்கும் நன்றி தெரிவித்தோம்.

சிலர் இந்த பயணத்தில் பல்வேறு இணக்கப்பாடுகள் எட்டப்பட்டுள்ளதாக செய்திகளை பரப்ப முற்பட்டனர். பலர் தமது அரசியல் நோக்கங்களுக்கு பல காரணிகளை கூறினாலும் இதற்கு அப்பாலான எந்தவொரு உடன்படிக்கையும் செய்துக்கொள்ளப்படவில்லை.

தற்போது இலங்கையில் முன்னெடுக்கப்படும் திட்டங்கள் தொடர்பிலும் அவற்றை முன்னோக்கி கொண்டுசெல்லும் திட்டங்கள் தொடர்பிலும் கலந்துரையாடினோம்.

எரிசக்தி தொடர்பில் இருநாடுகளுக்கும் இடையில் கலந்துரையாடல் நீண்டகாலம் உள்ளது. சம்பூர் சூரியஒளி மின்சார உற்பத்தி திட்டத்தை நடைமுறைப்படுத்த இணக்கப்பாடு எட்டப்பட்டது. இது ஏற்கனவே செய்துக்கொள்ளப்பட்ட உடன்படிக்கையாகும்.

காற்றாளை மின் உற்பத்தியை மேற்கொள்வது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. காற்றாளை மின்சாரத்தை சரியாக செய்தால் நாம் எமது நாட்டுக்கு மேலதிகமாக உற்பத்தியை செய்ய முடியும். அதனை இந்தியாவின் ஊடாகதான் கொண்டுசெல்ல முடியும். அதனை கேபிள் முறையின் ஊடாகதான் கொண்டுசெல்ல முடியும். இது நாட்டை காட்டிகொடுக்கும் செயல்பாடு அல்ல. இது எமது பொருளாதாரத்தை முன்னோக்கி கொண்டுசெல்லும் திட்டமாகும்.

இருநாடுகளுக்கும் இடையில் எண்ணெய் குழாய் அமைக்கும் திட்டம் தொடர்பில் பேச்சுகள் நடத்தப்பட்டது. ஐக்கிய அரபு இராச்சியத்துடன், இணைந்து இந்த திட்டத்தை முன்னெடுப்பது தொடர்பில் பேச்சுகள் நடத்தப்பட்டது. இது தொடர்பில் எவ்வித இறுதி இணக்கப்பாடுகளும் எட்டப்படவில்லை. பேச்சுகள் மாத்திரமே நடத்தப்பட்டுள்ளன.

திருகோணமலையில் 15 எண்ணெய் குதங்கள் இந்தியாவுக்கு வழங்கப்பட்டுள்ளன. 61 குதங்கள் இன்னமும் உள்ளன. அதனை கூட்டாக எவ்வாறு பயன்படுத்துவது குறித்து ஆலோசிக்கப்பட்டது. கல்வி மற்றும் தொழில்நுட்பம் தொடர்பில் சில இணக்கப்பாடுகள் எட்டப்பட்டன.

இருநாடுகளுக்கும் இடையில் ஏற்படுத்திக்கொண்ட இலங்கை – இந்திய சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தை மறுசீரமைக்க உத்தேசித்துள்ளோம். தற்போது சந்தையும் உலக வர்த்தகமும் விரிவடைந்துள்ளது. அதனால் அதில் சில மறுசீரமைப்புகளை செய்வது அவசியமாகும்.

எட்கா உடன்படிக்கை தொடர்பில் நீண்டகாலமாக பேச்சுகள் உள்ளன. இந்தப் பேச்சுகளை முன்னோக்கி கொண்டுசெல்லவே இணக்கப்பாடுகள் எட்டப்பட்டுள்ளன. எட்காவை கைச்சாத்திட்டுவிட்டதாக சில அரசியல்வாதிகள் பிரச்சாரம் செய்கின்றனர்.

எமது நாட்டின் பொருளாதாரத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தும் எந்தவொரு உடன்படிக்கையிலும் நாம் கைச்சாத்திட மாட்டோம். இருநாடுகளுக்கும் சாதகமான உடன்படிக்கைகளையே நாம் முன்மொழிகிறோம். எட்கா உடன்படிக்கையில் சில தொழில்நுட்ப ரீதியான பிரச்சினைகள் உள்ளன. அவை தொடர்பில் கலந்துரையாடல்கள் நடத்தப்படுகிறது. எட்கா தொடர்பில் எந்தவொரு இறுதி இணக்கப்பாடும் இல்லை. அடுத்தகட்ட பேச்சுகள் குறித்தும் இணக்கப்பாடுகள் எதுவும் எட்டப்படவில்லை.

## ஜனாதிபதி...

கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இங்கு மேலும் கருத்து தெரிவித்த அவர், “பொதுமக்கள் மற்றும் அரசியல்வாதிகள் உட்பட எவரும் ஜனாதிபதி நிதியத்திற்கு விண்ணப்பித்து நிதியை பெற்றுக்கொள்ள முடியும். 2019 ஆம் ஆண்டு இருதய சத்திரசிகிச்சைக்காக சுமார் 4 லட்சம் ரூபாவைப் பெற்றுக் கொண்டேன். அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்த நிதியுதவிக்கு அனுமதியளித்திருந்தார்.

ஜனாதிபதி நிதியத்தினூடாக முழுத் தொகையையும் பெற்றுக்கொள்ளவில்லை. ஏனைய செலவிற்கு தனிப்பட்ட நிதியையே பயன்படுத்தினேன்.

## அரசாங்க...

தெரிவித்தார்.

அரசாங்க அதிபரிலிருந்து மாவட்டச் செயலாளர் என பதவிப் பெயர் மாற்றம் பெற்ற இந்த சேவையானது 200 வருடங்கள் பழமையானது எனவும், எமது நாட்டை புதிய திசையில் வழிநடத்துவதில் பெரும் பங்காற்றியுள்ளதாகவும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க குறிப்பிட்டார்.

இருப்பினும், இறுதி நோக்கம் மற்றும் இலக்கு தொடர்பில் திருப்தியடையும் வகையில் தற்போதைய நிலைமை இல்லை எனத் தெரிவித்த ஜனாதிபதி, அரச நிறுவனமொன்றில் நியாயமான சேவையைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று மக்களுக்கு சிறிதும் நம்பிக்கை இல்லை என்றும், அரசு என்ற வகையில் முழுக் கட்டமைப்பும் சரிவை கண்டுள்ளதெனவும் தெரிவித்தார்.

சரிவடைந்திருக்கும், கட்டமைப்பை மீள உருவாக்க நாம் தயாரா? இல்லையா? என்பது குறித்து எம்மை நாமே கேள்வி கேட்டுக்கொள்ள வேண்டும் என்றும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க வலியுறுத்தினார்.

மக்கள் ஆணையின் எதிர்பார்ப்புகளுக்கு அரசியல் அதிகாரம் மட்டுமல்ல, அரச சேவையும் பொறுப்புக் கூற வேண்டும் என்பதையும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க குறிப்பிட்டார்.

அரச சேவையில் இருக்கின்ற கதிரை தொடர்பான பிரச்சினை தனக்கு இல்லை எனவும், கதிரையில் அமர வைப்பதற்கு யார் இருக்கின்றார்கள் என்ற பிரச்சினையே தனக்கு இருப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

உலகில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை உள்வாங்கி, அவற்றுக்கு இசைவான மாற்றங்களை செய்துகொண்டு , தமது துறைக்கு தலைமைத்துவம் வழங்கி அதனை வெற்றியை நோக்கி

வழிநடத்தும் கதிரைகள் வெற்றிடமாக காணப்படுகின்றதென கூறிய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, தனது இந்திய விஜயத்தின் போது 1500 அதிகாரிகளை இந்தியாவிற்கு அனுப்பி பயிற்சி அளிக்க இணக்கம் எட்டப்பட்டது என்றும் கூறினார்.

அடுத்த வருடத்தில் உயர்தரத்தில் சித்தியடையும் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான மாணவர்களுக்கு வெளிநாட்டில் கல்வி கற்பதற்கு அரசாங்கத்தின் புலமைப்பரிசில்களை வழங்க எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

சில நிறுவனங்கள் மற்றும் பதவிகள் எந்த அடிப்படையில் உருவாக்கப்பட்டன என்பது பிரச்சினையாக உள்ளதாகவும், எமது நாட்டின் அரச சேவையை முறையான அரச பொறிமுறையாக மாற்றும் சவால் எம்முன் காணப்படுவதால், அதற்கான புதிய வியூகம் ஒன்று அவசியப்படுவதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

எமது நாட்டில் தற்போதுள்ள அரச நிறுவனங்களை மீளாய்வு செய்வதற்கான புதிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும், அரசியல் செல்வாக்குகளை பொருட்படுத்தாமல் அவை தொடர்பிலான தீர்மானங்கள் எடுக்கப்படும் எனவும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க மேலும் குறிப்பிட்டார்.

அரச சேவையை மட்டுப்படுத்தும் எதிர்பார்ப்பு தனக்கு இல்லை எனவும், ஆனால் அரச சேவையை நடத்திச் செல்வதற்கான செலவில் பிரச்சினைகள் இருப்பதால், அரச சேவையை ஒரே நிலைப்பாட்டில் உறுதியுடன் இருந்து முறையான பொறிமுறைக்கு கொண்டு வர வேண்டும் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

இந்தப் பணிகளை நடைமுறைப்படுத்த அரசியல் அதிகார அடிப்படையில் தனது அதிகபட்ச பங்களிப்பை வழங்குவதாகவும், அரச அதிகாரிகளின் பங்களிப்பே இந்தப் பணிகளின் வெற்றிக்கு வழிவகுக்கும் என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

மக்கள் ஆணையின் 80% எதிர்பார்ப்புகளை அரச உத்தியோகத்தர்களே வெளிப்படுத்தியுள்ளனர் என்ற வகையில், அரசியல் அதிகார தரப்பின் பணிகளுக்கு அவர்கள் இணக்கம் மற்றும் அங்கீகாரத்தை வழங்கியுள்ளனர். எனவே, இவை இரண்டும் இருவேறு முரண்பாடான குழுக்கள் அல்ல என்பதையும் இரண்டும் இணக்கமான குழுக்கள் என்பதையும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

அதன்படி, அரசியல் அதிகாரம் மற்றும் பொதுச் சேவையின் எதிர்பார்ப்புக்கள் மற்றும் இலக்குகள் சமநிலையானதாக காணப்படுவதை கடந்த மக்கள் ஆணை வெளிப்படுத்தியிருப்பதால், இரு தரப்பினராலும் ஒப்புக் கொள்ளப்பட்ட பணியே எம்முன் உள்ளதெனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

மேலும், மக்களுடன் தொடர்புபடும் திட்டங்கள் மீளாய்வு செய்யப்பட வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

## ஜனாதிபதி நிதியம்...

வழங்கப்படவில்லை என முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அறிவிப்பொன்றை வெளியிட்டு அவர் இவ்விடய த்தை குறிப்பிட்டுள்ளார். மேல் மாகாண முன் னாள் முதலமைச்சர் இசுறு தேவப்பிரியவுக்கு நவலோக வைத்தியசாலையில் இருதய சத்திரசிகிச்சையை மேற்கொள்வதற்காக 10 இலட்சம் ரூபாவும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் யூ. சரத் கொங்கஹாவுக்கு லங்கா தனியார் வைத்தியசாலையில் இருதய சத்திரசிகிச்சைக்காக 5 இலட்சம் ரூபாவும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சீ. முத்துகுமாரணவுக்கு விஷ ன்கெயார் நிறுவனத்தில் செவி புலன் கருவிகளை வாங்க 4 இலட்சம் ரூபாய் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஏ.ஜகத்குமாருக்கு ஆசிரி தனியார் வைத்தியசாலையில் இருதய சத்திரசிகிச்சை செய்வதற்கு 10 இலட்சம் ரூபாவும் வழங்கப்பட்டதாக முன்னாள் ஜனாதிபதி குறிப்பிடுகின்றார். இது தவிர, நடிகை மாலனி பொன்சேகாவுக்கு இந்தியாவில் உள்ள அப்பல்லோ தனியார் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சென்னையில் உள்ள இலங்கை துணைத் தூ தரகம் மூலம் 50 இலட்சம் ரூபாய் மருத்துவ உதவித் தொகை வழங்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார். கலை மற்றும் சினிமா துறையில் அவர் கொண்டிருந்த சிறப்புத் திறமையின் அடிப்படையில் மாலனி பொன்சேகாவுக்கு இந்த மருத்துவ உதவித் தொகை வழங்கப்பட்டதாகவும், கடந்த இரண்டு வருடங்களில் கலைத்துறையைச் சேர்ந்த இதேபோன்ற பல கலைஞர்களுக்கு மருத்துவ உதவித் தொகைகள் வழங்கப்பட்டதாகவும் ரணில் கூறியுள்ளார்.

இலங்கை-இந்திய கூட்டறிக்கையில்

# 13ஆவது திருத்தத்தை உள்ளிட அவசியம் இல்லை




(சுப்ரமணியம் நிஷாந்தன்)

இலங்கையின் அரசியலமைப்பில் உள்ள ஒரு விடயத்தை ஜனாதிபதியின் இந்திய பயணம் தொடர்பிலான கூட்டறிக்கையில் ஏன் உள்ளடக்க வேண்டும்? அதற்கான தேவைகள் எதுவும் எழவில்லை. அது எமது அரசியலமைப்பில் உள்ள ஒரு பகுதியாகும். அதன் பிரகாரம் அடுத்த ஆண்டு மாகாண சபைத் தேர்தல் நடைபெறும் என வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் இந்திய பயணம் தொடர்பில் விளக்கமளிக்கும் விசேட ஊடகவியலாளர் சந்திப்பொன்று அரசாங்க தகவல் திணைக்களத்தில் வெள்ளிக்கிழமை (20) நடைபெற்றது.

இதன்போது, 13ஆவது திருத்தச்சட்டம் மற்றும் மாகாண சபை தேர்தல் தொடர்பில் இந்தப் பயணத்தில் கலந்துரையாடப்பட்டதா, கடந்த காலத்தில் ஜனாதிபதிகள் மேற்கொண்ட பயணம் தொடர்பான கூட்டறிக்கைகளில் 13ஆவது திருத்தம் தொடர்பில் தகவல் குறிப்பிடப்பட்டிருக்கும். இம்முறை ஏன் குறிப்பிடவில்லை? நீங்கள் அதனை குறிப்பிட வேண்டாம் என இந்தியாவிடம் கோரியதாக தெரிவிக்கப்படுகிறதே என ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதில் அளித்த அமைச்சர், "நாம் எமது நாட்டின் அரசியலமைப்பின் பிரகாரமே செயல்படுகிறோம். எமது அரசியலமைப்பில் 13ஆவது திருத்தச்சட்டம் உள்ளது. இது தொடர்பில் புதிதாக பேசுவதற்கும் கூட்டு அறிக்கையில் உள்ளடக்குவதற்கும் அவசியமில்லை.

அடுத்தாண்டு ஆரம்பத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடைபெறும். அதற்குத் தேவையான பின்புலத்தை உருவாக்கி வருகிறோம். பழைய வேட்புமனுக்கள் நீக்கப்பட்டு புதிய வேட்புமனு கோரும் சட்ட ரீதியான திருத்தங்களை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளோம். அதன் பின்னர் மாகாண சபை தேர்தல் நடைபெறும். எல்லை நிர்ணயம் தொடர்பில் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளது. அது தொடர்பில் நாடாளுமன்றத்தில் சட்டத் திருத்தங்கள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. அதன் பின்னர் தேர்தல் நடைபெறும். எனவே, 13ஆவது திருத்தச்சட்டத்தை மீண்டும் கூட்டறிக்கையில் உள்ளடக்க வேண்டிய அவசியமில்லை என்றார்.

# நெவில் சில்வாவிற்கு விளக்கமறியல் நீடிப்பு

கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவின் முன்னாள் பணிப்பாளர் நெவில் டி சில்வா எதிர்வரும் 30 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இரத்தினபுரி நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட அவரை எதிர்வரும் 30 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நெவில் சில்வா கடந்த 2023 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 02 ஆம் திகதி, முறைப்பாடு ஒன்று தொடர்பில் பக்கச்சார்பாக செயற்பட்டு இரத்தினபுரி குருவிட்ட பிரதேசத்தில் வசிக்கும் வர்த்தகர் ஒருவரிடமிருந்து 14 கோடி ரூபா பெறுமதியான பொருட்களைப் பலாத்காரமாகப் பெற்றுள்ளதாகக் குற்றப் புலனாய்வு திணைக்களத்திற்கு முறைப்பாடு ஒன்று கிடைத்திருந்தது.

இதனையடுத்து, குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், நெவில் சில்வா கடந்த 09 ஆம் திகதி கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# முழக்கம் மஜீத்தின் மறைவுக்கு எச்.எம்.எம்.ஹரிஸ் அனுதாபம்



(நூருல் ஹுதா உமர்)

சமூகத்தின் மூத்த போராளியாக வாழ்ந்து மறைந்த அப்துல் மஜீத்தின் சமூகப்பணிகள் காலத்தால் அழியாதவை என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தவிசாளர் ஏ.எல்.அப்துல் மஜீத்தின் மறைவையொட்டி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் முன்னாள் பிரதித்தலைவர் சட்டத்தரணி எச்.எம். எம். ஹரீஸ் தெரிவித்துள்ளார். அவரது அனுதாப செய்தியில் மேலும்,

முஸ்லிம் தேசியத்தின் விடுதலை போராளி ஏ.எல். அப்துல் மஜீத் காலமான செய்தியறிந்து துயருற்றுள்ளேன். 2001 இல் நான் பாராளுமன்ற தேர்தலில் களமிறங்கிய நாள் முதல் நான் சந்தித்த அத்தனை தேர்தல்களிலும் எனது வெற்றிக்காக முழுமையாக உழைத்த அவர், பிரசார நடவடிக்கைகளிலும் முழு ஈடுபாட்டுடன் எனக்காக உழைத்தார். நல்ல ஆலோசகராக, முஸ்லிம் சமூகத்தின் அபிலாசைகளை எங்களுக்குள் செலுத்திய அவரின் இழப்பு எனது சொந்த சகோதரனை இழந்தது போன்று பெருந்துயரத்தை என்னுள் தந்துள்ளது.

சகோதரர் முழக்கம் மஜீத் காலமாகிய செய்தி ஆழ்ந்த கவலையை என்னுள் ஆட்கொண்டுள்ளது. அன்னாரின் நல்லமல்கள் எல்லாம் வல்ல அல்லாஹ் பொருந்திக்கொண்டு உயரிய ஜன்னத்தை அவருக்கு வழங்கிடவும், அவரின் இழப்பால் துயருற்ற அவரின் குடும்பம், நண்பர்கள், நலன்விரும்பிகளுக்கு மன நிம்மதியை வழங்கிடவும் பிரார்த்திக்கிறேன் என்று தெரிவித்துள்ளார்.

## உங்கள் ராசிபலன் எப்படி

குரோதி வருடம் மார்கழி மாதம் 07ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை

**மேஷம்** இன்று பயணங்கள் கலந்து காணப்படும். எந்தச் செயலையும் செய்வதற்கு முன் சிறப்பாக திட்டமிடவும்.

**ரிஷபம்** இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக இருக்காது. எப்பொழுதும் உறுதியான மனநிலையுடன் இருங்கள்.

**மிதுனம்** இன்றைய நாள் சிறப்பாக இருக்கும். புதியவர்களை இன்று சந்தித்து அவர்களோடு நட்பு கொள்ளுங்கள்.

**கடகம்** எந்த விஷயத்தையும் இலகுவாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

**சிம்மம்** இன்று அவ்வளவு சிறப்பான நாளாக இருக்காது. உங்கள் தன்னம்பிக்கையை அதிகரிக்க வேண்டும்.

**கன்னி** இன்று சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க நேரும்.

**துலாம்** இன்றைய தினம் செழிப்பான நாளாக இருக்கும். மகிழ்ச்சியான மனநிலை காணப்படும்.

**விருச்சிகம்** இன்று மிகவும் சிறப்பான நாள். உங்கள் விருப்பங்கள் அனைத்தும் நிறைவேறும்.

**தனுசு** நீங்கள் எந்த விஷயத்தையும் சகஜமாக அணுக வேண்டும். பதட்டப் படுவதை தவிர்க்க வேண்டும்.

**மகரம்** இன்றைய நாள் முழு அளவு சாதகத்தை அளிக்காது. நீங்கள் செய்யும் செயலில் கவனம் தேவை.

**கும்பம்** இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதற்கு உகந்த நாள். அவை உங்களுக்கு சாதமாக இருக்கும்.

**மீனம்** உங்கள் அனைத்து முயற்சிகளிலும் வெற்றி கிடைக்கும். உங்கள் திறமையை நீங்கள் உணரும் நாள்.

## இன்றைய பஞ்சாங்கம்

**திதி:** இன்று மாலை 04:50 வரை சப்தமி பின்பு அஷ்டமி.

**நட்சத்திரம்:** இன்று காலை 08:56 வரை பூரம் பின்பு உத்திரம்.

**யோகம்:** சித்த,அமிர்த

**சந்திராஷ்டமம்:** திருவோணம்

**சூலம்:** மேற்கு.

**இராகு காலம்:** 04:30 PM முதல் 06:00 PM வரை.

**குளிகை:** 03:00 PM முதல் 04:30 PM வரை.

**எமகண்டம்:** 12:00 PM முதல் 01:30 PM வரை.

# தனியார் பட்டப்படிப்பு நிறுவனங்களை ஒழுங்குபடுத்த முறையான திட்டம் தேவை



தனியார் பட்டப்படிப்பு நிறுவனங்களை ஒழுங்குபடுத்துவதற்கான முறையான வேலைத்திட்டம் தேவை என பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சுடன் இணைந்த நிறுவனங்களான ஆசிரியர் அபிவிருத்தி நிலையம், தேசிய கல்வி ஆணைக்குழு மற்றும் அரச சார்பற்ற உயர்கல்வி பிரிவு ஆகிய நிறுவனங்களின் சிரேஷ்ட அதிகாரிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே பிரதமர் இவ்விடயத்தை தெரிவித்தார். பாடசாலைகளுக்கு இடையிலான இடைவெளியை இல்லாமலாக்க வேண்டியதன் அவசியத்தை சுட்டிக்காட்டிய பிரதமர், அதை தமது தொழிலையும் தாண்டிய ஒரு தேசிய பொறுப்பாகக் கருதி செயற்படுமாறு அதிகாரிகளைக் கேட்டுக் கொண்டார்.

கன்னங்கரா அவர்களின் கல்விச் சீர்திருத்தங்களினால் ஏற்பட்ட கல்விப் புரட்சிக்கு அப்பால் விரிவான கல்வி மாற்றமொன்று தேவைப்படுவதாகவும், அதனை நிறைவேற்றுவதற்கு தற்போதைய அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்படுவதாகவும் பிரதமர் தெரிவித்தார். தேசிய கல்வி முகாமைத்துவ முறைமையின் அவசியத்தை சுட்டிக்காட்டிய பிரதமர், எதிர்கால சந்ததியினரை அனைத்து துறைகளையும் உள்ளடக்கிய நவீன தொழில்நுட்ப உலகிற்கு ஏற்றவாறு மாற்றியமைக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

மோசடியான பட்டப்படிப்பு நிறுவனங்களிடமிருந்து பிள்ளைகளைப் பாதுகாத்தல், அதற்கான சட்டக் கட்டமைப்பு மற்றும் அரச சார்பற்ற உயர்கல்வி நிறுவனங்களின் தரம் குறித்தும் இங்கு கவனம் செலுத்தப்பட்டது.

# நாட்டில் யாசகர்கள் தொகை கணக்கெடுப்பு



நாட்டில் யாசகர்கள் மற்றும் வீடுகள் இன்றி வீதிகளில் வசிக்கும் மக்கள் தொடர்பிலும் கணக்கெடுப்பு நடத்தப்பட்டதாக சனத் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சனத்தொகை மற்றும் வீடமைப்புக் கணக்கெடுப்பின் செயற்பாடுகளுடன் இணைந்ததாக இந்தத் தரவுகள் சேகரிக்கப்பட்டதாகவும் அத்திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அனோஜா செனவிரத்ன தெரிவித்தார். இந்த மக்கள் தொகை கணக்கெடுப்பு அடுத்த 10 ஆண்டுகளுக்கு தேசிய திட்டங்களை தயாரிப்பதற்கு தேவையான தகவல்களை வழங்கும்.

மக்கள்தொகை கணக்கெடுப்பிற்கான தகவல்களை சேகரிக்க கணக்கெடுப்பாளர் வீட்டிற்கு வரவிட்டால், 1901 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு அழைத்து அறியத்தருமாறு பணிப்பாளர் நாயகம் கோரிக்கை விடுத்தார்.

காலி மார்வெல்ஸ் உரிமையாளர்

# பிணையில் விடுதலை

கண்டி பல்லேகெலவில் நடைபெற்ற லங்கா ரி-10 கிரிக்கெட் போட்டித் தொடரின் போது மேற்கிந்திய தீவுகள் வீரர் ஒருவருக்கு பணத்திற்காகப் ஆட்ட நிர்ணயத்தில் ஈடுபட கோரிய சந்தேகத்தின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த காலி மார்வெல்ஸ் அணியின் உரிமையாளர் பிரேம் தக்கரை பிணையில் விடுவிக்க கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இது தொடர்பான முறைப்பாடு கொழும்பு பிரதான நீதவான் திலின கமகே முன்னிலையில் வெள்ளிக்கிழமை (20) அழைக்கப்பட்டது. சந்தேகநபர் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் தமது கட்சிக்காரரைப் பிணையில் விடுவிக்குமாறு கோரிக்கை விடுத்தனர். அதற்குப் பதிலளித்த அரச தரப்பு சிரேஷ்ட சட்டத்தரணி உதார கருணாதிலக்க, சந்தேகநபரை இலங்கையில் தடுத்து வைக்க நீதிமன்றம் உரிய உத்தரவை பிறப்பிக்க வேண்டும் என்றார். இதன்படி, குறித்த சந்தேகநபரை 5 இலட்சம் ரூபா ரொக்கப் பிணையிலும், தலா 5 மில்லியன் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளிலும் விடுவிக்குமாறு உத்தரவிடப்பட்டதுடன், சந்தேகநபர் வெளிநாடு செல்வதைத் தடைசெய்து உத்தரவும் பிறப்பிக்கப்பட்டது. மேலும், சந்தேகநபர் ஒவ்வொரு புதன்கிழமையும் விளையாட்டு ஊழல் விசாரணைப் பொலிஸ் பிரிவில் ஆஜராக வேண்டும் என மற்றுமொரு பிணை நிபந்தனை விதிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து, ஜனவரி 27ம் திகதி மீண்டும் முறைப்பாட்டை அழைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

# அலுவலக ஊழியர் செய்த மோசடிக்காக எனக்கு நீதிமன்றம் செல்ல ஏற்பட்டது



முன்னாள் எம்.பி திலீபன் விளக்கம்

(கி.வசந்தன்)

எனது பெயரை பயன்படுத்தி எனது அலுவலகத்தில் இருந்தவர் செய்த மோசடிக்காக நான் நீதிமன்றம் செல்ல வேண்டி ஏற்பட்டுள்ளது என வன்னி மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான கு.திலீபன் தெரிவித்துள்ளார்.

வன்னி மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் வன்னி மாவட்ட முன்னாள் அமைப்பாளருமான கு.திலீபன் மற்றும் அவரது செயலாளர் ஆகியோர் வவுனியா பொலிஸாரால் (20) கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முன்னிலைப்படுத்திய பின் பிணையில் விடுதலை செய்யப்பட்டார். இதன் பின்னர் வவுனியாவில் உள்ள அவரது அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை (20) இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நான் பணமோசடி செய்ததாகவும், கைது செய்யப்பட்டதாகவும் பல சமூக ஊடகங்களிலும், ஊடகங்களிலும் செய்திகள் வெளியாகின. நான் அபிவிருத்திக் குழுத் தலைவராக இருந்த போது எனது அலுவலகத்திற்கு பலர் பல தேவைகள் கருதி வருவது வழமை. இதன்போது சில அரசாங்க அதிகாரிகளுக்கு அதனை சிபார்சு செய்து அனுப்புவது வழமை. ஆனால் முகவர்களாக சிலர் செயற்பட்டு எனது பெயரைப் பயன்படுத்தி பணம் பெற்றுள்ளனர். அவ்வாறானதொரு சம்பவமே நடந்தது. எனது அலுவலகத்தில் இச் சம்பவம் இடம்பெற்றதால் நான் அதற்கு பொறுப்பு சொல்ல வேண்டியிருந்தது. இதனால் நீதிமன்றம் சென்று எனது தரப்பு நியாயங்களை நான் முன்வைத்தேன்.

அந்தப் பணம் எனது வங்கி இலக்கத்திற்கு வரவுமில்லை. நான் கை நீட்டி வாங்கவும் இல்லை. அரசியல் காழ்புணர்ச்சி கொண்டவர்கள் இதனை வைத்து பல கட்டுக் கதைகளை கட்டுகிறார்கள். நான் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த போது அரச காணிகளை மக்களுக்கு வழங்கியுள்ளேன்.

அதுவும் அடிமட்ட மக்களுக்கே அதனை வழங்கியுள்ளேன். காணி மாபியாக்களுக்கு எதிராக நானும் வழக்கு தாக்கல் செய்யவுள்ளேன். அரச காணிகளை பிடித்து கள்ளமாக உறுதிகளை எழுதி வைத்துள்ளார்கள். அதனை மீட்டு நான் மக்களுக்கு வழங்கினேன். அப்படியான பலர் குழுவாக எனக்கு எதிராக சதி செய்து வருகிறார்கள். நான் சொத்து சேர்த்துள்ளதாகவும் பல கதைகளை சொல்கிறார்கள். அவை அனைத்தும் பொய்.

முகநூலில் வீரம் பேசுபர்களுக்கு எதிராகவும் நிகழ்நிலை சட்டத்தை மையமாக கொண்டு வழக்கு தாக்கல் செய்யவுள்ளேன். இளைஞர்கள், அரச உத்தியோகத்தர்கள், மக்கள் என இணைந்து நாம் வன்னியில் புதிய சக்தியாக எழுச்சி பெறவுள்ள நிலையில், அதனை முடக்குவதற்காக இந்த வேலைகள் இடம்பெறுகிறது.

எனது அலுவலகத்தில் இருந்த ஒருவர் செய்த மோசடிக்காக, அந்த அலுவலகத்திற்கு பொறுப்பானவர் நான் என்ற அடிப்படையில் தான் நீதிமன்றம் போக வேண்டியுள்ளது. நான் அவ்வாறு சொத்து குவித்திருந்தால் அதனை நிரூபித்தால அரசியலில் இருந்து ஒதுங்குவேன் எனத் தெரிவித்தார்.

# ஒருவனின் நோக்கில்...

No. 752/5,Dr Danister De Silva Mawatha,
Second Floor, Bellatrix Building, Colombo 09
0114664152 / editorial@oruvan.com

## அகதிகளை கையாளுவதில் சர்வதேச கவனம் தேவை

சர்வதேச அரசியலில், அகதிகள் பிரச்சினைகள் பிரதான பேசு பொருளாக மாறி வருகிறது. உள்நாட்டு யுத்தங்களால் இடம்பெறும் இடப்பெயர்வுகள், அமைதியான நாடுகளையும் விடுவதாக இல்லை.

ஐரோப்பாவின் அகன்று விரிந்த பூமியை அதிகளவு நிரப்பியுள்ளதும் இந்த அகதிகள்தான். ஆபிரிக்க, ஆசிய மற்றும் இதர தேசங்களில் நிலவும் உள்நாட்டு மற்றும் இருதரப்பு யுத்தங்களால், மானிட அவலம் அதிகரித்து வருவதாக கவலை தெரிவிக்கப்படுகிறது. உயிரிழப்புக்கள், அங்கவீனங்கள் இன்னும் அகதிகள் என்றவாறு இந்த அவலங்கள் நீள்வது மட்டுமன்றி நிலைக்கவும் செய்கிறது. இதைவிடக் கவலையளிக்கிறது, பெற்றோர்களை இழந்து நடுத்தெருவில் நிற்கும் சிறுவர்களின் பரிதாபங்கள்.

எதிர்காலத்தை தொலைத்தவர்களாக வெறுங்கைகளுடன் அலைக்கழியும் இச்சிறுவர்களைப் பொறுப்பேற்பது யார்? அறிவியல் மற்றும் நாகரீகத்தில் உச்சத்தைத் தொட்டுள்ள இன்றைய உலகம் இந்தக் கேள்விக்குப் பதில் சொல்வதாக இல்லை. சர்வதேச அளவில் எத்தனையோ அமைப்புக்கள் இருந்தும் இவ்வாறான மானிட அவலங்களை ஒழிப்பதற்கு உழைக்க முடியாதுள்ளமையும் கவலையே!

ஏதோவொரு தேவைக்காக ஏற்படும் யுத்தங்கள் ஏன்? இத்தகைய அவலங்களை ஏற்படுத்துகின்றன. போரில் ஈடுபட்டுள்ள தரப்புக்களைத் தாண்டி, பொதுமக்கள் குறிவைக்கப்படுவதாலேயே அகதிகள் உருவாவதாக அண்மைக்கால ஆய்வுகளில் தெரிய வந்துள்ளன. சிவிலியன்கள் அடைக்கலம் புகுந்துள்ள முகாம்களுக்கு குண்டு வீசுவது, மற்றொரு தரப்பை பழிவாங்கும் நோக்கில் படையெடுப்பது இன்னும் சந்தேகத்தின் பேரில் கைது செய்தல் போன்ற செயற்பாடுகள்தான், யுத்தத்தின் விளைவுகளைக் கொடுமைப்படுத்துகின்றன.

இவைகள்தான், அகதிகள் சமூகம் என்றொரு அலைக்கழியும் மானிட வர்க்கத்தையும் உருவாக்கி வைக்கிறது. இவையின்றி, பகைத் தரப்புக்கள் அல்லது தேவையான தரப்பினர் மாத்திரம் யுத்தத்தில் ஈடுபட்டால், அதாவது பழிவாங்கும் போர்கள் தவிர்க்கப்பட்டால்தான், அகதிகள் உருவாவதைத் தடுக்க முடியும்.

எமது நாட்டின் முள்ளிவாய்க்கால், கடற்பரப்பில் மியன்மார் அகதிகளை ஏற்றி வந்த படகு கரை ஒதுங்கிய சம்பவமும் கவலைக்குரியதும் கற்றுக்கொள்ள வேண்டியதுதான். இராணுவ ஆட்சியின் பிடிக்குள் சிக்கிய சமூகத்துக்கான போராட்டம் ஒடுக்கப்படும் கொடூரத்தை இவர்களது வருகை வெளிப்படுத்துகிறது. அபயம் தேடுமளவுக்கு அங்கு இடம் பெறும் இராணுவ நடவடிக்கைகள் இவர்களை அகதிகளாக்கியுள்ளது.

இதுபோன்று பலர், அலைக்கழியும் அவலத்தை ஏற்படுத்தியுள்ள அகதிகள் பிரச்சினைகளுக்கு தீர்வு தேடும் தேவைகள் உணரப்பட்டுள்ளன. போர்களை நிறுத்துவதென்பது சாத்தியமற்றுப்போன சங்கதி. எனவேதான், அகதிகளைக் கையாள்வதற்கான பொறிமுறைகள் அவசியப்பட்டுள்ளன. நமது நாடும் அகதிகளால் அவப்பெயரைச் சம்பாதித்ததையும் நாம் மறந்துவிட முடியாது. ஏதிலிகளாக வெளிநாடுகளுக்குப் புலம்பெயர்ந்த இவர்கள், டயஸ்போரா" என்ற அடைமொழியுடன் அரசியலில் செல்வாக்கும் செலுத்துகின்றனர்.இதனால்தான், அரசியல் நோக்கங்களுக்காகப் பாவிக்கப்படாதவாறு அகதிகள் கையாளப்பட வேண்டும் என்கிறோம்.

மத்தியகிழக்கில் இன்று விரிவடையும் பிராந்தியப் பதற்றமும் இதனால் தலையெடுக்கும் அகதிகள் நெருக்கடிகளும் சர்வதேசத்துக்கு சவாலாகவே அமையப்போகின்றன. ஆட்கடத்தல், போதைவஸ்து வியாபாரம் இன்னும் சட்டவிரோதக் குடியேற்றங்கள் என, இதன் விளைவுகள் எல்லைகள் கடக்கலாம். எனவே, பிற நாட்டுப் போர்களால், தமக்கென்ன தீங்கு என்று கருதி எந்த நாடுகளும் ஒதுங்கி நிற்கவோ அல்லது ஓய்வெடுக்கவோ முடியாது. ஆகக்குறைந்தது சட்டவிரோதக் குடியேறிகளைத் தடுக்க எல்லைக் காவல்களையும், கண்காணிப்புக்களையும் ஏற்படுத்தும் செலவாவது ஏற்படவே போகின்றன. இதைவிடவும், நடுத்தெருவில் நிர்க்கதியாகியுள்ள சிறுவர்களை போதைக்கடத்தல் வியாபாரத்துக்குப் பயன்படுத்தும் விஷமிகளின் ஆபத்தாவது ஏற்படவே செய்யும். இதனால்தான், அகதிகளைக் கையாள்வதில், சர்வதேசத்துக்கு கவனம் தேவை என்கிறோம்.

மீளவும் நாம் முள்ளிவாய்க்காலில் சிக்கி இலங்கை கடற்படையினரால் கரையேற்றப்பட்ட மியன்மார் படகின் பக்கம் வருவோம். தப்பிப் பிழைக்க அபயம் தேடிவந்த இவர்களின் படகு ஒன்று உடைந்ததால், அதிலிருந்தோரையும் ஏற்றியவாறுதான் இப்படகு வந்துள்ளது.மொழிப் பிரச்சினைகள் குறுக்கிடுவதால், விசாரணைகளிலும் தடங்கல் ஏற்பட்டுள்ளன.கொழும்பிலிலுள்ள மியன்மார் தூதரகத்திலிருந்து மொழி பெயர்ப்பாளர்கள் திருமலைக்கு விரைந்துள்ளதாகவும் தெரிய வருகிறது. நடத்தப்பட்ட மருத்துவச் சோதனைகள், 16 நாட்களாக இவர்கள் எதையும் உட்கொள்ளவில்லை எனத் தெரிவிக்கின்றன. இவர்களுடன் வந்தவர்கள் சிலர் உயிரிழந்திருப்பதும் மானிடப் பேரிடராகவே பார்க்கப்படுகிறது. அதிலும் குழந்தைகளின் உயிர்களும் காவு கொள்ளப்பட்டிருப்பதும், போரில் சம்பந்தப்படாத சிவிலியன் இழப்புக் களுக்குள்ளேயே சேர்கின்றன.

மத்தியகிழக்கு மோதல்களால் முஸ்லிம்கள் மத்தியில் ஏற்பட்டுவரும் இழப்புக்களைத் தடுக்க அரபுலீக் அல்லது இஸ்லாமிய நாடுகளின் ஒன்றியம் எதையும் செய்யவில்லை.

இந்நிலையில், ரோஹிங்கிய முஸ்லிம்களைக் கருத்திலெடுப்பது யாரென்ற விரக்தியில்தான், மியன்மார் முஸ்லிம்கள் உள்ளனர். இத்தனைக்கும் உலகையே இயங்க வைக்கும் எரிபொருள் வளத்தில் ஐம்பது வீதத்துக்கும் மேலானவை மத்திய கிழக்கிலேயே உள்ளன. ஒன்றுபட்டுச் செயற்படுவதற்கான இணக்கப்பாடுகளை எட்டுமளவுக்கு இந்நாடுகளிடையே ஒருமைப்பாடு இல்லாதுள்ளது. காரணங்களைக் கண்டறிவதுதான் கடினம். ஒன்று மட்டுமே உண்மை. எல்லோருக்கும் பொதுவான பிரித்தாளும் தந்திரங்கள் உள்ளவரையும், அதிகார மோகத்திலுள்ளோர் இதை உணரும் வரைக்கும் எந்தப்பலமும் பலமிழக்கவே செய்யும்.

# ஆடை மாற்றும் அநுர அரசாங்கம்!



கனுஷியா புஷ்பகுமார்

உலகளாவிய ரீதியில் தொழில்நுட்பத்தில் சிறந்து விளங்கும் நாடான இந்தியா குறித்த தொழில்நுட்ப- பொருளாதாரத்தை இலங்கையிலும் வியாபிக்க பல ஆண்டுகளாக வகுக்கும் திட்டமே எட்கா ஒப்பந்தம்.

எட்கா ஒப்பந்தமானது மைத்திரி மற்றும் ரணில் அரசாங்கத்தில் கொண்டு வரப்பட்டது.

இந்த ஒப்பந்தத்தை ஆரம்பம் முதலே பிற்போக்கு பொருளாதார வர்த்தக உடன்படிக்கை என பொருளாதார ஆய்வாளர்கள் பலர் அடையாளப்படுத்தி வருகின்றனர்.

இலங்கை பொருளாதாரத்தில் இந்திய தொழில்நுட்பங்களை வியாபிப்பது எட்காவின் நோக்கமாகும்.

இந்த ஒப்பந்தத்தை இலங்கையில் வியாபிப்பதன் மூலம் நூறு வீதமான அனுகூலங்கள் கிடைக்குமா எனக் கேட்டால் நிச்சயமாக இல்லை. இந்தியாவுடன் ஒப்பிடும் போது மிகச் சிறிய நாடான இலங்கை, இந்த ஒப்பந்தத்தின் மூலம் இந்தியாவில் தங்கியிருக்கும் நிலை அதிகரிக்கும் என்பதே இத்தனை காலமாக இதனை அமுல்படுத்தாமலிருக்க காரணமாகும்.

2016ஆம் ஆண்டில் எட்கா ஒப்பந்தத்தை இலங்கையில் அமுல்படுத்த முயற்சி செய்த ரணிலுக்கு, ஏனையவர்களின் எதிர்ப்புகளின் காரணமாக அதனை அமுல்படுத்த முடியாமல் போனது.

எட்கா ஒப்பந்தம் இந்தியாவிற்கு மாத்திரமே நன்மையளிப்பதாகவும், இலங்கையின் பொருளாதார எதிர்காலத்தை அது முடக்கும், இலங்கை தொழிலாளர்களின் வேலை வாய்ப்புக்களை இது அழிக்கும் என்பதே அரசியல் அவதானிகளின் நிலைப்பாடாக இருந்தது.

அன்று ரணில் முன்வைத்த இந்த யோசனையை கடுமையாக எதிர்த்தவர்களுள் தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார திஸ ாநாயக்க முக்கியமானவர்.

எட்கா ஒப்பந்தத்தை அன்று நாடாளுமன்றத்தில் கடுமையாக எதிர்த்தது ஜே.வி.பி. சிங்கப்பூருடன் இலங்கை ஒப்பந்தம் செய்து கொண்டிருப்பதால், இலங்கையை காதால் இழுத்துச் சென்று எட்கா ஒப்பந்தத்தில் கையொப்பமிட வைக்க முடியும் என ஜே.வி.பி. உறுப்பினரும் தற்போதைய அரசாங்கத்தின் வர்த்தக, வாணிப, உணவு பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அமைச்சருமான வசந்த சமரசிங்க அன்று தெரிவித்திருந்தார்.

ஆகவே அந்த அளவிற்கு எட்கா ஒப்பந்தத்தை மிகக் கடுமையாக எதிர்த்த ஜேவிபியின் முகத்தோற்றம் கொண்ட தேசிய மக்கள சக்தி, ஆட்சி பீடம் ஏறியவுடன் எட்காவிற்கு சார்பாக மாறியது எப்படி என்ற ஒரு கேள்வி எழுகின்றது. அதிர்ச்சியாகவுள்ளது.

1987ஆம் ஆண்டில் இந்திய-இலங்கை ஒப்பந்தத்தையும் இதேபோல தான் ஜேவிபி எதிர்த்திருந்தது.

இப் பின்னணியில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, ஆட்சிக்கு வந்த பின்னர் தனது முதலாவது வெளிநாட்டு பயணமாக இந்தியாவிற்கு இரண்டு நாள் பயணத்தை மேற்கொண்டிருந்தார்.

இதன்போது எட்கா ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவது தொடர்பிலான பேச்சு வார்த்தைகள் இடம்பெற்றிருக்கலாம் என்ற விடயம் பேசு பொருளாக மாறவே நாட்டிற்கு பாதகமான எந்தவொரு ஒப்பந்தத்திலும் கைச்சாத்திடப் போவதில்லை என்ற ஒரு உறுதியை வெளியுறவு அமைச்சர் விஜித ஹேரத் வழங்கியிருந்தார்.

எனினும், அரசாங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் மத்திய வங்கியின் ஆளுநர், எட்கா ஒப்பந்தத்தால் எந்த வித ஆபத்தும் நாட்டுக்கு இல்லை என வியாக்கியாணம் செய்கிறார். ஆக, இதனை அரசாங்கத்தின் கூற்றாக நாம் எடுத்துக்கொள்ள முடியும்.

கோட்டாபய ஆட்சியில் கவிழ்க்கப்பட்ட இலங்கைத்தீவின் பொருளாதாரத்தை கரை சேர்க்க ஆளின்றி இன்னமும் தத்தளித்து வரும் சூழலில் எட்கா ஒப்பந்தத்தை கைச்சாத்திடுவதன் மூலம் இந்தியா இலங்கை பொருளாதாரத்தை மேலும் வலுவிழக்கச் செய்யும் என்பதே அரசியல் ஆய்வாளர்களின் வாதம்.



இலங்கையில் தொழில்நுட்பத்தை வளப்படுத்துதல் எனும் பெயரில், இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு பறிக்கப்படுவதோடு, இந்தியாவின் ஆதிக்கம் அதிகரிப்பதற்கான நுழைவாயிலாக எட்கா கருதப்படுகிறது.

தேசிய மக்கள் சக்திக்கு மாபெரும் மக்கள் ஆணை கிடைக்க பாரிய உறுதுணையாக அமைந்தமைக்குக் காரணம் ஜனாதிபதித் தேர்தலில் அவர்கள் முன்வைத்த விஞ்ஞாபனமே.

ஆட்சிக்கு வந்தவுடன் இறக்குமதி பொருளாதாரம் நிறுத்தப்படும் என தேர்தல் விஞ்ஞாபனத்தில் வாக்குறுதி வழங்கப்பட்டிருந்தாலும் இந்தியாவுடனான இந்த எட்கா ஒப்பந்தம், அந்த தேர்தல் விஞ்ஞாபனத்தை மீறும் ஒரு விடயமாக அவதானிக்கப்படுகிறது.

"அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தம் தொடர்பில் நாட்டு சிங்கள மக்களுக்கு ஒன்றையும், இந்தியாவுக்கு பிறிதொன்றையும் ஜனாதிபதி குறிப்பிடுகிறார்" என சரத் வீரசேகர குற்றம் சுமத்தியிருந்தார்.

ஆளும் வர்க்கமான இந்தியா, இந்த ஒப்பந்தத்தின் மூலம் இலங்கையிடமிருந்து பாரிய நன்மைகளை எதிர்ப்பார்த்துள்ளது.



**ரணில் ஆட்சியில் கடுமையாக எதிர்த்த எட்கா ஒப்பந்தத்தை இன்று நடைமுறைப்படுத்த ஆயிரம் காரண - காரியங்களை கூறிச் சமாதானப்படுத்தும் அநுர**

அநுர குமார திஸாநாயக்க ஜனாதிபதியாக பதவியேற்ற சந்தர்ப்பத்தில் இருந்து சர்வதேச நாடுகளுடனான நகர்வுகள் குறித்து அதிக அவதானம் செலுத்தப்பட்டு வருகிறது.

இந்தியா மற்றும் சீனா ஆகிய இரு நாடுகளிடையே இலங்கையின் 10ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் நகர்வு எதுவாக இருக்கும் என்பது தொடர்பில் சர்வதேச நாடுகள் நிதானமாக அவதானத்து வருகின்றன.

ஆரம்பத்திலிருந்தே கம்யூனிஸ்ட் கொள்கைகளுடன் அரசியல் வியூகங்களை வகுத்து வரும் அநுர தரப்பின் அடுத்த நகர்வு சீனாவுடன் அமையும் என்ற பாரிய எதிர்ப்பார்ப்புகளுக்கு மத்தியிலேயே அநுரவின் முதல் வெளிநாட்டு பயணமாக இந்தியா அமைந்திருந்தது.

இந்த பயணத்திற்கு பின்னரே எட்கா மீள பேசுபொருளாக மாறியுள்ளது.

புதிய அரசாங்கமானது நாட்டிற்கு வருமானத்தை ஈட்டுவதில் அதிக ஆர்வம் செலுத்துவது வரவேற்கத்தக்கதாக இருந்தாலும் அதற்காக இலங்கையின் முழு தொழில்நுட்ப பொருளாதாரத்தை இந்தியாவிற்கு அடகு வைப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது.

ஜனாதிபதியின் நாடாளுமன்ற கன்னி அமர்வின் கொள்கை விளக்கவுரையில், "நாட்டின் பொருளாதாரமானது பரிசீலனைகளை மேற்கொண்டு பார்க்கும் நிலையில் இல்லை" எனக் கூறியிருந்தார். அது வெறும் மேடைப் பேச்சு மாத்திரமே என்பது போல் தெரிகிறது.

சுமார் மூன்று வருடங்களாக வருமானத்தில், பொருளாதாரத்தில் பாரிய சிக்கல்கைளையும் நெருக்கடிகளையும் எதிர்கொண்டு வரும் நாட்டு மக்கள் புதிய அரசியல் மறுமலர்ச்சியைக் கோரியே அநுர அரசாங்கத்தை தேர்வு செய்தனர் என்பதை அடிக்கடி நினைவில் கொள்ள வேண்டும்.

புதிய அரசியல் மறுமலர்ச்சி என்ற போர்வையில் பழைய அரசாங்கங்களின் வழியை தான் அநுர பின்பற்றுவாராக இருந்தால், அவர்கள் பெற்ற வெற்றியிலும் எந்தப் பயனும் இல்லை.

பொருளாதார ரீதியாக வங்குரோத்து நிலையை எட்டியிருக்கும் ஒரு நாட்டிற்கு வருமானம் என்பது முக்கியமாக இருந்தாலும் அந்த வருமானத்தை ஈட்ட எது வேண்டுமானாலும் செய்ய முடியும் என்ற தீர்மானத்திற்கு எந்தவொரு ஆட்சியாளரும் வர முடியாது.

இந்தியாவுடனான எட்கா ஒப்பந்தம் என்ற யோசனை முன்வைக்கப்படும் போது, சிங்கள பேரினவாதத்தை முதன்மைப்படுத்தி அதனை எதிர்த்த இடதுசாரி எனக் காண்பித்த கட்சியான ஜே.வி.பி தற்போது கருத்துக்களையும், கொள்கைகளையும் மாற்றுவது கேள்விக்குரியதாகும்.

ஒப்பந்தத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் என்றாலும், சில சர்வதேச நாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டிருக்கும் குறித்த ஒப்பந்தத்தில் இலங்கைக்கு மாத்திரம் திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது.

ஐஎம்எப் எனப்படும் சர்வதேச நாணய நிதியம் தொடர்பிலும் இதேநிலை தான்.

எதிர்க்கட்சியில் இருக்கும் போது ஐஎம்எப் மற்றும் அதன் கொள்கைகளை விமர்சித்த அநுர தரப்பு, ஆட்சிக்கு வந்தவுடன் அதில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் என வாக்குறுதிகளை வழங்கியிருந்தாலும், அதில் எதுவித திருத்தங்களும் மேற்கொள்ளப்படவில்லை. ஐஎம்எப் பரிந்துரைகள் – நிபந்தனைகள் அப்படியே ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.




ஆக, எதிர்க்கட்சியில் இருந்து விமர்சிக்க முடியும், ஆட்சிக்கு வந்தால் தான், அதிகாரக் கதிரையின் சூடு உணரப்படும் என்பது புதிய ஜனாதிபதி விடயத்தில் கற்றுக் கொள்ளக் கூடிய ஒரு பாடமாகும்.

"தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் விஞ்ஞாபனம் ஐந்து வாரங்களிற்கானது இல்லை ஐந்து வருடங்களிற்கானது" என விஜித ஹேரத் விளக்கமளித்திருந்தார்.

ஐந்து வாரமோ, ஐந்து வருடமோ எதுவாக இருந்தாலும் மக்கள் நலனும், நாட்டின் வளர்ச்சியும் முதன்மைப்படுத்தப்பட வேண்டும். நாட்டு மக்களுக்கு தீங்கு பயக்கும் எந்த ஒரு விடயமும் நாட்டுக்கு நிச்சயம் நன்னை பயக்காது.

அரசாங்கம், மக்களைச் சார்ந்துள்ளது என்பதை தற்போதைய மழலை அரசாங்கம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

## நெடுந்தீவில் கைதான இந்திய மீனவர்களுக்கு விளக்கமறியல்



▪ பு.கஜிந்தன்

நெடுந்தீவு கடற்பரப்பில் இம்மாதம் 8ஆம் திகதி அதிகாலை கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 8 பேருக்கும் எதிர்வரும் 27 ஆம் திகதி வரை விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது. 8ஆம் திகதி கைது செய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்ட மீனவர்களது வழக்கு வெள்ளிக்கிழமை ஊர்காவற்துறை நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது, கைது செய்யப்பட்ட 8 மீனவர்களும் சிறைச்சாலை அதிகாரிகளால் ஊர்காவற்துறை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இந்நிலையில் எண்மரையும் (27) வரை விளக்கமறியல் வைக்குமாறு ஊர்காவற்துறை நீதிமன்றத்தின் பதில் நீதிவான் சாளினி ஜெயபாலச் சந்திரன் உத்தரவிட்டார்.

# உடுப்பிட்டி மதுபானசாலையை அகற்ற கோரும் வழக்கு ஒத்திவைப்பு



யாழ்ப்பாணம், உடுப்பிட்டி, இமையாணன் மேற்கில் புதிதாகத் திறக்கப்பட்ட மதுபானசாலையை அகற்றக்கோரி அப்பகுதியைச் சேர்ந்த 35 பொது அமைப்புக்கள் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு எதிர்வரும் 6ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தில் நீதவான் பொன்னுத்துரை கிருசாந்தன் முன்னிலையில் வியாழக்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

கடந்த மே மாதம் 5ஆம் திகதி தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கில் வழக்காளிகளான பொது அமைப்புக்கள் சார்பில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ. சுமந்திரன் முன்னிலையானார்.

விசாரணையின் போது மதுபானசாலை அமைத்த தற்கான தன் நிலையைக் குறித்த மதுபானசாலை உரிமையாளர் நீதிமன்றத்தில் விளக்கினார். உரிமையாளர் சார்பாக மற்றொரு சாட்சியம் அடுத்த தவணையின் போது அளிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து விசாரணை நீதவான் ஒத்தி வைத்தார்.

## முன்னாள் எம்.பி திலீபன் பிணையில் விடுதலை



▪ கி.வசந்தன்

வன்னி மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் மாவட்ட மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான கு.திலீபன் மற்றும் அவரது பிரத்தியேக செயலாளர் ஆகியோரை வவுனியா மாவட்ட நிதிமோசடி குற்றப் பிரிவு பொலிசார் கைது செய்து (20) வவுனியா நீதிமன்றில் முற்படுத்திய நிலையில் அவர்கள் இருவரும் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

15 இலட்சம் ரூபா காசோலை நிதி மோசடி தொடர்பில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான கு.திலீபனின் பிரத்தியேக செயலாளரை மாவட்ட நிதிமோசடி குற்றப் பிரிவு பொலிசார் கைது செய்தனர்.

அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணை களையடுத்து, ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் வன்னி மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கு.திலீபனும் வெள்ளிக்கிழமை காலை கைது செய்யப்பட்டார்.

குறித்த இருவரை யும் வவுனியா நீதிமன்றில் பெளிசார் முற்படுத் தியிருந்தனர். இதன்போது அவர்கள் 3 இலட்சம் ரூபாய் பணத்தினை முறைப்பாட்டாளருக்கு செலுத்திய நிலையில், குறித்த இருவரையும் சரீர பிணையில் நீதிமன்றம் விடுவித்துள்ளது.

## காவலாளியைக் கடித்த நபர் கைது

▪ பு.கஜிந்தன்

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மதுபோதையில் நுழைந்த நபர், காவலாளியைக் கடித்துக் காயப்படுத்திய சம்பவமொன்று (19) மாலை இடம்பெற்றுள்ளது.

மதுபோதையில் நோயாளர் விடுதிக்குள் நுழைய முற்பட்ட வரை வைத்தியசாலை காவலாளி தடுக்க முற்பட்ட போதே குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதையடுத்து, 35 வயது மதிக்கத்தக்கக் குறித்த நபர் காவலாளிகளால் பிடிக்கப்பட்டு யாழ்ப்பாணம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில், காயமடைந்த காவலாளி யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை விடுதியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேலும், சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## யாழ். பல்கலையில் மார்கழி இசைவிழா

யாழ் .இந்தியத் துணைத்தூதரகம் - நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டு கலைக்கூடல் மற்றும் யாழ்.வணிகர் கழகம் இணைந்து நடாத்தும் மார்கழி இசைவிழா 27,28,29ஆம் திகதிகளில் மாலை 4.45 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

முதலாம் நாள் 27ஆம் திகதி திருமதி வாசஸ்பதி ரஜீந்திரன் நெறியாள்கையில் இந்தியன் கோர்னர் இசைப்பிரிவு மாணவர்களின் தமிழ்த்தாய் வாழ்த்து, யாழ். பல்கலைக்கழக இசைத்துறை மாணவர்களின் தமிழ் இசை அரங்கு, யாழ். பல்கலை நடனத்துறை மாணவர்களின் நாட்டிய நடனம் மற்றும் பேராசிரியர். சி.மௌனகுரு நெறியாள்கையில் 'இராவணேசன்' (வடமோடி நாடகம்) நடைபெறவுள்ளது.

இரண்டாம் நாள் 28ஆம் திகதி சனிக்கிழமை கவிதா வாமதேவனின் 'விரலிசை கானங்கள்', சிவஸ்ரீ விஸ்வபிரசன்ன குருக்களின் 'தெய்வீக இசையரங்க', கே.பி.குமரனின் 'நாத சங்கமம்' மற்றும் யாழ் பல்கலை நடனத்துறை மாணவர்களின் 'கடல்கோள் கடந்த தமிழ்' நாட்டிய நாகமும் இடம்பெறவுள்ளன. இந்நிகழ்வில் யாழ்.வணிகர் கழக தலைவர் இ.ஜெயசேகரன் கலந்துகொள்ளவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

மூன்றாம் நாளான 29ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை திருமதி வாசஸ்பதி ரஜீந்திரன் நெறியாள்கையில் இந்திய துணைத்தூதரக இசைத்துறை மாணவர்களின் 'மதுர கானங்கள்', யாழ். மண்ணின் புகழ் பூத்த தவில், நாதஸ்வர வித்துவான்களின் இசைச் சங்கமம், யாழ். பல்கலை இசைத்துறை மாணவர்களின் 'தமிழ் இசை அரங்கு', நர்த்தனஷேத்ரா நடனப்பள்ளி மாணவர்களின் 'சூடிக்கொடுத்த சுடர்க்கொடியே', இந்திய புல்லாங்குழல் வித்துவான் ஸ்ரீதர் தலைமையிலான 'புல்லாங்குழல் இசை', யாழ். பல்கலை நடனத்துறை மாணவர்களின் 'அகலிகை சாப விமோசனம்' நாட்டிய நாடகமும் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் இந்தியத் துணைத் தூதுவர் சாயி முரளி கலந்துகொள்ளவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## விக்னேஸ்வரனின் நிலையே அர்ச்சுனாவுக்கும் மக்கள் எழுச்சிக் கட்சி




▪ பு.கஜிந்தன்

அரசியலில் விக்னேஸ்வரனுக்கு ஏற்பட்ட நிலைமையே வைத்தியர் இராமநாதன் அர்ச்சுனாவுக்கும் ஏற்படும் என அகில இலங்கை மக்கள் எழுச்சிக் கட்சியின் தலைவர் அருள் ஜெயேந்திரன் தெரிவித்தார்.

சமகால நிலைமைகள் தொடர்பாக யாழ்ப்பாணம் ஊடக அமையத்தில் வெள்ளிக்கிழமை நடை பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வைத்தியர் அர்ச்சுனா சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை பிரச்சினையைப் பயன்படுத்தி நாடாளுமன்ற உறுப்பினர் ஆகியுள்ளார். அது சிறந்த விடயம். ஆனால் அந்த விடயங்களை நிரூபிக்க அவர் தவறியுள்ளார். அவர் தவறாகச் செயற்படுவதால் தற்போது பல வழக்குகளை எதிர்கொண்டுள்ளார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்தியர் சத்தியமூர்த்தியுடன், தற்போது தானே பெரிய ஆள் என்பது போல் அவர் முரண்படுகிறார். அரசியலில் விக்னேஸ்வரனுக்கு ஏற்பட்ட நிலைமையே வைத்தியர் அர்ச்சுனாவுக்கும் ஏற்படும்.

எதிர்வரும் காலத்தில் அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசுடன் இணைந்து தேர்த லில் போட்டியிடுவதற்கு நாங்கள் தற்போது தீர்மானித்துள்ளோம்.

நாட்டில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக நாங்கள் தற்போது தயாராகி வருகின்றோம். அத்துடன் வடக்கு மாகாணத்தைச் சிங்கப்பூராக உயர்த்துவதற்கு எம்மைப் போன்ற வர்த்தகர்களை மக்கள் தெரிவு செய்ய வேண்டும் என்றார்.

## வவுனியாவில் மர நடுகை



▪ கி.வசந்தன்

வவுனியா, ஆசிக்குளம் கிராமசேவகர் பிரிவுக்குட்பட்ட இலுப்பைக்குளப் பகுதியில் முந்நூறு மரக்கன்றுகள் நாட்டி வைக்கப்பட்டன.

கமத்தொழில், கால்நடைவளர்ப்புஅமைச்சின்கீழானசிறியஅளவிலான விவசாய, வணிகம் மற்றும் மீண்டெழல் கருத்திட்டத்தின் மூலமாகக் கால நிலைக்கு முகம் கொடுத்தல் போன்ற பல்வேறு காரணங்களுக்காக மரம் நடுகை செயற்றிட்டமானது முன்னெடுக்கப்படுகின்றது.

## காருடன் மோ.சைக்கிள் மோதி ஒருவர் பலி

▪ பு.கஜிந்தன்

மண்கும்பான் - கறுப்பாச்சி அம்மன் கோவிலடி பகுதியில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற வாகன விபத்தில் இளைஞர் ஒருவர் ஸ்தலத்தில் உயிரிழந்துள்ளார்.

ஊர்காவற்துறை பகுதியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த கார் மீது, பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் மோதிய தில் இந்த விபத்து சம்பவித்துள்ளது.

இதன்போது மோட்டார் சைக்கிளை செலுத்திச் சென்றவர் உயிரிழந்துள்ளதுடன், மோட்டார் சைக்கிளின் பின்னால் இருந்து பயணித்த இளைஞர் படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

காரின் பின்பக்கம் முற்றாகச் சேதமடைந்துள்ளதுடன், காரின் சாரதிக்கு காயங்கள் ஏதும் ஏற்படவில்லை. விபத்துச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை ஊர்காவற்துறை பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

## "இலங்கை சிறுத்தைகளை பாதுகாப்போம்" முல்லைத்தீவில் விழிப்புணர்வு



வனஜீவராசிகள் மற்றும் இயற்கைப்பாதுகாப்புச் சங்கத்துடன் இணைந்து எல்.ஓ.எல்.சி நிறுவனம் நடத்திய இலங்கை சிறுத்தைகள் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சி ஒன்று வெள்ளிக்கிழமை முல்லைத்தீவு விசுவமடு தேராவில் தமிழ் வித்தியாலயத்தில் நடைபெற்றுள்ளது.

கடந்த மாதம் குறித்த பகுதியில் காட்டுப் பகுதியில் இருந்த சிறுத்தை ஒன்று மக்களின் வீட்டிற்குள் வந்துள்ளது. இதனை வன ஜீவராசிகள் திணைக்களத்தினர் பத்திரமாக மீட்டு மீண்டும் வனத்திற்குள் விட்டுள்ளார்கள்.

வடக்கு மாகாணத்தில் யாழ். மாவட்டத்தினை தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் அடர்ந்த காட்டுப்பகுதியில் சிறுத்தைகளின் நடமாட்டம் உள்ளது இந்த நிலையில் வேட்டையாடும் விலங்குகளை பாதுகாப்போம் விலங்குகளில் இருந்து நாங்கள் பாதுகாப்பாக இருப்போம் என்ற தொனிப்பொருளில் இலங்கையின் சிறுத்தைகள் தொடர்பில் இலங்கை சிறுத்தைகளை பாதுகாப்பதற்கான பிராந்திய கண்காணிப்பு அமைப் பினர் கருத்துக்களை வழங்கினர்.

## முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தின் ஒளிவிழா



▪ பு.கஜிந்தன்

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தின் நலன்புரி சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஒளிவிழா அண்மையில் மாவட்ட செயலக பண்டார வன்னியன் மாநாட்டு மண்டபத்தில் மாவட்டச் செயலர் அ.உமாமகேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்டத்தின் அருட்தந்தை அகஸ்ரின் அடிகளாரால் திருப்பலி பூஜை நடைபெற்று அதன் பின்னர் கிறிஸ்தவம் சார் கலை நிகழ்வுகள் நடைபெற்றன.

# பட்டம் விடும் நாடாளுமன்றமும் தத்தளிக்கும் குடிமக்களும் !





நூருல் ஹுதா உமர்

நாட்டில் அரிசி தட்டுப்பாடு, சீனியில் சிக்கல், புளியம் பழத்தின் விலை உச்சம், கேஸ் தட்டுப்பாடு, தேங்காய் விலை அதிகம், நாட்டில் அவசியமான பாவனைப்பொருட்கள் இல்லை. வெள்ளத்தில் சிக்கி வேளாண்மை அழிந்துள்ளது, மக்கள் உயிரை கையில் பிடித்துக் கொண்டு வாழும் நிலை, நிர்வாக பிரச்சினைகள், காணியில் பிரச்சினைகள், பாடசாலைகளை அடுத்த தவணைக்கு ஆரம்பிக்க நிறைய நெருக்கடிகள் என நடுக்கடலில் ஓட்டை விழுந்து தத்தளிக்கும் கப்பலாக இலங்கை மாறியிருக்கும் இந்நிலையில் இலங்கை நாடாளுமன்றம் ”பட்டம்” தேடிக்கொண்டிருக்கிறது.

மக்களுக்கு தேர்தல் காலங்களில் வழங்கிய வாக்குறுதிகள் தொடர்பில் அரசாங்கம் தீவிரம் காட்டினால், சபாநாயகர் அசோக ரன்வலவின் பட்டங்களின் நிலை குறித்து ஆராய்ந்து, இது தொடர்பில் தவறான தகவல்களை முன்வைத்தால் அவரை பதவி விலக வற்புறுத்த வேண்டும். அல்லது அவரை நீக்க வேண்டும். இங்கு ரன்வல தவறு செய்திருந்தால் இரண்டு தவறுகள் உள்ளன. இல்லாத பட்டங்களும் உண்டு என்பதை மக்களுக்கு அறிவிப்பதுதான். இன்னொன்று, இப்படிப்பட்ட நேரத்தில் இப்படிப்பட்ட விஷயங்களைப் பற்றிப் பகிரங்கமாகப் பொய் சொல்லி, அந்தப் பொய்களை மறைத்துவிட்டு இவ்வளவு முக்கியப் பதவியைப் பிடிப்பது சாத்தியமா என்று நினைப்பது. முதல் குற்றத்தை விட இரண்டாவது குற்றம் மிகவும் தீவிரமானது.தாம், தலைக்கவசம், காலணி போன்ற ஏனைய உடல் உறுப்புகளுக்கான பாதுகாப்பு கவசங்கள் இல்லாமல் சக்திவாய்ந்த வேகப்பந்து வீச்சாளர்களுக்கு முன்னால் கிரிக்கெட் பேட்ஸ்மேன்கள் பேட்டிங் செய்வது போன்றது என்பதை தேசிய மக்கள் சக்தி அரசு தெரிந்து கொள்ள வேண்டும் என ரஜரட்ட பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் குமார களுஆராச்சி, தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் சபாநாயகராக நியமிக்கப்பட்டிருந்த அசோக ரன்வலவின் கல்வித் தகுதிகள் தொடர்பான தகவல் அறியும் சட்டம் மற்றும் சுயவிசாரணையை மேற்கொண்டு மூட்டிவிட்ட நெருப்பு இன்று நாடாளுமன்றத்திலும், மன்றுக்கு வெளியேயும் கொழுந்து விட்டு எரிகிறது.

சபாநாயகராக இருந்த அசோக ரன்வலவுக்காக உருவாக்கப்பட்ட விக்கிபீடியா பக்கத்திலும் மற்றும் பல இணையதளங்களிலும், அவர் மொரட்டுவ பல்கலைக்கழகத்தில் இரசாயன பொறியியலில் பட்டம் பெற்றுள்ளார் என்றும் ஜப்பானில் உள்ள வசேடா பல்கலைக்கழகத்தில் உயிர் வேதியியலில் முனைவர் பட்டம் பெற்றிருப்பதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது. அவர் இலங்கை நாடாளுமன்றத்தின் சபாநாயகராக நியமிக்கப்பட்ட போது, அரசாங்க பொறியியலாளர்கள் சங்கத்தின் முகநூல் பக்கத்தில் வாழ்த்துகள் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனாலும் **Google scholar** இணையப் பக்கத்தில் அவரின் பெயரைப் பயன்படுத்தித் தேடியதில், அவை அனைத்தையும் பதிவுசெய்து, அவரின் பெயரில் ஒரு அறிவியல் வெளியீடு கூட வெளியிடப்படவில்லை என்பதை உறுதிப்படுத்தியது. மேலதிக விசாரணையில் அவருடன் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் பணியாற்றியவர்கள் அவர் மொரட்டுவ பல்கலைக்கழகத்தில் பட்டதாரி என்பதை மறந்து விட்டனர். மேலும் விசாரிக்க, தகவல் அறியும் சட்டத்தின் கீழ் மொரட்டு பல்கலைக்கழக பதிவாளரிடம் விளக்கம் கேட்கப்பட்ட விடயங்களையும் சிரேஷ்ட விரிவுரையாளர் குமாரகளு ஆராச்சி வெளிப்படுத்தி சில அரசியல்வாதிகளின் கல்வித் தகுதிகள் போலியானவை என்றும், முறைகேடுகளுக்கு மத்தியில் பரீட்சை எழுதி அந்தத் தகுதிகளைப் பெற்றவர்கள் என்றும் வாக்காளர்களிடம் குரல் எழுப்பிய நீங்கள், போலிக் கல்வித் தகுதிக்கு எதிராக இன்னும் நிற்பீர்கள் என்று நம்புகிறேன் என அரசாங்கத்தை கேட்டிருந்தார்.

அந்த பிரச்சினை பூதாகரமாகி சபாநாயகர் இராஜினாமா செய்யும் அளவுக்கு நிலை மாறியது. மட்டுமில்லாது நகர அபிவிருத்தி, வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சர் அநுர கருணாதிலகவின் பட்டம், எரிசக்தி அமைச்சர் குமார ஜயக்கொடியின் பட்டம் உள்ளிட்ட ஐவரின் கல்வித் தகைமைகள் கேள்விக்கு உள்ளாக்கப்பட்டுள்ளன. இதன்படி, தகவலறியும் சட்டத்தின் கீழ் இவர்களின் கல்வித் தகுதி குறித்த தகவல்களைப் பெறுவதற்கான பணிகளை ஒரு தரப்பினர் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, சில எம்.பிக்கள் தங்களது சமூக வலைதள கணக்குகளில் பதிவாகியிருந்த சில கல்வித் தகுதிகளை நீக்கத் தொடங்கியுள்ளதாகவும், ஆனால் அவற்றை அவதானிக்கும் போது அவை கடந்த நாட்களிலேயே நீக்கப்பட்டிருப்பது தெளிவாகத் தெரிவதாகவும் எதிர்க்கட்சிகள் குற்றம்சாட்டியுள்ளன.

இந்நிலையில் முன்னாள் சபாநாயகர் அசோக ரன்வல தமது பல்கலைக்கழகத்தில் ஒருபோதும் மாணவராக இருந்ததில்லை என்பதை ஜப்பானில் உள்ள வசேடா பல்கலைக்கழகம் உறுதிப்படுத்தியுள்ளது. போலியான கலாநிதி பட்டத்தை காட்டுவது நாடாளுமன்றத்தை அவமதிக்கும் செயலாகும் என முன்னாள் அமைச்சர் தலதா அத்துகோரள விசேட ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு தெரிவித்தார். ஐக்கிய தேசியக் கட்சியினால் இந்த ஊடகவியலாளர் மாநாட்டுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. இலங்கை பாராளுமன்றம் ஆசியாவின் முதலாவது பாராளுமன்றம் அங்கு என்ன நடக்கிறது என்பதை முழு உலகமும் உன்னிப்பாக அவதானித்து வருகிறது. எனவே, இலங்கை சபாநாயகரின் கலாநிதி பட்டத்தின் குற்றச்சாட்டுகள் நாட்டை அவமதிக்கும் செயலாகும் என தெரிவித்து சபாநாயகர் உடனடியாக தனது பதவியை இராஜினாமா செய்ய வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டது.

முன்னாள் ஜனாதிபதி ரணில், ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான காவிந்த ஜயவர்தன மற்றும் கபீர் ஹாசிம் ஆகியோருக்கு தொலைபேசி அழைப்புகளை மேற்கொண்டு எம்.பிக்களின் கல்வித் தகமைகளை ஆராய தெரிவுக் குழுவொன்றை நியமிக்குமாறு கோருமாறும் இந்த விடயத்தில் ஐக்கிய மக்கள் சக்தியும் குரல் எழுப்பி தலையிட வேண்டுமென ஆலோசனை வழங்கியதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டது. தனக்கு கலாநிதி பட்டம் இருப்பதாக கூறி மக்களையும் அரசாங்கத்தையும் ஏமாற்றியுள்ள சபாநா யகர் அசோக ரன்வலவுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருவதற்கான நடவடிக்கையை ஐக்கிய மக்கள் சக்தி ஆரம்பித்து இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையில் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச, கட்சியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார, எதிர்க்கட்சியின் பிரதம கொறடா கயந்த கருணாதிலக்க மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜெ.சி.அலவத்துவல, அஜித் பீ பெரேரா, சுஜித் சஞ்சய் பெரேரா, சதுர கலப்பதி, ஜகத் விதான மற்றும் ஹர்ஷன ராஜகருணா ஆகியோர் கைச்சாத்திட்டனர். மொட்டும் இந்த விடயத்தில் தனது கையை உயர்த்திக்கொண்டிருந்தது.

இதனிடையே “ஏழு தசாப்தங்களுக்கும் மேலாக, இந்நாட்டு மக்கள் வெவ்வேறு அரசாங்கங்களை உருவாக்கியுள்ளனர். வெவ்வேறு அரசாங்கங்கள் கவிழ்க்கப் பட்டன.” “வரலாற்றில் முதன்முறையாக, இந்த நாட்டு மக்கள் எமக்கும் தேசிய மக்கள் சக்திக்கும் இரண்டு சந்தர்ப்ப ங்களில் வழங்கிய வரலாற்று ஆணையினை இம்முறை நாங்கள் பெற்று ள்ளோம். தரமான மற்றும் நிலையான நாடு உருவாகும் என்ற நம்பிக்கையுடன் இந்த நாட்டு மக்கள் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை உருவாக்கியுள்ளனர்..” “எங்கள் அரசாங்கம் அந்த சிறப்பு நம்பிக்கையை ஒரு துளி கூட சேதப்படுத்த அனுமதிக்காது. சுருக்கமாக கூறின், நாட்டில் தவறு செய்யும் எவரையும் எக்காரணம் கொண்டும் பாதுகாக்க எமது அரசாங்கம் தயாரில்லை. நாட்டில் மட்டுமல்ல எமது அரசாங்கத்திலும் எவரேனும் தவறு செய்தால் அந்த தவறுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க தயங்க மாட்டோம்.

“சரியான நேரத்தில் இது தொடர்பாக சாத்தியமான அனைத்து நடவடி க்கைகளையும் எடுக்க நாங்கள் தயங்க மாட்டோம்.” 7 தசாப்தங்களாக ஏமாற்றப்பட்ட மக்கள் எம்மீது வைத்துள்ள நம்பிக்கையை உறுதிப்படுத்தி இந்த நாட்டை சிறந்த நாடாக மாற்றுவதற்கு தமது அரசாங்கம் நிபந்தனையற்ற அர்ப்பணிப்புடன் செயற்படுவதாக ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்தார். இந்த அறிவிப்பு வெளிவந்த சில மணித்தியாலயங்களில் சபாநாயகரின் ராஜினமா கடிதமும் வெளிவந்தது. அதில் “கடந்த சில நாட்களாக என்னுடைய கல்வி அடைவு சம்பமந்தமாக வாத விவாதங்கள் நடைபெற்று வருகின்றன. நான் எந்த இடத்திலும் பொய்யான தகவல்களை வழங்கவில்லை. ஆனால் அந்த கல்வித்தகைமையை உறுதி செய்ய கூடிய ஆவணங்கள் என்னிடம் இல்லை. அதனை சம்மந்தப்பட்ட நிறுவனங்களில் இருந்தே பெற வேண்டியுள்ளது. எனவே அது இப்போதைக்கு கடினமான விடயம். எனக்கு பேராசிரியர் பட்டம் தந்த ஜப்பான் வசேதா பல்கலைகழகத்தோடு இணைந்த ஆவணங்களை என்னால் முன்வைக்க முடியும். அதனை நான் விரைவில் முன்வைப்பேன். ஆனால் எழுந்துள்ள நிலைமையை கருத்திற்கொண்டு எங்கள் மீது நம்பிக்கை வைத்த மக்கள் நிர்க்கதிக்கு உள்ளாகாமல் இருக்க நான் ஏற்றுள்ள சபாநாயகர் பதவியை இராஜினாமா செய்ய முடிவு செய்துள்ளேன். ” என்று தெரிவித்திருந்தார்.

இது மரத்தால் விழுந்தவனை மாடு மிதித்த கதையாக தேசிய மக்கள் சக்தியின் கௌரவத்தில் கரும்புள்ளியாகவே அமைந்தது. இதனை தொடர்ந்து தேசிய மக்கள் சக்தியின் சார்பிலான உறுப்பினர்கள் பலரினதும் பேராசிரியர், கலாநிதி உட்பட பல பட்ட சான்றிதழ்களும் கேள்விகுள்ளாக்கப்பட்டு அவர்களின் கௌரவம் சந்தி சிரிக்கும் நிலைக்கு கடந்த சில நாட்களாக சமூக ஊடகங்களிலும், தேசிய ஊடகங்களிலும் பிரதான செய்திகளாகவும், விசேட செய்திகளாகவும் வெளிவந்து கொண்டிருக்கின்றன. இதற்கு பதிலளிக்கும் வகையில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் திருட்டுகள் தொடர்பில் தேட முடியாத காரணத்தினால் ஆளும் கட்சி உறுப்பினர்களின் தகைமைகள் பற்றி அறிய எதிர்க்கட்சிகள் முயற்சிப்பதாக பிரதமர் ஹரிணி அமரசூரிய கடந்த செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்தில் உரையாற்றினார். அப்போது கடந்த அரசாங்கங்களின் எம்.பிக்கள் மற்றும் அமைச்சர்களின் ஊழல்கள் பற்றி தேடப்பட்டதாக குறிப்பிட்டுள்ளார். 'எங்கள் அரசாங்கத்தில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் அமைச்சர்களின் தகைமைகள் தொடர்பில் பெரும் ஆர்வம் ஏற்பட்டுள்ளது. இங்கே இருக்கும் நம் பலரின் தகைமைகளை தேடுகின்றனர். தகைமைகளை கேட்கிறார்கள், அதை கேட்கிறார்கள், இதை கேட்கிறார்கள். மிகவும் ஆர்வமாக உள்ளனர். கடந்த காலங்களில் அமைச்சர்கள் மற்றும் அரசாங்கத்தில் உள்ளவர்களின் கல்வித்தகுதிகள் தேடப்படவில்லை என்பது ஒருபுறம் எங்களுக்கு மகிழ்ச்சி. அவர்களின் திருட்டையே தேடினார்கள். எங்களின் திருட்டுகள் தொடர்பில் கண்டு பிடிக்க முடியாததால் கல்வித் தகுதியில் இவ்வளவு ஆர்வம் காட்டுவது சற்று முன்னேற்றமாகவே கருதலாம்.' என்று தெரிவித்திருந்தார். இருந்த போதிலும் கடந்த செவ்வாய்க்கிழமை (17) இடம்பெற்ற பாராளுமன்ற அமர்வில் 10 வது நாடாளுமன்றத்தின் புதிய சபாநாயகராக தேசிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் ஜகத் விக்ரமரத்ன தேர்ந்தெடுக்கப்பட்டார்.

தீப்பிடித்து எரியும் வீட்டிலிருந்து ஒரு பெற்றோல் தாங்கி மேலே விழுந்தது போல நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷன நாணயக்காரவின் பெயருக்கு முன்னால் கலாநிதி சேர்க்கப்பட்டு இப்போது அது வேறு ஒரு பிரச்சினையாக மாறியிருக்கிறது. கடந்த திங்கட்கிழமை (16) குற்றப் புலனாய்வு திணைக்களத்திற்கு சென்று முறைப்பாடு செய்த அமைச்சர் தனது பெயரை தவறாகப் பயன்படுத்திய நாடாளுமன்ற இணையத்தளத்தில் தொடர்புபடுத்திய தொடர்பாடல் திணைக்களம் மன்னிப்புக் கோரி கடிதம் அனுப்பியுள்ளது. 13ஆம் திகதி மற்றும் பத்திரிகை ஊடகங்களில் அவரது பெயருக்கு முன்னால் தவறான அறிமுகம் சரி செய்யப்பட்டு அது குறித்து விளம்பரப்படுத்தப்பட்டுள்ளது. அவர் நாடாளுமன்ற அலுவலகத்தையோ, பத்திரிகைகளையோ குறை கூறவில்லை என்றும், இந்த தவறான கருத்து காரணமாக சமூக வலைதளங்களில் தனது பெயரில் அவதூறு பரப்புரை மேற்கொள்ளப்பட்டதாகவும் தாம் அறிமுகப்படுத்தாத ‘கலாநிதி’ என்ற பெயரை யாரோ வேண்டுமென்றே பயன்படுத்தி அசௌகரியத்தை ஏற்படுத்தியதாக அமைச்சர் சுட்டிக்காட்டி இந்த தவறுகளை நியாயமாக அறிமுகப்படுத்தி தனக்கு தேவையற்ற அசௌகரியங்களை ஏற்படுத்திய நபரை கண்டு பிடிக்க வேண்டி குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் உதவியை நாடியதாக தெரிவித்துள்ளார்.

இப்போது எதிர்தரப்பினரால் ஆளும்தரப்பை நெருக்கடிக்கு உள்ளாக்கியது போல ஆளும்தரப்பு எம்.பிக்களினால் எதிர்தரப்பு எம்.பிக்களின் பட்டம் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு நாடாளுமன்றத்தின் பொன்னான காலம் வீணடிக்கப்பட்டுக்கொண்டிருக்கிறது. கடந்த புதன்கிழமை (18) தனது சகல கல்வித் தகைமைகளையும், பிறப்புச் சான்றிதழையும் நாடாளுமன்ற சபையில் சமர்ப்பித்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இவைகள் பொய்யாக இருக்கும் பட்சத்தில் அல்லது தான் பொய்யான சான்றிதழ்களை முன்வைத்திருந்தால், அது குறித்து நிரூபிக்கப்படும் பட்சத்தில் தான் எதிர்கட்சித் தலைமைப் பதவியில் இருந்தும் அரசியலில் இருந்தும் ஓய்வு பெறுவதாக தெரிவித்திருந்தார். அதுபோன்றே நாமல் ராஜபக்ஷ, தமக்கு எதிராக முன்வைக்கப்படும் ஏனைய குற்றச்சாட்டுகளைப் போன்று இதுவும் அரசியல் இலாபங்களுக்காக மாத்திரமே மேற்கொள்ளப்படுவதாகவும், தான் குளிரூட்டப்பட்ட தனியறையில் சட்ட பரீட்சை எழுதியிருப்பின் குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்படின் தான் எம்பி பதவியில் இருந்து இராஜினாமா செய்வதாகவும் அவ்வாறு இல்லையென்றால் வசந்த சமரசிங்க அமைச்சுப் பதவியில் இருந்து இராஜினாமா செய்ய வேண்டும் என்றும் தெரிவித்திருந்தார்.மேலும், பல ஆண்டுகளாக பயன்படுத்தப்பட்டு வரும் இத்தகைய குற்றச்சாட்டுகள் முற்றிலும் ஆதாரமற்றவை எனவும் இது இலங்கை சட்டக் கல்லூரியின் நம்பகத்தன்மையை கடுமையாகக் குறைமதிப்பிற்கு உட்படுத்துவதாகவும் நாமல் ராஜபக்ச மேலும் குறிப்பிட்டுள்ளார்.

அது மட்டுமின்றி சமூக ஊடகங்கள் மூலம் தனது நற்பெயருக்குக் களங்கம் விளைவிக்கும் வகையில் தனது கல்வித் தகுதி குறித்து கூறப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு எதிராக கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சமிந்திரனி கிரியெல்ல தனது ஃபேஸ்புக் கணக்கில் தனது பட்டப்படிப்பு ஃ தொழில்முறைச் சான்றிதழ்களை சமர்ப்பித்திருந்தார். அதில் தனது கல்வி நிலை பற்றி விரிவாக விளக்கியிருந்தார். இதுபோன்று கடந்த சில நாட்களாக நாடாளுமன்றம் பல்கலைக்கழகமொன்று போல அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு கூட்ட மண்டபம் போல மாறியிருக்கிறது.

நாட்டுக்கு இப்போது தேவை இந்த விவாதமா அல்லது நாட்டை மேம்படுத்த தேவையான விடயங்களின் விவாதமா என்பது தெரியாத அளவில் இலங்கையின் அரசியல் கலாசாரமும், சூழ்நிலையும் மாறியிருக்கிறது. நாடாளுமன்றத்தில் ”பட்டம்” விடும் அரசியல்வாதிகள் சிலர் நேரத்தையும், காலத்தையும் வீணடித்துக் கொண்டிருக்க நாடு பவளப்பாறையில் மோதிய கப்பல் போல தாண்டு கொண்டிருக்கிறது. இன்று வரை சில எம்.பிக்கள் நாடாளுமன்றத்தில் வாய் திறக்காமல் ஊமையர்களாகவும், நடப்பவை அறியாத குருடர்களாகவும், நாட்டு நடப்புக்களை பற்றிய அறிவில்லாத செவிடர்களாகவும் இருந்து கொண்டிருக்கிறார்கள். க(ல்)லாநிதி பட்டத்தை பறக்க விட்டு நாட்டை மேம்படுத்த தேவையான திசையில் இலங்கை நாடாளுமன்றம் பயணிக்க கடமைப்பட்டுள்ளது.

# தமிழ் மொழிபெயர்ப்பு இலக்கியத்துக்கு வளம் சேர்த்த கே.கணேஷ்



அருள்சத்தியநாதன்

இலங்கையில் தொடர்ச்சியாக நூல் வெளியீடுகள் நடைபெற்று வந்தாலும் வாசகர்களுக்கு பயனுள்ள, கொடுக்கப்படும் விலைக்கு பெறு மதியான, தரமான, புதிய தகவல்களை நமக்குத் தரவல்ல நூல்கள் வெளிவருவது எப்போதாவதுதான். அதுவும் மொழிபெயர்ப்பு நூல்கள் வருடத்துக்கு ஒன்றாவது வெளிவருகிறதா என்றால் இல்லை என்பதே உண்மை. துறைசார் நூல்களுக்கும், அறிவூட்டக் கூடிய நூல்களுக்கும், தரமான கதை நூல்களுக்கும், மொழி பெயர்ப்புகளுக்கும் நாம் தமிழகத்தையே நம்பியிருக் கிறோம்.

தமிழ் நூல்களை நம் வாசகர்கள் விலை கொடுத்து வாங்க முன்வருவது மிகக் குறைவு என ஒரு காரணம் சொல்லப்படுகிறது. வாசிப்புக் பழக்கம் குறைந்து வருகிறது என்கிறார்கள். தமிழக பதிப்பாளர்களும் இதே பிரச்சினைகளைத்தான் எதிர் கொண்டிருக்கிறார்கள். எனினும் அங்கே தான் உலகத் தமிழர்களுக்கான நூல்களும் மொழி பெயர்ப்புகளும் தயாராகி வெளிவருகின்றன. ஏழு கோடி தமிழர்கள் வாழும் தமிழகத்தில் ஒரு பதிப்பாளர் முதல் பதிப்பாக ஆயிரம் பிரதிகளைத் தான் அச்சிட்டு வெளியிடுகிறார் என்பது பெருமைக்குரிய விஷயமல்ல.

கடந்த அக்டோபர் 27ஆம் திகதி கொழும்பு சரஸ்வதி மண்டபத்தில் ஒரு நூல் வெளியீட்டு விழா நடைபெற்றது. எழுத்தாளரும், மொழிபெயர்ப்பாளரும், சிந்தனையாளருமான கே.கணேஷின் நூற்றாண்டு விழா அன்றைய தினம் கொண்டாடப்பட்டு நினைவு மலரும் வெளியிட்டு வைக்கப்பட்டது. இது வழமையான நினைவுமலர் போல அமைந்திருக்கவில்லை. பழைய நினைவுகளை மீட்டும், புதிய செய்திகளை சொல்லும், நெருடல் இல்லாத தமிழ் மொழிபெயர்ப்பு வாசிப்பதற்கு எவ்வளவு உற்சாகமானதாக இருக்கும் என்பதை புரிய வைக்கும் ஒரு நூலாக அமைந்திருந்தது.

தமிழகத்தில் மொழி பெயர்ப்பை ஒரு கலையாகவும் தொழிலாகவும் செய்தோர் பலர். அறிவியல் எழுத்தாளர் கார்ல்சேகன், விஞ்ஞானியும் விண்வெளி கோட்பாட்டாளருமான எழுத்தாளர் ஸ்டீபன் ஹாக்கிங் போன்றோரின் நூல்களை தமிழில் மொழி பெயர்ப்பது சுலபமான காரியம் அல்ல. இத்தகைய மொழிபெயர்ப்புக்கு சவால் விடுக்கும் நூல்கள் எல்லாம் அனாயாசமாக தமிழகத்தில் மொழிபெயர்க்கப்படுகிறது. ஆனால் இலங்கையில் தரமான நூல்களும் வெளியாவது குறைவு, மொழி பெயர்ப்பு நூல்களும் வெளிவருவதாகத் தெரியவில்லை. இந்த பின்னணியில் கே. கணேஷ் நூற்றாண்டு விழாவையும் அன்றைய தினம் வெளியிடப்பட்ட “முற்போக்கு இலக்கிய ஆளுமை கே.கணேஷ் மொழிபெயர்ப்புகள்” என்ற 354 பக்க, 140 எம்.எம்.ஒ 220 எம்.எம் அளவை விட பெரிதாக, கையில் எடுத்தால் கல்கி தீபாவளி மலரைப்போல கனக்கும் நூலாக இது வெளிவந்திருக்கிறது.

இந்த மலரின் விசேஷம் என்னவென்றால் இதில் வழமையான விளம்பரங்கள், வாழ்த்துரைகள், வாழ்த்துக் கவிதைகள் எதுவுமே இல்லாதது. இந்நூலைத் தொகுத்தவரான எஸ்.பொன்னுத்துரையின் பதிப்புரை மற்றும் முன்னாள் பிரதியமைச்சர் பி.பி. தேவராஜின் தமிழ் மற்றும் ஆங்கில அறிமுகவுரை ஆகிய இரண்டைத் தவிர வேறு எந்த உரைகளும் கிடையாது. சபா ஜெயராஜா மற்றும் ஞானம் ஞானசேகரனின் நேர்காணல் ஆகியவற்றின் பின்னர் நூல் நேரிடையாகவே கே.கணேஷின் மொழி பெயர்ப்புகளுக்கு சென்று விடுகிறது. பின்னிணைப்பாக மணிக்கொடியிலும் மற்றும் பெரும்பாலும் வீரகேசரியிலும் வெளிவந்திருக்கக் கூடிய இரண்டு சிறுகதைகள் சேர்க்கப்பட்டுள்ளன.

எனவே மொத்த புத்தகமும் கச்சிதமாக திட்டமிடப்பட்டு தொகுக்கப்பட்டுள்ளது. நம் கைகளில் திணிக்கப்படும் “மலர்”களை புரட்டிப் பார்த்துவிட்டு ஒரு ஓரமாக வைத்து விடுவோம். இதுவோ உள்ளடக்கத்தால் கனதியாகவும், சந்தேகங்கள் ஏற்படும் போது அவ்வப்போது தெளிவுக்காக எடுத்து பார்த்துக் கொள்ளும் Reference நூலாகவும் இருப்பதால் வீட்டு நூலகத் தில் இடம் பெறும் தகுதி வாய்ந்ததாக இப் புத்தகம் விளங்குகிறது. இந்நூலை கையில் எடுத்து புரட்டினீர்களானால் உங்களுக்கு உண்மை புரியும்.

இந் நூலுக்கு, முன்னாள் பிரதியமைச்சர் பி.பி.தேவராஜ் முன்னுரை எழுதியுள்ளார். அம்முன்னுரையின் முக்கியமான விஷயம், தொழிலாளர்கள் அல்லாதவர்களாக இலங்கைக்கு வந்த மற்றொரு தமிழ் சமூகத்தைப் பற்றியதாகும். இலங்கையில் கோப்பித் தோட்டங்கள் ஆரம்பிக்கப்பட்ட பின்னரேயே தென்னிந்தியாவில் இருந்து தமிழ் தொழிலாளர்கள் பெருமளவில் கண்டிச் சீமைக்கு அழைத்து வரப்பட்டனர். ஆனால் அதற்கு முன்னரும், தமிழ்த் தொழிலாளர்கள் வரத் தொடங்கிய பின்னரும் இச்சமூகம் இலங்கைக்கு வர ஆரம்பித்தது. அவர்களில் பலர் இந்தியாவில் இருந்து பணத்துடன் வந்தவர்கள். இவர்கள் இங்கே வந்து வளமான காணிகளை வாங்கி தேயிலை, மிளகு, கொக்கோ, கிராம்பு மற்றும் வாசனைப் பொருட்களை விளைவித்தனர். மேலும் பலர் வர்த்தக நோக்கத்துடன் இங்கு வந்தவர்கள். அவர்களில் செட்டிமார் குறிப்பிடத்தக்கவர்கள்.

வங்கிகள் இல்லாத காலத்தில் அவர்களே அரசாங்கத்துக்கும், பெருந்தோட்ட உரிமையாளர்கள் மற்றும் நிர்வாகிகளுக்கும் அவசியமான தருணங்களில் வட்டிக்கு பணம் கொடுத்தார்கள். பிரிட்டிஷ் ஆட்சியின் போது தான் பெருமளவு அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. ஏற்றுமதி அதிகரித்ததைப் போல இறக்குமதியும் அதிகரித்தது. இலட்சக்கணக்கான தோட்டத் தொழிலாளர்களுக்கு உணவளிக்க வேண்டியிருந்ததால் பெருமளவு அரிசி, மா, பருப்பு, கருவாடு, மாசி மற்றும் பலசரக்கு பொருட்கள் இறக்குமதியாகின. இவற்றை செட்டிமாருக்கும் தமிழ் வர்த்தகர்களுமே இறக்குமதி செய்து மாட்டு வண்டில்கள் ஊடாக பெருந் தோட்டப் பகுதிகளுக்கு எடுத்துச் சென்றனர். பெருந் தோட்டங்களுக்கு அப்பால், பாதை மற்றும் பாலங்கள் அமைக்கும் மற்றும் துறைமுக அபிவிருத்தி போன்ற பணிகளில் தொழிலாளரை வரவழைத்து ஈடுபடுத்தும் பெருந் திட்டங்களிலும் தமிழ் வர்த்தகர்கள் மற்றும் கங்கானிமார் குறிப்பிடத்தக்க அளவில் ஈடுபட்டிருந்தனர். இவர்களும் கொழும்பிலும் ஏனைய நகர்ப்புறங்களிலும் காணிகளையும் கட்டடங்களையும் சொந்தமாக வைத்திருந்தனர். இன்றைக்கும் பிரபலமான இந்துக் கோவில்களையும் அமைத்தனர்.

தொழிலாளர் அல்லாத இந்த தொழில் துறைகளிலும், வர்த்தகத்திலும் ஈடுபட்டிருந்த இச் சமூகத்தினரில் பெரும்பாலானோர் இந்தியாவுக்கே திரும்பிப் போய்விட்டனர். இன்னும் ஒரு பகுதியினர் அனுப்பப்பட்டனர். எனினும் மலையகத்தின் பல பகுதிகளில் இவர்களின் வழிவந்தவர்களால் இத் தோட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இச் சந்ததியினரின் குறிப்பிடத்தக்க அளவினர் வெளிநாடுகளில் தொழில் செய்பவர்களாகவும், உயர் தொழில்களில் ஈடுபட்டவர்களாகவும், நகரங்களில் வர்த்தகர்களாகவும் விளங்குகின்றனர்.

தனது முன்னுரையில் இவ் வகுப்பினரைக் குறிப்பிடும் பி.பி.தேவராஜ், இவர்களைப் பற்றிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் இவர்களின் சாதனைகள் மற்றும் பங்களிப்புகள் ஆவணப்படுத்தப்பட வேண்டிய அவசியம் பற்றியும் தெரிவித்துள்ளார். கே.கணேஷின் குடும்பமும் மிளகு, கிராம்பு போன்ற பயிர்களை வளர்த்த தோட்டத்தை சொந்தமாகக் கொண்டிருந்தது. அவரது குடும்பமும் கணேஷ்க்கு தோட்ட கணக்கு வழக்குகளை பார்த்து நிர்வாகம் செய்வதற்கான கல்வி அறிவு இருந்தால் போதும் என்றே கருதினார்கள். ஆனால் கணேஷ் மார்க்கசியவாதியாகவும் இந்திய சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபாடு கொண்டவராகவும், சிறந்த மொழிபெயர்ப்பாளர் மற்றும் படைப்பாளராகவும் விளங்கினார். அவரது படைப்பாற்றல்தான் நூற்றாண்டை கொண்டாட வைத்திருக்கிறது.

“முற்போக்கு இலக்கிய ஆளுமை கே.கணேஷ் மொழிபெயர்ப்புகள்” என்ற இந்த நூல் கடந்த அக்டோபர் 27ஆம் திகதி இலங்கைக்கான பிரதி இந்தியத் தூதுவர் சத்தியாஞ்சல் பாண்டேவினால் வெளியிட்டு வைக்கப்பட்டது. பேராசிரியர் சபா.ஜெயராஜாவின் ஒரு கட்டுரை, ஞானம் ஞானசேகரனின் நேர்காணல் ஆகியவை, கணேஷின் ஆளுமையை முழுமையாக வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது.

அதற்கு அடுத்ததாக சிறந்த இந்திய படைப்பாளராக முல்க்ராஜ் ஆனந்தின் ஆங்கில நாவலான Untouchable, தீண்டாதான் என்ற பெயரில் கணேஷினால் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டிருந்தது. அந்நாவல் முழுமையாக இந்நூலில் காணப் படுகிறது. 1935களில் வெளியான இந்நாவலை இப்போது படித்தாலும் தூக்கிவாரிப்போடச் செய்வது இந் நாவலின் சிறப்பாகும். கச்சிதமாக எழுதப்பட்ட இந்நாவலை, தமிழில் எழுதப்பட்ட மூல நூல் என்ற உணர்வை ஏற்படுத்தும் வகையில் கணேஷ் மொழிபெயர்ப்பு செய்திருப்பது அவரது திறமையை காட்டுவதோடு, இந்நாவலை அவர் எவ்வளவு விரும் பியிருக்கிறார் என்பதையும் கூடவே வெளிப்படுத்துகிறது. 1930களில் வட இந்திய மாநிலங்களில் சாதிக் கொடுமை எவ்வளவு குரூரமாக வழக்கில் இருந்திருக்கிறது என்பதைக் கூறும் இந்நாவல், சில இடங்களில் பதைபதைக்கச் செய்கிறது. இந் நாவலைப் படிப்பதற்காகவே இந்நூலை நீங்கள் வாங்கலாம். அதன் பின்னர் மொழிபெயர்ப்பு சிறுகதைகள் அணி வகுக்கின்றன. லூசுன் என்ற சீன படைப்பாளரின் பைத்தியக்காரனின் குறிப்புகள், ஹோசிமின் சிறைக்குறிப் புகள் என பல்வேறு சோஷலிச நாடுகளின் படைப்பாளர்களின் படைப்புகளை கணேஷின் சீரிய மொழி பெயர்ப்பு என்ற சாளரத்தின் வழியாக நாம் காண முடிகிறது.




மொழிபெயர்ப்பு என்பது வெறுமனே வசனங்களை தமிழ் மொழிக்கு கொண்டு வருவது அல்ல, பலரும் அப்படித்தான் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். வேறொரு மொழி நூலை தமிழுக்குக் கொண்டு வருவதற்கு முன்னர் அம் மொழியின் ஆன்மாவையும், அம்மொழி பேசுவோரின் கலாசாரத்தையும் மொழி பெயர்ப்பாளர் உள்வாங்கியிருக்க வேண்டும். ஒரு விஷயத்தை ஒரு மொழி இப்படித்தான் விளக்கும் என்பதைத் தெரிந்திருந்தால்தான் அம்மொழி பயன்படுத்தக் கூடிய உவமான உவமேயங்களை புரிந்து கொண்டால்தான் ஒருவரால் ஆற்றோட்டமான மொழிபெயர்ப்பை கோர்வையாக, சிக்கலின்றித் தர முடியும். இதில் கே.கணேஷ் வெற்றி பெற்றிருந்தார்.

அறுபதுகளில் தமிழகத்தில் இருந்து நிறைய மொழிபெயர்ப்பு நூல்கள் வெளிவந்தன. பெரும்பாலும் சோஷலிச முகாம்களில் இருந்தே இம் மொழிபெயர் ப்பு நூல்கள் வெளிவந்தன. The good earth என்ற சீன பெரும் பஞ்சத்தை மையமாகக் கொண்ட நூல் நல்ல நிலம் என்ற பெயரில் வெளிவந்து கவனம் ஈர்த்ததை நினைத்துப் பார்க்க முடிகிறது. தற்போதும் ஏராளமான மொழிபெயர்ப்புகள் வருகின்றன. ஆனால் கணேஷ்க்குப் பின் அவர் அளவுக்கு இலங்கை தமிழ் இலக்கிய பரப்பில் மொழி பெயர்ப்பு இலக்கியம் வேகம் பெற்றதாகத் தெரியவில்லை.

இதற்கு பல காரணங்கள் இருக்கலாம். எனினும், மொழி மென்மேலும் வளம் பெறுவதற்கு மென்மேலும் மொழி பெயர்ப்பு இலக்கியம், திரை கடலோடி திரவியம் தேடு என்று சொல்லப்பட்டதைப் போல, இலங்கை தமிழ் இலக்கியப் பரப்பில் வளர வேண்டிய அவசியம் அப்படியே உள்ளது.

**கணேஷ் மார்க்கசியவாதியாகவும் இந்திய சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபாடு கொண்டவராகவும், சிறந்த மொழி பெயர்ப்பாளர் மற்றும் படைப்பாளராகவும் விளங்கினார். அவரது படைப்பாற்றல்தான் நூற்றாண்டை கொண்டாட வைத்திருக்கிறது.**

**The good earth என்ற சீன பெரும் பஞ்சத்தை மையமாகக் கொண்ட நூல் 'நல்ல நிலம்' என்ற பெயரில் வெளிவந்து கவனத்தை ஈர்த்ததை நினைத்துப் பார்க்க முடிகிறது. தற்போதும் ஏராளமான மொழிபெயர்ப்புகள் வருகின்றன. ஆனால் கணேஷ்க்குப் பின் அவர் அளவுக்கு இலங்கை தமிழ் இலக்கிய பரப்பில் மொழி பெயர்ப்பு இலக்கியம் வேகம் பெற்றதாகத் தெரியவில்லை.**

# கரையொதுங்கிய ரோஹிங்கிய அகதிகளின் பதற வைக்கும் கதை



எஸ்.கீதபொன்கலன்



## 16 நாட்கள் கடற் பயணம் இரண்டு படகுகள் சேதம் ஆறு பேர் உயிரிழப்பு

முள்ளிவாய்க்காலில் கரை ஒதுங்கிய படகில் இருந்தவர்கள் 16 நாட்கள் பயணம் செய்ததாக தெரிவித்துள்ளார்கள். வெளிநாடுகளில் தஞ்சம் அடைவதற்காக மூன்று படகுகளில் புறப்பட்ட இவர்களில், ஆறு பேர் உயிரிழந்திருப்பதாக கூறுகின்றார்கள். மூன்று படகுகளில் வந்து கொண்டிருந்த பொழுது, இரண்டு படகுகள் சேதம் அடைந்ததாகவும், அவர்களில் ஆறு பேர் உயிரிழந்ததோடு, எஞ்சியவர்கள் ஒரு படகில் ஏற்றப்பட்ட நிலையில், பயணத்தை தொடர்ந்ததாகவும் கடற் படையினரிடம் அவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள்.

இந்தப் படகே முள்ளிவாய்க்காலில் கரை ஒதுங்கியுள்ளது.முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள, முள்ளிவாய்க்காலில் கரை ஒதுங்கிய மியன்மார் படகு, அதில் பயணித்த 103 பேருடன் வெள்ளிக்கிழமை (20) காலை திருகோணமலை அஸ்ரப் துறைமுகத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. முள்ளிவாய்க்கால் மேற்கு கடற்கரையில் இப்படகு 103 பேருடன் வியாழக்கிழமை (19) கரை ஒதுங்கியது.

கடல் சீற்றத்தில் பாதிக்கப்பட்ட இந்த படகு திசைமாறி கரை ஒதுங்கி உள்ளதாக தெரிய வருகிறது. இப்படகில் 35 ஆண்களும் 25 பெண்களும் 43 குழந்தைகளுமாக மொத்தம் 103 பேர் பயணம் செய்துள்ளனர். இவர்களில் ஒரு கர்ப்பிணி தாயும் உள்ளதாக கடற்படை வட்டாரங்கள் தெரிவித்தன.படகில் இருப்பவர்களுக்கு உணவுகள்,குடிநீர், உடைகள் உட்பட அடிப்படைத் தேவைகள் வழங்கப்பட்டுக் கொண்டிருப்பதாகவும், இதில் உள்ள பலர் உடல்நிலை பாதிக்கப்பட்டு மயக்கநிலையிலும், சுகவீனமுற்றும் இருப்பதாக கடற்படை வட்டாரங்கள் மூலம் தெரிய வருகிறது. மொழி பிரச்சினை காரணமாக குறித்த நபர்களிடமிருந்து சரியான தகவல்களை தற்போது பெற்றுக் கொள்ள முடியவில்லை.என்றாலும், இவர்கள் இலங்கையில் தஞ்சமடைய வந்தார்களா? வேறு நாடுகளில் தஞ்சமடைய செல்லும் போது முள்ளிவாய்க்காலில் கரை ஒதுங்கினார்களா? என்ற சந்தேகமும் நிலவுகின்றது.

ஆயினும்,நாட்டில் இருக்க முடியாமல், எங்காவது போய்ச் சேருவோம் என்று தான், நாங்கள் மூன்று படகுகளில் புறப்பட்டோம். சீரற்ற கால நிலையும் கடல் சீற்றமும் கடுமையாகப் பாதித்தது. " என படகில் இருந்த ஒருவர் கூறினார்.

முள்ளிவாய்க்காலில் கரை ஒதுங்கிய படகில் இருந்தவர்களின் சோகங்களை, கேட்கும்போது மனிதப் பேரவலமாக பார்க்க முடிகின்றது.... மியன்மாரில் தொடரும் உள்நாட்டு யுத்தத்தில் பாதிக்கப்பட்டு, அகதிகளாகச் செல்லும் அப்பாவிகள் ஏராளம். இவர்களில், இலங்கையில் கரை ஒதுங்கியவர்களின், சோகக் கதைகள் பதற வைக்கின்றன......

முள்ளிவாய்க்காலில் கரை ஒதுங்கிய இந்த அகதிகள், வெள்ளிக்கிழமை அன்று 20 திருகோணமலைக்கு அழைத்து வரப்பட்டனர். மொழிபெயர்ப்பாளர்கள் ஊடாக, கடற்படையினர், மியன்மார் ரோஹிங்கியா அகதிகளுடன் உரையாடினர். மியன்மார் நாட்டில் இருந்து 16 தினங்களுக்கு முன்னர் மூன்று படகுகளில் நாங்கள் (ரோஹிங்கியோ முஸ்லிம்கள்) புறப்பட்டோம், எமது நாட்டில் எம்மால் வாழ முடியாத நிலையில் 110 பேர் புறப்பட்டோம். மூன்று படகுகளில் நாங்கள் பயணம் செய்து கொண்டிருந்த பொழுது, இடை நடுவில் கடல் சீற்றத்தால், 2 படகுகள் உடைந்து அமிழ்ந்து விட்டன. அந்த படகு களில் இருந்த எல்லோரையும் இந்த படகில் ஏற்றி னோம். இடை நடுவில் எம்மில் 6 பேர் இறந்து விட்டனர்.அதில் 2 பேர் பெரியவர்கள்,4 பேர் சிறு குழந்தைகள். அவர்களின் சடலங்களை கடலில் வீசி விட்டோம்."







## 04 குழந்தைகள் உட்பட ஆறு பேரின் சடலங்களை கடலில் வீசினோம்

எமது நாட்டிலிருந்து படகு கட்டணம் செலுத்தியே பயணத்தை தொடங்கினோம். இலங்கை பெறுமதியில் ஒருவருக்கு 04 இலட்சம் ரூபா வீதம் படகு கட்டணம் செலுத்தி னோம்." "எமது நாட்டைத் தவிர வேறு எங்காவது தப்பிச் சென்றால் போதும் என்றே புறப்பட்டோம். இலங்கைக்கு வரவேண்டும் என்று முடிவோடு நாங்கள் வரவில்லை என்று அகதிகள் கூறினர். இப் படகினை முள்ளிவாய்க்கால் கடற்கரையில் கரைசேர்ப்பதில் சிரமங்கள் இருந்தமையினால் இப்படகு திருகோணமலைக்கு கொண்டுவரப்பட்டதாக தெரிய வருகின்றது. இதற்கான ஏற்பாடுகள் திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபரின் தலைமையில் இடம்பெற்றிருந்தது.

படகில் உள்ளவர்களை முதலில் பாடசாலை ஒன்றில் தங்க வைப்பதற்கான ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்படுகின்றன. அத்துடன் சுகாதாரத்துறையினர் உட்பட அதனுடன் தொடர்புடைய திணைக்களங்கள் இவ்விடயம் தொடர்பில் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

### வாழைச்சேனை பிரதேச சபை

# திண்மக்கழிவகற்றும் விஷேட வேலைத்திட்டம் முன்னெடுப்பு

(எச்.எம்.எம்.பர்ஸான்)



கோறளைப்பற்று வாழைச்சேனை பிரதேச சபை பிரிவுக்குட்பட்ட பகுதியில் திண்மக் கழிவுகளை அகற்றும் விஷேட வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. அண்மையில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தம் காரணமாக குறித்த பகுதியில் திண்மக் கழிவுகளை அகற்ற பல்வேறு சிரமங்கள் ஏற்பட்டிருந்தன.

இதனைக் கருத்தில் கொண்டு ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.நழீம், அனர்த்த மீட்பு இயந்திரம் மற்றும் ஆளணியினர்களைக் கொண்டு பொது இடங்களில் காணப்படும் திண்மக்கழிவுகள் அப்புறப்படுத்தப்பட்டு வருகின்றன. அந்தவகையில், வாழைச்சேனை ஆயிஷா மகளிர் மகா வித்தியாலயத்தில் காணப்பட்ட திண்மக்கழிவுகள் வாழைச்சேனை பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் ஏ.எல்.ஏ.கபூரின் ஏற்பாட்டில் அப்புறப்படுத்தப்பட்டன. இந்த வேலைத்திட்டத்தை மேற்கொண்டமைக்கு பாடசாலை அதிபர் என்.சஹாப்தீன் நன்றிகளைத் தெரிவித்துள்ளார்.

# மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலக ஒளி விழா

(வெல்லாவெளி நிருபர்)



மட்டக்களப்பு மாவட்டம் மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலக உத்தியோகத்தர்களினால் வருடாந்தம் ஒழுங்குசெய்து நடாத்தப்படும் ஒளி விழா நிகழ்வு பிரதேச செயலாளர் சிவப்பிரியா வில்வரத்னம் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு அண்மையில் நடைபெற்றது. இதன்போது குறுமண்வெளி மெதடிஸ்த திருச்சபையின் சகோதரர் இராமையா ஜஸ்டின் பிரபாகரனின் ஆசிச்செய்தியுடன் நிகழ்வுகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து அலுவலக உத்தியோகத்தர்களினால் கரோல் கீதம், நாடகம், நடனம் போன்ற பல கலைநிகழ்வுகள் ஆற்றுகை செய்யப்பட்டதுடன், நத்தார் தாத்தா வருகைதந்து அலுவலக உத்தியோகத்தர்களின் பிள்ளைகளுக்கான பரிசில்களும் வழங்கிவைத்தார். இந்நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர் சத்யகௌரி தரணிதரன், நிருவாக உத்தியோகத்தர் வே. தவேந்திரன், அலுவலக பதவிநிலை உத்தியோகத்தர்கள் உட்பட அலுவலக உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# மட்டக்களப்பில் பாலகன் பிறப்பு விழா

(வெல்லாவெளி நிருபர்)



ஒளியின் மகனான குழந்தை இயேசு பாலகனின் பிறப்பு விழா உலகம் முழுவதும் கொண்டாடப்பட்டு வரும் நிலையில் மட்டக்களப்பு மாநகர சபையின் 2024 ஆண்டிற்கான ஒளி விழா மட்டக்களப்பு நகர மண்டபத்தில் நடைபெற்றது. மட்டக்களப்பு மாநகர சபையின் ஆணையாளர் எந்திரி நா.சிவலிங்கம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம அதிதிகளாக கிழக்கு பல்கலைக்கழகத்தின் சிரேஸ்ட விரிவுரையாளரும் அருட்தந்தையுமான அ.நவரெட்ணம் (நவாஜி) அடிகளார் மற்றும் சீயோன் தேவாலயத்தின் உதவிக் குரு க.திருக்குமரன் அடிகளார் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். மாநகர சபை ஆணையாளரால் குழந்தை இயேசுவின் திருவுருவச் சிலை மாதிரி மாட்டு தொழுவதற்குள் வைக்கப்பட்டதன் பின் கலைநிகழ்வுகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன. பிரதம அதிதிகளாக கலந்து கொண்ட அருட்தந்தையர்களால் இயேசு பாலகனின் பிறப்பை குறிக்கும் மகிமையின் ஆசியுறைகள் இடம்பெற்றன. பின்பு கிறிஸ்மஸை வரவேற்கும் ஒளிவிழா நிகழ்வில் கரோல் கீதங்கள், வரவேற்பு நடனங்கள், நாடகங்கள், தனிப்பாடல், மாணவர்களின் கலைப்படைப்புக்கள் அரங்கை அலங்கரித் திருந்ததுடன், அதிதிகளின்உரைகளும் இடம்பெற்றன.

# திருகோணமலை மாவட்ட செயலகத்தின் நத்தார் விழா



(கியாஸ் ஷாபி )



கிறிஸ்மஸ் பண்டிகையை முன்னிட்டு திருகோணமலை மாவட்ட செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஒளி விழா அண்மையில் நடைபெற்றது.

மாவட்ட அரசாங்க அதிபர் சாமிந்த ஹெட்டியாரச்சி தலைமையில் மாவட்ட செயலக புதிய ஒன்றுகூடல் மண்டபத்தில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

மாவட்ட செயலகத்தில் கடமையாற்றும் பல்லின சமூகங்களைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் அவரவர் பண்பாட்டு நிகழ்வுகளை எவ்வித வேறுபாடுமின்றி, காலா காலமாக ஒற்றுமையுடனும் சிறப்பாகவும் நிறைவேற்றி வருகின்றனர்.இந்த நிலையிலேயே, இந்த ஒளி விழாவும் இம்முறை சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு, நிகழ்ச்சிகளை சிறப்பாக வழங்கிய, சிறுவர் சிறுமிகளுக்கு மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் அதிகாரிகளினால், நத்தார் பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில், மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.சுதாகரன், மாவட்ட செயலக பதவி நிலை அதிகாரிகள், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், சிறுவர்கள் மற்றும் சிறுமிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

### மாகாண சபைகள் உள்ளூராட்சி பிரதி அமைச்சரிடம்

# வீதிகளை புனரமைத்து தருமாறு கோரிக்கை

(றியாஸ் ஆதம்)



ஏறாவூர் பிரதேசத்தில் நீண்டகாலமாக புனரமைக்கப்படாமல் மிகவும் மோசமான நிலையில் உள்ள வீதிகளை புனரமைத்து தருமாறு கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சர் எம்.எஸ். சுபைர் மாகாண சபைகள் உள்ளூராட்சி பிரதி அமைச்சர் றுவான் செனரத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

மாகாண சபைகள் உள்ளூராட்சி பிரதி அமைச்சரை அமைச்சில் அண்மையில் சந்தித்த போதே முன்னாள் அமைச்சர் சுபைர் மேற்குறித்த கோரிக்கையினை முன்வைத்தார். மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர் பிரதேசம் கடந்த வெள்ள அனர்த்தத்தின் போது முற்றாக பாதிக்கப்பட்டதாகவும் மழை காலங்களில் ஏறாவூர் பிரதேசத்தின் பல வீதிகள் நீரில் மூழ்கிக் காணப்படுவதாகவும் குறித்த வீதிகளினால் பயணிக்கின்ற பாடசாலை மாணவர்களும், பொதுமக்களும் பல்வேறு இன்னல்களை அனுபவித்து வருவதாகவும் முன்னாள் அமைச்சர் சுபைர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

எனவே ஏறாவூர் பிரதேச மக்களின் நலனைக் கருத்திற்கொண்டு மிகவும் மோசமான நிலையில் உள்ள வீதிகளை புனரமைத்தும், சில வீதிகளில் வடிகான் வசதிகளையும் ஏற்படுத்தி தருமாறு முன்னாள் அமைச்சர் சுபைர் மாகாண சபைகள் உள்ளூராட்சி பிரதி அமைச்சரிடம் கேட்டுக்கொண்டார்.

# மனித குலத்தின் அவஸ்தை: மாண்பை பேண வழி தேடும் குரல்கள்

## பேசப்படாத, ஆனால் கட்டாயம் பேசப்பட வேண்டிய விடயம்



ஏ.எச்.ஏ. ஹுஸைன்

மனித குலத்தில் அரைவாசிக்கும் மேற்பட்டோர் அனுபவிக்கும் அவஸ்தையை நின்று,

நிதானித்து, உற்றுக் கவனித்து, மதிப்பளித்து, மனித மாண்பைப் பேண வழிதேட வேண்டும் என்ற குரல்கள் இப்பொழுது பட்டி தொட்டி எங்கும் பலமாக, பரவலாக ஒலிக்கத் துவங்கியிருக்கின்றன.

கணக்கெடுப்புக்களின்படி, புள்ளி விவரங்கள் தரும் தகவல்களும் தரவுகளும் நாட்டின் மக்கள் தொகையிலும் உலக சனத் தொகையிலும் வாக்காளர் தொகையிலும் பாதிப்பங்கிற்கு மேற்பட்டோர் பெண்களாகும் என்ற விவரங்கள் உள்ளன.

அவ்வாறு இருந்தபோதிலும், இந்த உலகத்தைப் புதுப்பித்து, மனித குலத்தை உயிர்ப்பூட்டித் தக்க வைக்கும் மாதர்கள், மாதாந்தம் அனுபவிக்கும் இயற்கையான நிகழ்வின் அவஸ்தையை இந்த உலகம் இன்னமும் சீர் தூக்கிப் பார்க்கவில்லை என்ற ஆதங்கம் இப்பொழுது பரவலாக ஒலிக்கிறது.

"மாண்புடன் கூடியதாக மாதவிடாய் செயற்பாட்டை நிலைநிறுத்துவதற்கு பாலியல் உற்பத்தி சுகாதார உரிமைகளே அடிப்படை" எனும் இவ்வாண்டிற்கான தொனிப் பொருளில் அமைந்த நிகழ்வுகள் பரவலாக இடம்பெற்று வருகின்றன.

மாதவிடாய்க்கான மாண்பினைப் பேசுவோம் என்ற தொனிப்பொருளின் கீழ் பெண்களது சுகாதார மனித உரிமைகளையும் மெனபோஸ் பற்றியும் தெளிவுபடுத்தல்கள் அழுத்தம் கொடுத்துப் பேசப்பட்டு வருகின்றது.

சமூக நிறுவனங்களும் தன்னார்வத் தொண்டர் அமைப்புக்களும் மருத்துவபீட மாணவியர்களும் இவ்வாறு பல துறையினர் மாதவிடாயின் முக்கியத்துவம் மற்றும் சுகாதார நிலமைகள் பற்றிய விழிப்புணர்வுகளை வழங்குவதனையும் காணமுடிகின்றது. மாண்புடன் கூடிய மாதவிடாய்க்கான உலகளாவிய தெற்குக்




கூட்டணியும் (Global South Coalition for Dignified Menstruation) இந்த விடயத்தில் இணைந்து கொண்டுள்ளது. ஐ.நாவினால் சர்வதேச மாண்புடன் கூடிய மாதவிடாய்க்கான நாளாகப் பிரகடனப்படுத்தப்பட்டு ஒவ்வொரு வருடமும் டிசம்பர் 08ஆம் திகதி அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. இதுவரை காலமும் பேசப்படாது மறைக்கப்பட்டு வந்துள்ள, ஆனால், கட்டாயம் பேசப்பட வேண்டிய இந்த விடயத்தில் மனித குலத்தில் பெண்களும் ஆண்களும் அறிந்து, புரிந்து,

தெளிவு பெற வேண்டும் என்ற புரிதல் இப்பொழுது மெல்ல மெல்ல வரத் துவங்கியிருக்கிறது.

அது என்ன பேசப்படாத,ஆனால் கட்டாயம் பேசப்பட வேண்டிய விடயம்? அதற்காக சமூகம் என்ன செய்ய வேண்டும்? பாடசாலைகள் என்ன செய்ய வேண்டும் சிவில் சமூக அமைப்புக்களும் ஆர்வலர்களும் செயற்பாட்டாளர்களும் என்ன செய்ய வேண்டும்? அரச அதிகாரிகளதும் அலுவலர்களதும் பங்கு என்ன?

இந்த விடயங்கள் குறித்து விழுது ஆற்றல் மேம்பாட்டு மையம் நிறுவனம் மேற்கொண்ட விரிவான ஆய்வில் விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன. இலங்கைப் பெண்கள் தமது மாதாந்த மாதவிடாய்க் காலங்களில் உளரீதியாக

அவர்களது குடும்பத்தினாலும் சமூகத்தினாலும் வேலைத்தளங்களிலும் ஏதோவோர் விதத்தில் பெரிதும் பாதிப்புக்குட் படுத்தப்படுகின்றார்கள்.

இதற்கு முதன்மையான காரணமாக பிள்ளைகளுக்குப் பாலியற் கல்வி பற்றிய தெளிவூட்டலை வழங்காது சமூகமயமாக்கலிலே பெண்ணுக்குரிய மதிப்பினை வழங்கி வளர்க்கும் பொறுப்பினைத் தவிர்த்து விடுவதே பிரதான காரணமாக அமைகின்றது என்று ஆய்வுகளினடிப்படையில் தெரியவந்திருக்கிறது. மாதவிடாய்க் காலங்களில் பெண்கள் நாளாந்தம்

தமது குடும்பப் பொறுப்புக்களையும் கடமைகளையும் செய்ய நிர்ப்பந்திக்கப்படுகின்றார்கள். காலையில் எழுவது முதல் பெண்கள், சமையல், பிள்ளைகள் பராமரிப்பு, இதர குடும்ப அங்கத்தவர்களைக் கவனிப்பது, என்று பம்பரமாகச் சுழலும் நிலையில் அவளது போஷாக்கான உணவைப் பற்றியோ உடல்நிலை பற்றியோ கவனத்திலெடுப்பதில்லை. சில தருணங்களில் அவள் உடல் வலிகளைச் சகித்துக் கொண்டு செயற்பட வேண்டியுள்ளது.

அத்தருணத்தில் அவளது குருதிப்போக்கு அதிகரிக்குமாயின் மயக்கநிலை,

பதற்றம் போன்றவற்றுக்கு ஆட்பட்டு உளப்பாதிப்பினையும் உடற்பாதிப்பினையும் ஒருங்கே எதிர்கொள்கின்றாள். இந்தப் பாதிப்புக்கள் ஆண்கள், ஆண் பிள்ளைகள் எதிர்கொள்ளாதவை.

பாலியற் கல்வியை ஆரம்பக்கல்வி முதலே சொல்லிக் கொடுக்கத் தொடங்குவோமாயின் எல்லோரும், பெண்களதும் பெண் பிள்ளைகளினதும் பெறுமானத்தை உணர்ந்து அவர்களுக்கான மாண்பினைக் கொடுக்கத் தொடங்கி விடுவார்கள். பெண்கள் அவர்களது மாதவிடாய்க் காலத்திலே சில

தொழில்களில் கூட ஈடுபட முடியாது. குறிப்பாக கடற்தொழில், விவசாயம், வியாபாரம், ஆகியவற்றில் பெண்கள் வேலை இடங்களுக்குச் செல்ல அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

அதனால், பெண்களைத் தலைமையாகக் கொண்டு வாழும் பல குடும்பங்கள் மாதாந்தம் தொழிலையும் வருமானத்தையும் நாளாந்த ஜீவனோபாயத்தையும் இழப்பதனால்

பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்கின்றார்கள். அலுவலகங்களில், வர்த்தக நிலையங்களில் மற்றும் தொழிற்தளங்களில் பெண்கள் மாதவிடாய்க்காலங்களில் தொடர்ந்து நின்று கொண்டே பணியாற்றுவதனையும் அக்காலங்களிற் கூட பெண்களது நிலைமைகளைக் கவனத்திற் கொள்ளாது முகாமைத்துவம் இடைவிடாது வேலை வாங்குவதனையும் காண முடிகின்றது.

இவை மட்டுமல்ல, பெண்கள் தமது மாதவிடாய்க் காலங்களில் சமய அனுஷ்டானங்களில் ஈடுபட குடும்பமும் சமூகமும் அனுமதிப்பதில்லை. நற்காரியங்களில் ஈடுபடுவதற்கும் சமூகத் தடை உண்டு. "சமூகக் கட்டமைப்புக்களினால் வடிவமைக்கப்பட்ட கருத்தியல்களைப் பெரிதுபடுத்திக் கொண்டு அவற்றை இனிமேலும் அடியொற்றி நடக்காமல் மூடத்தனங்களை மாற்றியமைக்க வேண்டும். காலங்காலமாகப் பின்பற்றப்பட்டு வரும் பிற்போக்குவாத

கருத்தியல் காரணமாக பெண்களின் நலன்கள், மதிப்புக்கள் பேசப்படாது மறைக்கப்பட்டுக் கொண்டு வந்துள்ளன. கட்டாயம் பேசப்பட வேண்டிய பெண்களின் மாண்புறும் மாதவிடாய் எனும் விடயத்தை மறைக்காது துணிவுடன் முன்னெடுத்துச் செல்ல வேண்டும். அதற்கான காலம் இப்பொழுது கைகூடி வந்துள்ளது. இதற்கு

மாவட்டச் செயலக நிருவாகத்தின் முழுமையான ஆதவை நான் வழங்குவேன்." என மட்டக்களப்பு மாவட்டச் செயலாளர் ஜஸ்டினா ஜ/லேகா தெரிவித்தார்.



மட்டக்களப்பில் ஆசிரியர்கள், பாடசாலை அதிபர்கள், மாணவர்கள், பொதுச் சுகாதார மருத்துவ மாதுக்கள், பிரதேச செயலகங்களின் உத்தியோகத்தர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், பெற்றோர் என நூற்றுக்கு மேல் கூடியிருந்த ஆர்வலர்கள் மத்தியில் பேசும்போது அவர் இதனை வலியுறுத்தினார். இந்நிகழ்வு பற்றித் தெளிவூட்டிய விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தின் நிகழ்ச்சித் திட்ட தலைமை அதிகாரி இந்துமதி, இளவயதுத் திருமணங்கள், சிறுவர் துஷ்பிரயோகங்கள், பாலியல் துஷ்பிரயோகங்கள் அதிகரித்துள்ள

தற்போதைய காலகட்டத்தில் இந்தக் குற்றச் செயல்களுக்கான காரணங்களை ஆராயும்போது அதற்குப் பின்னணியில் மாதவிடாய் பற்றிய தெளிவு பெண்களிடமும் ஆண்களிடமும் இல்லாதது கண்டறியப்பட்டது. நாம் ஆரம்பித்த சிறுவர் கழகங்களின் ஊடாக பிள்ளைகளின் தாய்மாரும், பெண் பிள்ளைகளும் இந்த விடயங்களை முன்வைக்கத் துவங்கினார்கள். எனவே, ஆய்வுகளின் அடிப்படையில் இந்த விடயத்திற்கு கூடுதல் கவனமெடுக்க

வேண்டும் என்பது சிபார்சுகளாக முன்வைக்கப்பட்டது. அதனடிப்படையிலேயே




## ஐ.நா: மாண்புடன் கூடிய மாதவிடாய்க்கான நாள் பிரகடனம் டிசம்பர் 08

## மாதர்கள் அனுபவிக்கும் அவஸ்தையை உலகம் இன்னமும் சீர்தூக்கிப்பார்க்கவில்லை

மாண்புறும் மாதவிடாய் எனும் இந்தத் திட்டம் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. பெண்களது சுகாதார உரிமைகள், அவற்றினை அணுகுவதில் பெண்கள் எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் பாடசாலை மாணவியரின் கல்வியில் இந்த சுகாதார உரிமைகள் அதிகளவில் மறுக்கப்படுவதனையும், அதன்வழி அவர்கள் பாடசாலைகளிலிருந்து இடைவிலகுவதனால் அவர்களது கல்வியுரிமை இழக்கப்படுவதனையும் நாம் இனங்காண முடிந்தது. குறிப்பாகக் கிராமப்புறப் பாடசாலைகளில் பொருளாதார

ஏற்றத்தாழ்வினால் மாணவியர் மாதவிடாய்சார் பொருட்களைக் கொள்வனவு செய்வதில் பாரிய நெருக்கடியை கொவிற் தொற்றுநோய் காலப்பரப்பிற்குப் பின்னர் எதிர்கொள்ள ஆரம்பித்தனர்.

பொருளாதார நெருக்கடியும் பெரும் சவாலாக அமைந்திருந்தது. வறிய மட்டத்திலுள்ள குடும்பங்களினால் தமது பிள்ளைகளின் மாதவிடாய்க்காலங்களில் அவர்களுக்கான மாதவிடாய் அணையாடைகளை வாங்கிக் கொடுக்க முடியவில்லை. சில பாடசாலைகளில் மாதவிடாய் அணையாடையை (நாப்கின்கள்) மாற்றுவதற்கோ வாய்ப்புக்கள்

கிடைப்பதில்லை. தொடர்ச்சியாக அவள் அதனை அணிந்திருக்கும்போது அங்கு தொற்றுக்கள் எற்படலாம். பஸ்தரிப்பு நிலையங்கள், சந்தை போன்ற பொது இடங்களில் பெண்கள் தமது அணையாடைகளை மாற்றுவதற்கோ அவற்றைக் கழிப்பறைகளில் அகற்றுவதற்கோ பொருத்தமான வசதிகள் கிடையாது. அதன் விளைவு அடுத்து வரும் தினங்களில் அந்தச் சிறுமி நோய்வாய்ப்பட நேரிடும்போது அவளது தொடர் கற்றல் பாதிக்கப்படுகின்றது.

இவ்வாறு மாதந்தோறும் நிலைமை தொடருமிடத்து அவளது ஆரோக்கியம் பாதிப்புற நேரிடுகின்றது. இது அவளது கல்வி அடைவுகளில் தாக்கத்தினை

ஏற்படுத்துகின்றது. நாம் இவ்விடயத்தை அலட்சியம் செய்ய முடியாது. இதற்கு நாம் முக்கியத்துவம் கொடுத்தேயாக வேண்டும்.

நாளைய எதிர்காலத்தை உருவாக்கும் பாரிய பொறுப்பிலிருக்கும் ஒரு பெண்ணின் உடல் ஆரோக்கியம் மிக மிக முக்கியமானது என்பதனை நாம் மறுக்கக்கூடாது. இந்நிகழ்வில் பேசிய வைத்திய கலாநிதி சகாய தர்ஷினி ஜெயகுமார், பெண்களுக்கும் பெண் பிள்ளைகளுக்கும் தாங்கள் மாதவிடாய் அவஸ்தையில்



இருப்பதை வெளியே கதைக்கப் பயம், அது பற்றி தந்தைக்கு சகோதரனுக்கு அலுவலகத்திலுள்ளோருக்கும் தெரியப்படுத்தத் தயக்கம். அப்படியென்றால் பெண்களுக்கும் பெண் பிள்ளைகளுக்கும் மாதவிடாய் ஏற்பவடுவது ஒரு குற்றச் செயலா?

அது அப்படியொன்றும் குற்றச் செயலோ சாபக்கேடோ அல்ல, அதனை தெரியப்படுத்தி உங்கள் உறவை மரியாதைக்குரியதாக மதிப்பளிக்கக் கூடியதாக மாற்ற வேண்டும். இந்த விடயம் தொடர்பாக சமூகத்திலுள்ள பாரம்பரிய பிற்போக்கு எண்ணங்களையும் சொல்களையும் மாற்றியமைக்க வேண்டும்.

அப்பொழுதுதான் சமூகத்தில் பெண்களையும் பெண் பிள்ளைகளையும் பற்றி பரஸ்பர நம்பிக்கையும் மதிப்பும் மரியாதையும் மாண்பும் மலரத் துவங்கும்" என்றார். ஓர் பெண் பூப்பெய்திய காலம் முதல் அவள் மாதாந்த மாதவிடாய்ச் சக்கரத்தின்பால் இயற்கையாகவே அவளது உடல் செயற்படத் தொடங்குகின்றது. ஆனால் குடும்பங்களிலும் வேலைத் தலங்களிலும் பெண்களின் மாதவிடாய்க்

காலங்களில் அவர்களுக்கான ஓய்வை அல்லது சுகாதாரப் பழக்கங்களைப் பின்பற்றுவதற்கான வாய்ப்புக்களை வழங்குவது மிக அரிதாகவுள்ளது.

மாதவிடாய் சாதாரணமானதோர் விடயம் – அது பெண்களுக்கு இயற்கையானது என்ற மெத்தனப் போக்கினால் இந்த மதிப்பளிக்கப்படாத தன்மை குடும்பத்திலிருந்து ஆரம்பிக்கின்றது.

அதன் விளைவுதான் பெண் பிள்ளைகளும் பெண்களும் பல தொற்றுக்களுக்கு இலக்காவதிலிருந்து இறுதியில் அவர்கள் ஓர் குழந்தைக்குத் தாயாக முற்படும் வரையில் அப்பெண் பல அவஸ்தைகளையும் ஆரோக்கியக் குறைபாடுகளையும் அனுபவிக்க நேரிடுகின்றது. மாதவிடாய் என்பது பெண்களுக்கேயுரித்தான மதிக்கப்பட வேண்டிய ஓர் உடற்தொழிற்பாடு என்பதனை குடும்பத்தில் உள்ளவர்கள் எப்பொழுது ஏற்கத் தொடங்குகின்றார்களோ அன்றுதான்

மாண்புக்குரிய மாதவிடாய் என்ற எண்ணக்கரு எமது நாட்டிலும் பெருமை பெற ஆரம்பிக்கும். சமூகக் கட்டுப்பாடுகள் அல்லது கட்டமைப்புக்களின் விளைவாக பெண்கள் மாதவிடாய்க்காலங்களில் அவர்களது உணவு மற்றும் போஷாக்கு நிலைமைகளில் கவனஞ்செலுத்தாதது மட்டுமன்றி அக்காலங்களில் அவர்களது உள ஆரோக்கியத்தையும் பேணத் தவறுகிறார்கள் என்று பெண்களது உரிமைகள் சார்ந்து குரல் கொடுப்போரும் சுகாதாரத் துறையினரும் கூறுகின்றனர். மனித இருப்பினை உறுதிப்படுத்தும் பிள்ளைகளை உருவாக்கும் ஆற்றல் படைத்த பெண்கள் குழாமுக்கு எதனைச்

செய்தாலும் தமது நன்றிக்கடனைச் செலுத்திவிட முடியாது என ஒவ்வொரு மனிதனும் மனதார எண்ண வேண்டும்.

பெண்கள் ஒரு மனித சமூக அங்கத்தவர் என்ற ரீதியில் பெண்களை சமூகம் அங்கீகரிக்க வேண்டும். அந்த மாற்றம் வீட்டிலிருந்து தொடங்கி தேசம் என்ற வகையில் வியாபிக்க வேண்டும்.

அந்த நாள் என்று உதயமாகின்றதோ அன்றுதான் பெண்கள் தமக்கான மாண்பினை இப்பூமியிலே பெற்றுக்கொண்டவர்களாவர். இவ்வேளையில் மாதவிடாய் மாண்பு என்பதனை அனைவரும் புரிந்து கொள்ள வழியேற்படுத்துவோமாயின் சுகாதாரமும் மனித உரிமையும் இதற்கான திறவுகோலாக அமைந்துவிடும். இணைந்த குரல்களாக, பழைமையில் ஊறிப்போன பிற்போக்குவாதங்களை உடைப்பதன் மூலம் நம் நாட்டிலும் ஆண்,பெண் என்ற பாரபட்சமற்ற நிலைமைகளை உருவாக்க முடியும்.

# தமிழ்நாடு சுற்றுலாத்துறையில் சாதனை; ராஜேந்திரன் தெரிவிப்பு



தமிழ்நாடு சுற்றுலாப் பயணிகளின் வருகை எண்ணிக்கையை 28.71 கோடியாக உயர்த்தி சாதனை படைத்திருக்கிறது என தமிழக அரசின் சுற்றுலாத்துறை அமைச்சர் ராஜேந்திரன் அறிக்கை வெளியிட்டுள்ளார். தமிழ்நாடு முதலமைச்சராக மு.க.ஸ்டாலின் தலைமையில் திராவிட அரசு அனைத்து துறைகளிலும் தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாக உயர்த்துவதற்கான திட்டங்களை நிறைவேற்றி செயல்படுத்தி வருகிறது. பல சாதனைகளையும் படைத்து வருகின்றது. அந்தவகையில் சுற்றுலாத்துறையைப் பொறுத்தவரை இந்த அரசு பொறுப்பேற்ற நாள்முதல் புத்துணர்வுடன் செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாடு 43,283 இற்கும் மேற்பட்ட பழமையான கோயில்களைக் கொண்டிருக்கிறது. 1,076 கி.மீ. நீளமுள்ள நீண்ட கடற்கரை, 18 வனவிலங்கு சரணாலயங்கள், 5 தேசிய பூங்காக்கள், 17 பறவைகள் சரணாலயங்கள், 5 புலிகள் காப்பகங்கள், யுனெஸ்கோவால் உலக பாரம்பரியச் சின்னங்களாக அறிவிக்கப்பட்ட 6 தலங்கள் உள்ளிட்ட உலகோரை கவரக்கூடிய பல்வேறு சுற்றுலாத்தளங்களைத் தன்னகத்தே கொண்டு தனிச்சிறப்போடு விளங்குகிறது. தொன்மையும் வளமும் கொண்டு திகழ்கின்ற தமிழ்நாட்டின் சுற்றுலாத் தளங்கள் உலகம் முழுவதும் கவனம் பெறுகின்ற வகையில் சுற்றுலா வளர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. தமிழ்நாட்டில் சுற்றுலாத் துறையை வளர்த்தெடுக்கும் தொலைநோக்குத் திட்டத்துடன் முத்தமிழறிஞர் வைத்தியர் கலைஞர் அவர்கள் 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தைத் தோற்றுவித்தார். அதே வழியில் தமிழ்நாடு முதலமைச்சர் தமிழ்நாட்டை இந்தியாவின் சுற்றுலாத் தலைநகரமாக மாற்ற உதவும் 'தமிழ்நாடு சுற்றுலா கொள்கை-2023' ஐ வெளியிட்டார். அடுத்த ஐந்து ஆண்டுகளில் மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுற்றுலாவின் பங்களிப்பை 12% ஆக உயர்த்துதல், தமிழகத்தில் சுற்றுலா மற்றும் அதனைச் சார்ந்துள்ள தொழில்களில் 25 இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்புக்களை உருவாக்க வேண்டும் எனும் உயரிய குறிக்கோளுடன் சுற்றுலாக் கொள்கை நடைமுறைப்படுத்தப்படுகிறது.

# நெல்லையில் கொட்டப்பட்ட கழிவுகள் அபாயகரமற்றது;
## ஆய்வுக்குழு அறிக்கை வெளியீடு



கேரளா மாநில மருத்துவக் கழிவுகள், திண்மக்கழிவுகள் மற்றும் இறைச்சிக் கழிவுகள் தமிழக மாவட்டங்களில் கொட்டப்படுவது தொடர்ந்தும் நடைபெற்று வருகிறது. சமீபத்தில் நெல்லை மாவட்டம் நடுக்கல்லூர் உள்ளிட்ட கிராமங்களில் கேரள கழிவுகள் கொட்டப்பட்டன. இது தொடர்பாக புகார் அளிக்கப்பட்ட நிலையில் 3 நாட்களுக்குள் கேரள அரசு பொறுப்பேற்று கழிவுகளை அகற்ற வேண்டும் என தேசிய பசுமை தீர்ப்பாயம் உத்தரவிட்டிருந்தது. இதனைத் தொடர்ந்து கேரள அரசு ஒரு குழுவை அமைத்து கழிவுகளை ஆய்வு செய்து அறிக்கை தாக்கல் செய்ய கேட்டுக்கொண்டது. அதனைத்தொடர்ந்து 8 பேர் கொண்ட கேரள மாநில அதிகாரிகள் குழு கழிவுகள் கொட்டப்பட்ட பல்வேறு இடங்களுக்கு சென்று ஆய்வு மேற்கொண்டது. எந்த வகையான கழிவுகள் கொட்டப்பட்டன. அவைகள் அபாயகரமானதா? என்பது குறித்த தரவுகளை இந்த குழுவினர் சேகரித்தனர். இது தொடர்பாக அவர்கள் கேரள மாநில அரசுக்கு அறிக்கை தாக்கல் செய்தனர். இந்த நிலையில் ஆய்வு மேற்கொண்ட அதிகாரிகள் குழு "மருத்துவக் கழிவுகளில் சோதனைக்குப் பயன்படுத்தப்படும் மாதிரிகளே அதிகம் உள்ளன. கொட்டப்பட்ட மருத்துவக் கழிவுகள் அபாயகரமானது இல்லை. பசுமை தீர்ப்பாயத்தின் உத்தரவின்படி கழிவுகளை அகற்றுவது பற்றி கேரள அரசு நடவடிக்கை எடுக்கும்" எனத் தெரிவித்துள்ளது.




# ஜெனரல் பலியான ஹெலிகொப்டர் விபத்து ; மர்மம் வெளியானது



இந்திய பாதுகாப்புப் படைத் தளபதி ஜெனரல் பிபின் ராவத் (Bipin Rawat), அவரது மனைவி மதுலிகா ராவத் மற்றும் 11 பேரின் உயிரைப் பறித்த ஹெலிகொப்டர் விபத்து "மனிதத் தவறால்" ஏற்பட்டது என்பதை இந்திய விமானப்படை உறுதிப்படுத்தியுள்ளது.

மக்களவையில் தாக்கல் செய்யப்பட்ட பாதுகாப்பு நிலைக்குழு அறிக்கையின்படி, பதின்மூன்றாவது பாதுகாப்புத் திட்ட காலத்தில் 34 விமான விபத்துகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஜெனரல் பிபின் ராவத்தை ஏற்றிச் சென்ற Mi-17 ஏ5 ஹெலிகொப்டர் உட்பட 16 விபத்துக்கள் மனிதத் தவறுகளால் நிகழ்ந்தன. ஏனைய விபத்துகள் தொழில்நுட்பக் குறைபாடு, பொருள் சேதம் மற்றும் பறவை தாக்குதல் என்பவற்றுடன் தொடர்புபட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜெனரல் பிபின் ராவத்தின் மரணத்திற்கு வழிவகுத்த சோகமான விபத்து 2021 டிசம்பர் 8 அன்று தமிழ்நாட்டின் குன்னூர் பகுதியில் நிகழ்ந்தது. ஜெனரல் ராவத், அவரது மனைவி மற்றும் 11 பேர் IAF Mi-17 ஏ5 ஹெலிகொப்டரில் வெலிங்டனில் உள்ள பாதுகாப்பு சேவைகள் பணியாளர் கல்லூரிக்கு (DSSC) செல்லும் வழியிலே இறந்தனர், அங்கு அவர் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களிடம் உரையாற்ற திட்டமிடப்பட்டது. சூலூர் இந்திய விமானப்படை நிலையத்திலிருந்து முற்பகல் 11:50 மணியளவில் ஹெலிகொப்டர் புறப்பட்டது, ஆனால் அதன் இலக்கிலிருந்து 10 கிலோமீட்டர் தொலைவில் சுமார் 12:20 மணியளவில் அது விபத்துக்குள்ளானது.

ஹெலிகொப்டர் அடர்ந்த மூடுபனியில் குறைந்த உயரத்தில் பறந்து கொண்டிருந்தபோது பள்ளத்தாக்கில் மோதி மரங்கள் வழியாக விழுந்ததாக நேரில் பார்த்தவர்களின் சாட்சியங்கள் மற்றும் அதிகாரப்பூர்வ ஆதாரங்கள் தெரிவிக்கின்றன. ஹெலிகொப்டர் தரையில் வீழ்ந்து தீப்பிடித்து எரிந்த போது, அதில் பயணித்த 14 பேரில் 13 நபர்கள் உயிரிழந்தனர். விபத்தில் குரூப் கேப்டன் வருண் சிங் மட்டும் உயிர் தப்பினார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஜெய்ப்பூரில் தீ விபத்து 11பேர் பலி, 43 பேர் காயம்



ஜெய்ப்பூரில் அமைந்துள்ள எரிபொருள் நிலையத்தில் வெள்ளிக்கிழமை (20) ஏற்பட்ட தீ விபத்தில் குறைந்தது 11பேர் உயிரிழந்ததுடன், 43பேர் காயமடைந் துள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஜெய்ப்பூர்-அஜ்மீர் நெடுஞ்சா லையில் நேற்று காலை ஒரு டிரக் வாகனம், எரிவாயு ஏற்றிச் சென்ற கனரக வாகனத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியது. இதனால், நகரின் பாங்க்ரோட்டா பகுதியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் தீ பரவியதாக தெரிவிக்கப்படுகிறது. விபத்தினை அடுத்து, எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பல வாகனங்களும் தீயில் எரிந்து நாசமாகின. எரிவாயு ஏற்றிச் சென்ற கனரக வாகனத்தின் மீது மோதிய லொறியில் இரசாயனம் இருந்ததே இந்த தீ விபத்துக்கான காரணம் என ஆரம்ப கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

தீ விபத்து குறித்து தகவல் கிடைத்ததும், 20 தீயணைப்பு வாகனங்கள் விரைந்து வந்து தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டன. மேலும் காயமடைந்தவர்களை ஜெய்ப்பூரில் உள்ள சவாய் மான் சிங் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தீயணைப்பு வாகனங்கள் தீயை அணைக்க முயன்றபோது எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இருந்து பாரிய தீப்பிழம்புகள் வெளியேறியதாகவும் தெரிவிக்கப்படுகிறது. சம்பவத்திற்குப் பிறகு, ராஜஸ்தான் முதல்வர் பஜன்லால் சர்மா, சவாய் மான் சிங் வைத்தியசாலைக்கு சென்று காயமடைந்தவர்களுக்கு சிறந்த சிகிச்சையை உறுதி செய்ய அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

# ஒரே நாடு ஒரே தேர்தல் மசோதா கூட்டுக்குழு பரிசீலனைக்கு அனுப்பி வைப்பு



ஒரே நாடு ஒரே தேர்தல் மசோதா தொடர்பாக 39 பேர் கொண்ட நாடாளுமன்ற கூட்டுக்குழு அமைக்கப்பட்டுள்ளது. நாடாளுமன்ற தேர்தல் மற்றும் மாநில சட்டசபை தேர்தல்களை ஒரே நேரத்தில் தேர்தல் நடத்த, பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. இதற்கான சட்டத்தை அமுல்படுத்த வேண்டும் என்றால் பல சட்ட திருத்தங்கள் செய்யப்பட வேண்டுமென ராம்நாத் கோவிந்த் குழு தனது அறிக்கையில் தெரிவித்திருந்தது.

இதன்படி 3 சட்டப் பிரிவுகளில் திருத்தம், 12 புதிய சட்டப் பிரிவுகள் சேர்ப்பு மற்றும் யூனியன் பிரதேசங்களான டெல்லி, ஜம்மு - காஷ்மீர், புதுச்சேரி ஆகியவற்றுக்கான சட்டங்களில் திருத்தம் என, மொத்தம் 18 சட்டத்திருத்தங்கள் செய்ய வேண்டும் என பரிந்துரைக்கப்பட்டது.

ராம்நாத் கோவிந்த் குழு அளித்த பரிந்துரைகளின் அடிப்படையில் ஒரே நாடு ஒரே தேர்தல் மசோதா தயாரிக்கப்பட்டது. இந்த மசோதாவுக்கு, கடந்த 12ம் திகதி மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது. இதையடுத்து, கடந்த 17ம் திகதி மக்களவையில் ஒரே நாடு ஒரே தேர்தல் மசோதா தாக்கல் செய்யப்பட்டது. இந்த மசோதாவிற்கு எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்தன.

இதையடுத்து மசோதாவை நாடாளுமன்ற கூட்டுக்குழுவிற்கு அனுப்ப பரிந்துரை செய்வதாகவும், கூட்டுக்குழு பரிசீலனையின் போது அனைத்துக் கட்சிகளும் விரிவாக கருத்து கூறலாமென மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா தெரிவித்தார்.

இந்நிலையில், வெள்ளிக்கிழமை காலை 11 மணியளவில் நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் ஆரம்பிக்கப்பட்ட போது, அம்பேத்கர் விவகாரம் தொடர்பாக மத்திய மந்திரி அமித்ஷா மன்னிப்பு கேட்பதுடன் தனது பதவியை இராஜினாமா செய்ய வேண்டும் என்றும் ராகுல் காந்தி மீதான வழக்குப்பதிவு நடவடிக்கையை கண்டித்தும் எதிர்க்கட்சிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டன. எதிர்க்கட்சிகள் அமளியால் அவையை அதன் தலைவர் ஓம் பிர்லா திகதி குறிப்பிடாமல் ஒத்திவைப்பதாக அறிவித்தார்.

ஒத்திவைக்கப்படுவதற்கு சில நிமிடங்களுக்கு முன்பு, ஒரே நாடு ஒரே தேர்தல் நடத்துவதற்காக மத்திய சட்டத்துறை அமைச்சர் அர்ஜுன் ராம் மேக்வால் மக்களவையில் கூட்டுக்குழுவிற்கு பரிந்துரைக்கும் தீர்மானத்தை முன்மொழிந்த நிலையில், எதிர்க்கட்சிகள் எழுப்பிய கூச்சலுக்கு இடையே குரல் வாக்கெடுப்பு மூலம் நிறைவேற்றப்பட்டது. அதேபோல, மாநிலங்களவை ஒத்திவைக்கப்படுவதற்கு சில நிமிடங்களுக்கு முன்பு, கூட்டுக்குழுவிற்கான தீர்மானம் குரல் வாக்கெடுப்பு மூலம் நிறைவேற்றப்பட்டது.

ஒரே நாடு ஒரே தேர்தல் மசோதா தொடர்பாக 39 பேர் கொண்ட நாடாளுமன்ற கூட்டுக்குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்த கூட்டுக்குழுவில் 27 மக்களவை உறுப்பினர்கள் மற்றும் 12 மாநிலங்களவை உறுப்பினர்கள் இடம்பெற்றுள்ளனர். இதில் பா.ஜ.க இனை சேர்ந்த முன்னாள் மத்திய அமைச்சர் அனுராக் தாக்கூர் மற்றும் பிபி சவுத்ரி மற்றும் காங்கிரசின் பிரியங்கா காந்தி வத்ரா ஆகியோர் மக்களவை உறுப்பினர் பட்டியலில் இடம்பெற்றுள்ளனர்.



# 'மிஸ் இந்தியா' வென்றெடுத்த அமெரிக்க பெண்

'மிஸ் இந்தியா' பட்டத்தை கலிபோர்னியா மாகாணத்தை சேர்ந்த 19 வயது மாணவியான கேட்லின் சாண்ட்ரா பெற்றுக்கொண்டுள்ளனர்.

வோஷிங்டன் நியூ ஜெர்சியில் நடந்த 2024 மிஸ் இந்தியா யு.எஸ்.ஏ. பட்டத்தை சென்னையில் பிறந்த, இந்திய அமெரிக்க இளம்பெண் கேட்லின் சாண்ட்ரா பெற்றுள்ளார். நியூ ஜெர்சியில் இந்திய விழாக் குழு ஏற்பாடு செய்த மிஸ் இந்தியா யு.எஸ்.ஏ. மற்றும் மிஸிஸ் இந்தியா யு.எஸ்.ஏ, மிஸ் டீன் இந்தியா யு.எஸ்.ஏ. போட்டிகள் நடைபெற்றன.

இப்போட்டியின் மூன்று பிரிவுகளில் 25 மாகாணங்களில் இருந்து 47 போட்டியாளர்கள் கலந்து கொண்டனர். அவர்களில் 19 வயதான கேட்லின், மிஸ் இந்தியா யு.எஸ்.ஏ. பட்டத்தைப் பெற்றார். சென்னையில் பிறந்த கேட்லின் கடந்த 14 ஆண்டுகளாக அமெரிக்காவில் வசித்து வருகிறார். கலிபோர்னியா பல்கலைக்கழகத்தில் 2ம் ஆண்டு பட்டப்படிப்பு படித்து வரும் கேட்லின், மாடலிங் மற்றும் சினிமா துறையில் ஜொலிக்க விரும்புவதாக தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய அவர், "நம் சமூகத்தில் எப்போதும் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தவே நான் விரும்புகிறேன். பெண்களுக்கு அதிகாரமளித்தல் மற்றும் எழுத்தறிவு ஆகியவற்றில் கவனம் செலுத்த விரும்புகிறேன்" என்று கேட்லின் தெரிவித்தார்.

மேலும் இல்லினாயைச் சேர்ந்த சம்ஸ்கிருதி சர்மா "மிஸிஸ் இந்தியா யு.எஸ்.ஏ." என்ற பட்டத்தையும், வோஷி ங்டனைச் சேர்ந்த அர்ஷிதா கத்பாலியா "மிஸ் டீன் இந்தியா யு.எஸ்.ஏ." பட்டத்தையும் வென்றனர்.

# உக்ரேனுடன் சமரசத்திற்கு தயார்; ரஷ்ய ஜனாதிபதி

உக்ரேனுடனான போரை முடிவுக்கு கொண்டு வரும் விவகாரத்தில் அமெரிக்காவின் அடுத்த ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள டொனால்ட் ட்ரம்புடன் சமரசம் செய்து கொள்ளத் தயாராகவுள்ளதாக ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் தெரிவித்தார்.

அதேநேரம், உக்ரேனுடன் பேச்சுவார்த்தையை தொடங்குவதற்கு ரஷ்யாவுக்கு நிபந்தனைகள் இல்லை எனவும், ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கி உட்பட யாருடனும் பேச்சுவார்த்தை நடத்த தயாராக இருப்பதாகவும் ஆனால், மோதல் நீடித்தால் உக்ரேனின் நிலைமை மேலும் மோசமடையும் எனவும் அவர் எச்சரித்தார். மேலும், உக்ரேனுடன் ஒரு தற்காலிக போர்நிறுத்தத்திற்கு உடன்படுவதற்கான



யோசனையை ரஷ்ய ஜனாதிபதி நிராகரித்ததுடன், நீண்ட கால அமைதி ஒப்பந்தம் மட்டுமே வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

வியாழன்(19) அன்று நடைபெற்ற ரஷ்ய அரச தொலைக்காட்சியொன்றின் வருடாந்த கேள்வி-பதில் அமர்வின் போது இந்த விடயங்களை தெரிவித்த புட்டின், அமெரிக்க நிருபர் ஒருவரிடம் உக்ரேன் போர் விவகாரத்தில் தான் ட்ரம்ப்பை சந்திக்க தயாராகவுள்ளதாகவும் அமெரிக்க முன்னாள் ஜனாதிபதியுடன் பல வருடங்களாக நான் இது குறித்து கலந்தாலோசிக்கவில்லை எனவும் ரஷ்ய ஜனாதிபதி குறிப்பிட்டார்.

அதேநேரம், ரஷ்யா பலவீனமான நிலையில் உள்ளதாக ட்ரம்ப் கூறிய விமர்சனத்தை புட்டின் இதன்போது நிராகரித்தார். 2022 ஆம் ஆண்டு உக்ரைனில் படையினரை வரவழைத்ததில் இருந்து ரஷ்யா மிகவும் வலுவாக உள்ளது என வலியுறுத்தினார்.




# ஜீரியாவில் கூட்ட நெரிசல்; 30 சிறுவர்கள் பலி



நைஜீரியா பாடசாலைக் கண்காட்சியில் ஏற்பட்ட கூட்டநெரிசலில் சிக்கி 35 சிறுவர்கள் உயிரிழந்ததுடன் 6 பேர் படுகாயமடைந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

நைஜீரியாவின் தென்மேற்கு நகரமான இபாடானில் இருக்கும் இந்த பாடசாலையில் 100 இற்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் கல்வி பயின்று வருகின்றனர். இந்த சூழலில் கிறிஸ்துமஸ் பண்டிகை ஆண்டு நிறைவையொட்டி அந்த பாடசாலையில் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இந்த நிகழ்ச்சியை கண்டு களிக்க மாணவ மாணவியரின் குடும்பத்தினரும் சென்றிருந்ததுடன் நிகழ்ச்சியின் போது பரிசு பொருட்களும் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கண்காட்சியின் போது எதிர்பாராத விதமாக கூட்ட நெரிசல் ஏற்பட்டு அந்தக் கூட்ட நெரிசலில் சிக்கி 30 பேர் உயிரிழந்ததாக முதற்கட்ட தகவல் வெளியாகியிருந்தது. மேலும் பலர் காயமடைந்தனர் எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. தகவல் அறிந்து விரைந்து வந்த பொலிஸார் காயமடைந்தவர்களை மீட்டு அருகில் உள்ள வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதித்தனர்.

இந்நிலையில் தற்போது பலி எண்ணிக்கை 35 ஆக உயர்ந்துள்ளதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த சம்பவம் தொடர்பாக 8 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் மாநில குற்றப்புலனாய்வுத் துறையின் குற்ற பிரிவு விசாரணையை ஆரம்பித்துள்ளதாகவும் ஓயோ மாநில பொலிஸ்செய்தி தொடர்பாளர் அடேவாலே ஒசிபெசோ தெரிவித்தார்.

# நியூசிலாந்தில் பொருளாதார மந்தநிலை

நியூசிலாந்து நாட்டின் மூன்றாவது காலாண்டில் பொருளாதார மந்தநிலை ஏற்பட்டுள்ளது என தகவல் வெளியாகியுள்ளது. நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (புவீ) எதிர்பாராத விதமாக 2024 மூன்றாம் காலாண்டில் 1மூ சரிவை கண்டுள்ளது. பொருளாதார மந்த நிலையில் நுகர்வு பொருட்களின் விலை அதிகரித்துள்ளதால் பொதுமக்களின் கடன் நெருக்கடியும் அதிகரித்துள்ளது. கொரோனா தொற்றுக்களின் போது ஏற்பட்ட பொருளாதார சரிவை தவிர்த்து நியூசிலாந்து நாட்டின் பொருளாதாரம் 1991 இற்கு பிறகு




மிகவும் மோசமான பெருமந்தத்தை தற்போது சந்தித்துள்ளது. அடுத்த காலாண்டில் நியூசிலாந்து நாட்டின் பொருளாதாரம் உயருமென அந்நாட்டின் நிதி அமைச்சர் நிக்கோலா வில்லிஸ் நம்பிக்கை தெரிவித்துள்ளார். சமீப காலமாக நியூசிலாந்து நாட்டில் அதிகரித்துள்ள வேலை வாய்ப்பின்மை பிரச்சனை பொருளாதார மந்தநிலை மற்றும் வட்டி விகிதங்கள் அந்நாட்டு மக்கள் வேறு நாடுகளுக்கு குடி பெயர்ந்து செல்ல வழிவகை செய்துள்ளது.

# ஆப்கானிஸ்தானில் இருவேறு விபத்துகளில் 52 பேர் பலி



தென்கிழக்கு ஆப்கானிஸ்தானில் நடந்த இருவேறு வீதி விபத்துகளில் மொத்தம் 52 பேர் உயிரிழந்தனர்.

தென்கிழக்கு ஆப்கானிஸ்தானில் கசினி மாகாணத்திலுள்ள ஷ ாபாஸ் கிராமத்தின் அருகே நெடுஞ்சாலையில் நிலக்கரி ஏற்றி சென்ற லொறியின் மீது பஸ் மோதி விபத்துக்குள்ளானது. அதேபோல், கிழக்கு மாவட்டமான அண்டாரில் உள்ள நெடுஞ்சாலையில் சென்ற பஸ் மீது லொறி மோதி விபத்துக்குள்ளானது.

இதனை தொடர்ந்து மீட்புப்படையினர் தீவிரமாக மீட்பு பணிகளை மேற்கொண்டனர். இருவேறு வீதி விபத்துகளில் மொத்தம் 52 பேர் உயிரிழந்தனர்.

மேலும் 65 பேர் பலத்த காயம் அடைந்தனர். காயமடைந்தவர்கள் மேலதிக சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதில் சிலரது நிலைமை மோசமாக காணப்படுவதால் பலி எண்ணிக்கை அதிகரிக்கும் என அஞ்சப்படுகிறது. சாரதியின் அலட்சியப்போக்கினாலும் முறையான போக்குவரத்து வசதி இல்லாத காரணத்தினாலும், அந்நாட்டில் விபத்துகள் ஏற்படுவது தொடர் கதையாகி வருகின்றது. கடந்த மார்ச் மாதம் ஆப்கானிஸ்தானின் தெற்கு மாகாணத்தில் பஸ் ஒன்று எரிபொருள் ஏற்றி வந்த லொறியின் மீது மோதியதில் 20 பேர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# 4 பாகிஸ்தான் நிறுவனங்களுக்கு அமெரிக்கா பொருளாதாரத் தடை

நீண்ட தூரம் சென்று தாக்குதல் நடத்தும் ஏவுகணை தயாரிப்பு திட்டத்தில் ஈடுபட்டுள்ள பாகிஸ்தானைச் சேர்ந்த 4 நிறுவனங்களுக்கு எதிராக அமெரிக்கா பொருளாதாரத் தடை விதித்துள்ளது.

பாகிஸ்தானின் அணு ஆயுதம் கொண்ட நீண்டதூ ர ஏவுகணைத் திட்டம் தொடர்பாக அந்நாட்டின் மீது புதிய பொருளாதாரத் தடைகள் விதிக்கப்பட்டுள்ளன.



பாகிஸ்தானின் ஏவுகணைத் திட்டத்தை மேற்பார்வையிடும் அரசாங்கத்திற்குச் சொந்தமான தேசிய மேம்பாட்டு நிறுவனம் உள்ளிட்ட 4 நிறுவனங்கள் மீதே பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டுள்ளது என அமெரிக்கா வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில், குறிப்பிடப்பட்டுள்ளது.

நீண்ட தூரம் சென்று தாக்குதல் நடத்தும் ஏவுகணைத் திட்டத்தில் ஈடுபட்டுள்ள என்டிசி மற்றும் 3 வர்த்தக நிறுவனங்களுக்கு அமெரிக்கா விதித்துள்ள பொருளாதாரத் தடையானது துரதிஷ்டவசமானது மற்றும் ஒருதலைப்பட்சமானது. அமெரிக்க அரசின் இந்த செயற்பாடு மிகவும் வருத்தமளிக்கிறது என பாகிஸ்தான் வெளியுறவுத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

# துனிசியாவில் அகதிகள் படகு விபத்து;

**20 பேர் நீரில் மூழ்கி பலி**

துனிசியாவின் மத்தியதரைக்கடலோரப் பகுதியில் அகதிகள் படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 20 பேர் நீரில் மூழ்கி உயிரிழந்தனர்.

ஸ்ஃபாக் பகுதியிலிருந்து சுமார் 24 கிலோமீட்டர் தொலைவில் உள்ள கடல் பகுதியில் அகதிகள் படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

விபத்துப் பகுதியிலிருந்து ஐந்து பேரை கடலோர காவல் படையினர் மீட்டனர். மேலும் அங்கிருந்து 20 உடல்கள் மீட்கப்பட்டன. அந்தப் பகுதியில் தேடுதல் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருவதுடன் படகில் பயணித்தவர்களின் விபரம் இதுவரை தெரியாததால் மீட்புப்பணி



தாமதப்படுத்தப்பட்டது என துனிசியா நாட்டு தேசிய பாதுகாப்பு படை அறிக்கை வெளியிட்டுள்ளது. கடல் வழியாக அகதிகள் கடத்தப்படுவதை தடுக்கும் நடவடிக்கையை ஐரோப்பிய நாடுகளின் உதவியுடன் துனிசியா மேற்கொண்டு வந்தாலும் இதுபோன்ற சம்பவங்கள் தொடர்ந்தும் நடைபெற்று வருகின்றன. கடந்த வாரம் கூட கடலில் மூழ்கி உயிரிழந்த 9 அகதிகளின் உடல்களை துனிசியா கடலோர காவல் படையினர் மீட்டது குறிப்பிடத்தக்கது.

# பல இலட்சங்கள் வருமானம் பெற்ற கிறிஸ்துமஸ் தாத்தா

கிறிஸ்துமஸ் கொண்டாட்டத்திற்கு இன்னும் சில நாட்களே உள்ள நிலையில், மக்கள் ஆராவாரத்தோடு அதற்காக தயாராகி வருகின்றனர். இது ஒருபுறம் இருக்க மறுபுறம் கிறிஸ்துமஸ் தாத்தா வேடம் அணிந்து ரூ.44 இலட்சம் இந்திய ரூபாய் சம்பாதித்து இருக்கிறார் முதியவர் ஒருவர்.

விநியோக முகாமையாளராக முழுநேரம் வேலை செய்து வந்துள்ள எடி ரிச் என்ற முதியவர் தனது பதவியிலிருந்து ஓய்வு பெற்றப்பிறகு, 1995 ஆம் ஆண்டு தனது அண்டை வீட்டுக்காரர் கேட்டுக் கொண்டதற்கு



இணங்க கிறிஸ்துமஸ் தாத்தாவாக வேடமணிய தொடங்கியுள்ளார். இப்படி ஆரம்பத்தில் வேடிக்கையாக தொடங்கிய இவருக்கு, கிறிஸ்துமஸ் தாத்தாவாக வேடமணிவது பிடித்துப்போக கிறிஸ்துமஸ் காலங்களில் இணையத்தில் வேடமணிந்து நடிக்க ஆரம்பித்துள்ளார். இவரது நகைச்சுவையான பேச்சு மக்களுக்கு பிடித்துப்போக. நல்ல பிரபலமும் ஆகியுள்ளார். இதன்மூலம் இலட்சக்கணக்கில் பணமும் கிடைத்துள்ளது.

பணி ஓய்வுக்கு பிறகு என்ன செய்யலாம்? என்று யோசித்து கொண்டிருந்த எடிக்கு இது நல்ல வாய்ப்பாக அமைந்துள்ளது. இதனால் தொடர்ந்து பல இடங்களில் கிறிஸ்துமஸ் தாத்தாவாக நடித்து வந்துள்ளார். இதற்கு எடியின் மகன் கிறிஸ் பெரிதும் உதவி வந்துள்ளார். கிறிஸ் இதற்காக பிரத்யேக ஸ்கிரிப்டுகள் எழுதுவது, வீடியோ எடிட்டிங் செய்வது போன்றவற்றை கவனித்து வந்துள்ளார். இப்படி கடந்த ஆண்டு மட்டும் இவர்கள் இருவரும் சேர்ந்து கிட்டதட்ட ரூ.44 இலட்சம் ரூபாய் வருமானம் ஈட்டியுள்ளனர்.

# உக்ரேன் தலைநகரை குறிவைத்து ரஷ்யா தாக்குதல்

உக்ரைன் தலைநகரைக் குறிவைத்து ரஷ்யா நடத்திய ஏவு கணைத் தாக்குதல்களில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். இந்தத் தாக்குதலில் மேலும் எழுவர் காயமடைந்துள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.



உக்ரைனின் தலைநகர் கிவ்வை குறிவைத்து தொடர் ஏவுகணைத் தாக்குதல்களை வெள்ளிக்கிழமை ரஷ்யா நடத்தியது. இதன் காரணமாக கட்டடங்கள் இடிபாடுகளுக்கு உள்ளாகியுள்ளதுடன், பல வாகனங்கள் தீக்கிரை யாகியுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்தன. இந்த தாக்குதலில் காயமடைந் தவர்கள் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. அத்துடன், அந்த நகரின் ஒரு பகுதி புகை மண்டலமாகக் காணப்பட்டது. ஹைப்பர்சொனிக் (Hypersonic ) மற்றும் பாலிஸ்டிக் (Ballistic) ஏவுகணைகளைப் பயன்படுத்தி இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக உக்ரைன் இராணுவம் தெரிவித்துள்ளது.

# இலங்கை ரி-10 போட்டித் தொடர் ஹம்பாந்தோட்டை சம்பியன்




இலங்கை கிரிக்கெட் சபையால் முதல் முறையாக நடாத்தப்பட்ட இலங்கை ரி-10 கிரிக்கெட் போட்டித் தொடரில் தசுன் ஷானக்க தலைமையிலான ஹம்பாந்தோட்டை பெங்களா டைகர்ஸ் அணி சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றியது. யாழ். கிங்ஸ் அணிக்கு எதிரான இறுதிப் போட்டியில் 27 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

பல்லேகல சர்வதேச மைதானத்தில் நடை பெற்ற இறுதிப் போட்டியில் யாழ்ப்பாண அணிக்கு 133 ஓட்டங்களை வெற்றி இலக்காக நிர்ணயித்த ஹம்பாந்தோட்டை அணி, அவர்களின் திறமையான பந்துவீச்சினால், இறுதியில் யாழ். 6 விக்கெட்டுகளை இழந்து 107 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

- வளர்ந்து வரும் வீரர் - ட்ரெவின் மேத்யூ
- சிறந்த பந்து வீச்சாளர் - ட்ரெவின் மேத்யூ
- சிறந்த துடுப்பாட்டம் - குசல் மெண்டிஸ்
- போட்டியின் நாயகன் - தசுன் சானக்க

இந்த வெற்றியின் விசேட அம்சம் என்னவென்றால், இறுதிப் போட்டி வரை தோல்வியடையாத யாழ். அணியைத் தோல்வியடையச் செய்ததாகும்.

பல திறமையான துடுப்பாட்ட வீரர்களைக் கொண்ட யாழ். அணிக்கு எதிராக அபாரமாகப் பந்துவீசிய ரிச்சர்ட் க்ளீசன் 21 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளை வீழ்த்தி யாழ். அணியை சங்கடத்துக்கு உள்ளாக்கினார். அவருக்கு அபார ஆதரவை வழங்கிய கெப்டன் தசுன் சானக்க 04 ஓட்டங்களுக்குள் 2 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இலக்கை துரத்திய யாழ். அணியின் முன் னணி துடுப்பாட்ட வீரர்கள் நான்கு பேரும் குறைந்த ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர். ஆனால் யாழ் அணியின் டொம் ஏபல் இன்னிங்ஸ் முடியும் வரை 27 பந்துகளில் 3 சிக்ஸர்கள் மற்றும் 4 பவுண்டரிகளுடன் ஆட்டமிழக்காமல் 54 ஓட்டங்களை எடுத்தார்.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஹம்பாந்தோட்டை அணியின் முகமது ஷேஷாத் 11 பந்துகளில் 2 சிக்ஸர்கள், 2 பவுண்டரிகளுடன் 26 ஓட்டங்கள் எடுத்து வெற்றிகரமான தொடக்கம் தந்தார். பின்னர் தசுன் சானக்க 10 பந்துகளில் 2 சிக்ஸர்கள், 2 பவுண்டரிகளுடன் 21 ஓட்டங்களையும், ஷெவோன் டேனியல் 15 பந்துகளில் 26 ஓட்டங்களையும் பெற்றனர்.

இலங்கை கிரிக்கெட் தலைவர் த ஷம்மி சில்வா தலைமையில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில், வளர்ந்து வரும் வீரர் விருதை ட்ரெவின் மெத்தியூஸ் வென்றார். மேலும், முழுப் போட்டியிலும் 14 விக்கெட்டுகளை வீழ்த்தியதன் மூலம் போட்டியின் சிறந்த பந்து வீச்சாளர் என்ற விருதையும் பெற்றார்.

214 ஓட்டங்களைப் பெற்ற குசல் மெண்டிஸ் சிறந்த துடுப்பாட்ட வீரராகத் தெரிவானார். துடுப்பாட்டத்தில் 175 ஓட்டங்களைப் பெற்று 4 விக்கெட்டுக்களை வீழ்த்தி 5 பிடிகளை எடுத்த தசுன் ஷனக்க சிறந்த வீரருக்கான விருதைப் பெற்றார்.

# வர்ணம் பூசும் தொழில் செய்யும் ஹென்றி ஒலங்கா







சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் பிரபல வேகப்பந்து வீச்சாளரான ஹென்றி ஓலங்கா பகுதி நேர வர்ணம் பூசும் தொழில் செய்து வருகிறார்.

ஆபிரிக்க நாடுகளில் கிரிக்கெட் போட்டிகளில் திறமை வாய்ந்த நாடாக ஜிம்பாப்வே கருதப்படுகிறது. ஜிம்பாப்வே அணியில் கிரிக்கெட் விளையாடிய பல வீரர்கள் இன்று உலகின் பல்வேறு அணிகளுக்கு பயிற்சியாளராக செயல்பட்டு வருகின்றனர்.

ஜிம்பாப்வே அணிக்காக 1995 ஆம் ஆண்டு முதல் 2002 ஆம் ஆண்டு வரை வேகப்பந்து வீச்சாளராக திறமையாக செயல்பட்டவர் ஹென்றி ஓலங்கா. இவர் அந்த அணிக்காக 30 டெஸ்ட், 49 ஒருநாள் போட்டிகளில் விளையாடி மொத்தம் 126 விக்கெட்டுகளை கைப்பற்றியுள்ளார்.

இந்நிலையில் அவரது சமீபத்திய புகைப்படம் சமூக வலைதளங்களில் வைரலாகியுள்ளது. தற்போது அவர் பகுதி நேர வர்ணம் பூசும் தொழில் செய்து வருகிறார்.

சமீபத்தில் நடைபெற்று முடிந்த அடிலெய்ட் டெஸ்ட் போட்டியின், இடையே ஓலங்காவின் காணொளி காட்சிகள் ஒளிபரப்பப்பட்டன. அவுஸ்திரேலிய பெண்ணை திருமணம் செய்த நிலையில் அவருக்கு 2 பிள்ளைகள் உள்ளன.

ஓலங்கா சமீபத்தில் அளித்த பேட்டியில் கூறியுள்ளதாவது–

அவுஸ்திரேலியாவில் வாழ்வது எனக்கு மகிழ்ச்சி அளிக்கிறது. இங்கு புது வாழ்க்கையை ஆரம்பித்துள்ளேன். நான் சிராஜ் மற்றும் பும்ராவின் ரசிகன். பும்ராதான் சிறந்த பந்து வீச்சாளர்.

அவரது பந்து வீச்சு தனித்துவம் வாய்ந்தது. பும்ரா எனக்கு வாசிம் அக்ரமை நினைவுபடுத்துகிறார்.

# சம்பியன்ஸ் கிண்ணம் பாகிஸ்தான்–இந்திய போட்டிகள்

## ஹைபிரிட் முறைக்கு ஐசிசி இணக்கம்

2025 ஆம் ஆண்டு பாகிஸ்தானில் நடைபெற உள்ள சம்பியன்ஸ் கிண்ணம் கிரிக்கெட் தொடரை ஹைபிரிட் முறையில் நடத்த சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் ஒப்புதல் அளித்துள்ளது.

பாகிஸ்தானில் நடைபெறும் சம்பியன்ஸ் கிண்ணம் கிரிக்கெட் தொடரில் இந்தியா விளையாடும் போட்டிகள் மட்டும் பொதுவான இடத்தில் நடத்த ஐசிசி அனுமதித்துள்ளது. அதேபோல் 2027 ஆம் ஆண்டு வரை இந்தியா – பாகிஸ்தான் ஆகிய நாடுகள் நடத்தும் சர்வதேச கிரிக்கெட் தொடர்களில் இரு நாடுகளும் தங்களுக்கான போட்டிகளை பொதுவான இடத்தில் விளையாட ஐசிசி அனுமதித்துள்ளது.

மேலும், 2025 ஆம் ஆண்டு இந்தியாவில் நடைபெற உள்ள ஐசிசி மகளிர் ஒருநாள் உலக கிண்ணம் தொடரில் பாகிஸ்தான் விளையாடும் போட்டிகள் பொதுவான இடத்தில் நடத்தப்படும் என ஐசிசி தெரிவித்துள்ளது.




அதேபோல், 2026 ஆம் ஆண்டு இந்தியா மற்றும் இலங்கை இணைந்து நடத்தும் மகளிர் 20 ஓவர் உலக கிண்ணம் கிரிக்கெட் தொடரில் பாகிஸ்தான் விளையாடும் ஆட்டங்கள் பொதுவான இடத்தில் நடத்த சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் அனுமதி அளித்துள்ளது. இந்த ஒப்பந்தம் 2027 ஆம் ஆண்டு வரை நடைமுறையில் இருக்கும் என ஐசிசி தெரிவித்துள்ளது.

மேலும், 2025 சம்பியன்ஸ் கிரிக்கெட் தொடரை ஹைபிரிட் மாடலில் நடத்த ஒப்புக்கொண்ட பாகிஸ்தானுக்கு இழப்பீடாக 2028 ஆம் ஆண்டு ஆடவர் 20 ஓவர் உலக கிண்ணம் கிரிக்கெட் தொடரை நடத்தும் உரிமையை ஐசிசி வழங்கி உள்ளது.

# அஸ்வினின் ஓய்வுக்கு அவமானமே காரணம் தந்தை; பரபரப்பு பேட்டி



ரவிச்சந்திரன் அஸ்வின் ஓய்வை அறிவித்திருப்பதற்கு அவமானம் கூட காரணமாக இருக்கலாம் என அவரது தந்தை பரபரப்பான கருத்தை தெரிவித்துள்ளார்.

முதல் டெஸ்ட் போட்டியில் விளையாட வாய்ப்பே பெறாத அஸ்வின் இரண்டாவது போட்டியில் விளையாடினார். மீண்டும் மூன்றாவது போட்டியில் விளையாட அவருக்கு வாய்ப்பு மறுக்கப்பட்டது. இந்த நிலையில் தனது ஓய்வு அறிவிப்பை வெளியிட்டார்.

அவரது பெற்றோர் கண்ணீர் மல்க அவருக்கு உணர்ச்சி பூர்வமான வரவேற்பை கொடுத்தனர். அஸ்வின் ஓய்வு அறிவிப்பு குறித்து அவரது தந்தை அளித்துள்ள பேட்டியில் கூறியதாவது–

அஸ்வின் என்ன நினைக்கிறார் என்று எனக்குத் தெரியாது. அவர் ஓய்வை அறிவித்து விட்டார். அதனை முழு மனதுடன் நான் ஏற்றுக்கொள்கிறேன். அவரது அறிவிப்பு ஒரு வகையில் மகிழ்ச்சி அளித்தாலும் இன்னொரு வகையில் அவர் தொடர்ந்து விளையாடலாம் என்று கருதுகிறேன்.

அஸ்வினின் முடிவில் நான் தலையிட முடியாது. ஆனால் அவர் ஓய்வை அறிவித்ததற்கு பல காரணங்கள் இருக்கலாம். அவை என்னவென்று அஸ்வினுக்கு மட்டும்தான் தெரியும். அவமானம் கூட அவர் ஓய்வை அறிவித்ததற்கு காரணமாக இருக்கலாம்.

# பத்திரிகையாளரிடம் முரண்பட்ட கோலி..

அவுஸ்திரேலியா –இந்திய நான்காவது டெஸ்ட், 26 ஆம் திகதி மெல்போர்னில் நடைபெறவுள்ளது. இதற்காக இந்திய அணியினர் வெள்ளிக்கிழமை மேல்போர்ன் வந்தனர்.

விமான நிலையத்தை விட்டு வெளியே வந்த போது கோலி குடும்பத்தினரை, அவுஸ்திரேலிய பத்திரிகையாளர்கள் போட்டோ எடுக்க முயன்றனர். இதனால் கோபம் அடைந்த கோலி, பத்திரிகையாளரிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டார்.

எனது குழந்தைகளுடன் செல்கிறேன், எங்களுக்கு “பிரைவசி” தேவை. என்னிடம் கேட்காமல் எனது குடும்பத்தினரை போட்டோ எடுக்க வேண்டாம், என்றார்.

அங்கிருந்த பத்திரிகையாளர், படப்பிடிப்பாளர் இணைந்து, “அவுஸ்திரேலிய வீரர் போலந்தை தான் போட்டோ எடுத்தோம், உங்களது குடும்பத்தினரை எடுக்கவி ல்லை,” என்றனர்



# அஸ்வின் தொடர்பில் வெளியான கருத்துகள்

## ஓய்வு பெற்றமை வருத்தும் அளிக்கிறது அனில் கும்ப்ளே





## நான் இப்படி தனியாக விட்டிருக்க மாட்டேன்: கபில் தேவ்

இந்தியாவின் மகத்தான ஒருவர் விடைபெற முடிவெடுத்ததைப் பார்த்து ஆச்சரியம் அடைந்தேன். அவருடைய முகத்தில் வலியைப் பார்த்தது சோகம்.

நான் அவுஸ்திரேலியாவில் இருந்திருக்க விரும்புகிறேன். அங்கே இருந்திருந்தால் அவரை நான் இப்படி செல்ல விட்டிருக்க மாட்டேன். அவரை நான் நிறைய மரியாதை மற்றும் மகிழ்ச்சியுடன் அனுப்பியிருப்பேன். அதற்கு அவர் தகுதியானவர். அவருடைய மிகப்பெரிய பங்களிப்பை யாரும் நிரப்ப முடியாது என நெகிழ்ச்சியுடன் தெரிவித்தார்.

அஸ்வின் ஓய்வு பெற்றது வருத்தம் அளிக்கிறது என்று இந்திய அணி முன்னாள் கெப்டன் அனில் கும்ப்ளே தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் கூறியதாவது:–

அஸ்வின் இந்தியாவிற்கு சம்பியன் பந்துவீச்சாளராகவும், சம்பியன் சகலதுறை ஆட்டக்காரராகவும் இருந்திருக்கிறார். அவர் தனது கிரிக்கெட் வாழ்க்கையில் ஒரு போட்டி வின்னராக பல வெற்றிகளை இந்திய அணிக்கு பெற்றுத் தந்துள்ளார். நிச்சயமாக இந்திய அணி இனி அவரை தவற விடும்.

எனது சாதனையை (டெஸ்டில் 619 விக்கெட்டுகள்) அஸ்வின் முறியடிப்பார் என்று எதிர்பார்த்தேன். அதை பார்க்க விரும்பினேன். ஆனால் அவர் ஓய்வு முடிவை அறிவித்துள்ளது எனக்கு ஏமாற்றத்தை அளித்துள்ளது.

இந்தப் பத்திரிகை கொழும்பு - 08 கலாநிதி என்.எம்.பெரேரா மாவத்தை, இலக்கம் 42 இல் அமைந்துள்ள “அபே ஜனஹண்ட பப்ளிகேஷன் பிரைவேட் லிமிடெட்” நிறுவனத்தினரால் 2024 டிசம்பர் 22 ம் திகதி ஞாயிற்றுக்கிழமை தயார் செய்யப்பட்டு, எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட் அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

ஒ1ருவன்
ஆண்டு : 01 இதழ் : 11 குரோதி வருடம்
மார்கழி மாதம் 07ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை (22.12.2024)



# கிறிஸ்து பிறப்பு எனும் புது வெளிச்சம்

## நத்தார் தின சிறப்புக் கட்டுரை

கிருஷிகா பாலரூபன்

மண்ணுலகை மீட்க வந்த இரட்சகராகிய இயேசு கிறிஸ்து 2,000 ஆண்டுகளுக்கு முன்னர் ஏரோது ராஜா அரசாண்ட நாட்களில் யூதேயாவில் உள்ள பெத்லகேம் எனும் சிற்றூ ரில் மாட்டுத்தொழுவத்தில், ஏழ்மையான சூழலில் பிறந்தார். யோசேப்புக்கு மனைவியாக நியமிக்கப்பட்ட மரியாளின் வயிற்றில் தூ ய ஆவியால் நிரப்பப்பட்டுக் கன்னியின் மைந்தனாய் இயேசு அவதரித்தார்.

இயேசு கடவுளின் குமாரனாய் இவ்வுலகிற்கு வந்தார். மானுடனாய் அவர் இவ்வுலகிற்கு வந்தது, தேவ தந்தையின் அன்பேயாகும். இயேசு கிறிஸ்துவின் பிறப்பின் நோக்கம் யாதெனில் இவ்வுலக பாவத்தை முழுவதும் அகற்றி, மனுகுலம் பாவத்திலிருந்து முழு விடுதலை பெற வேண்டும் என்பதேயாகும். தனி மனித விடுதலை என்பதே முழு விடுதலையை நோக்கியது என்பதை அறியும் வண்ணம் தன்னுடைய மகனையே இவ்வுலக மக்களின் பாவத்திற்காய் உவந்தளித்தார் இறைவன்.

இயேசு என்ற பெயருக்கு அர்த்தம் பாவத்திலிருந்து விடுதலை அளிப்பவர். அதாவது இரட்சகர் ஆகும். ஆகவே, இயேசு கிறிஸ்து உலக இரட்சகரென்பதையும் இவ்வுலகை மீட்க வந்த தெய்வ மகன் என்பதையும் அறிந்துகொள்ள முடிகிறது. இயேசு கிறிஸ்து உலக இரட்சகர் என்ற நிலையில் அவர் அரண்மனையில் அலங்காரமாக ஆடம்பரமாகப் பிறக்காமல் மாட்டுத் தொழுவத்தில், ஏழ்மையின் கோலமாகத் தாழ்மையின் வடிவாகப் பிறந்தார். இயேசு பிறந்தார் என்ற செய்தி இவ்வுலகில் முதன்முதலாக ஆடுகளை வயல்வெளியில் மேய்த்துக் கொண்டிருந்த மேய்ப்பர்களுக்கு இறைத் தூதர் காபிரியேலால் அறிவிக்கப்பட்டது. "இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்கு தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார். பிள்ளையை துணிகளில் சுற்றி முன்னணையிலே கிடத்தியிருக்கக் காண்பீர்கள்" என்பதே அந்தச்செய்தியாகும். அதே வேளையில் வானத்தில் ஒரு நட்சத்திரம் தோன்றியதைக் கண்ட வான சாஸ்திரிகள், மேசியா அதாவது, இரட்சகர் பிறந்துள்ளார் என்பதை அறிந்து ஏரோதுவின் அரச மாளிகைக்குக் குழந்தையைக் காணச் சென்றனர்.



**தேவன், தம்முடைய ஒரே குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்.**
**- யோவான் 3:16.**

ஆனால், குழந்தை அங்கு இல்லை. இயேசு மாட்டுத் தொழுவத்தில் பிறந்திருந்தார் என்பதை மேய்ப்பர்கள் மட்டுமே முதலாவது காண நேர்ந்தது. ஏழைகளுக்குக் காட்சியளிப்பவராய், ஏழ்மையின் கோலமாய், தாழ்மையின் வடிவில் இயேசு கிறிஸ்து பிறந்தார் என்பதை இதன் மூலம் அறிந்து கொள்ளமுடிகிறது. இயேசுவின் தாழ்மை இன்று நம் அனைவரையும் ஆதிக்க, ஆடம்பர வாழ்விலிருந்து மாற்றம் பெற்று, அனைத்து ஏழை, எளிய மக்களோடு ஒன்றித்து வாழ அறைகூவல் விடுக்கிறது. இன்றைக்கும் அன்றாட வாழ்வில் தேவை உள்ளோருக்குப் பகிர்ந்து கொடுக்கும்போதும், இயற்கை பேரிடரால் பாதிக்கப்பட்டிருக்கும் மக்களோடு தங்களைப் பகிர்ந்தளித்து வாழும் போதும் உண்மையான தாழ்மை நிலை உருவாகும்.

**இயேசுவின் தாழ்மை இன்று நம் அனைவரையும் ஆதிக்க, ஆடம்பர வாழ்விலிருந்து மாற்றம் பெற்று, அனைத்து ஏழை, எளிய மக்களோடு ஒன்றித்து வாழ அறைகூவல் விடுக்கிறது...**

அதே வேளை, அது அனுதின வாழ்கையை செழிப்பு நிறைந்ததாக மாற்றும்.

இயேசு பிறந்தார் என்ற செய்தி மேய்ப்பர்களுக்கு அறிவிக்கப்பட்டபோது "உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனுஷர் மேல் பிரியமும் உண்டாவதாக" எனக் கூறி தேவனை துதித்தார்கள். இந்தப் பிறப்பின் செய்தி நமக்கு கூறுவது என்னவென்றால் ஏழை – பணக்காரன், ஆண்டான் – அடிமை, ஆண்– பெண், கருப்பு – வெள்ளை, சாதிய வேறுபாடுகள், இனம் – மொழி என்ற அடிப்படையில் வன்முறை கலாசாரங்கள் நிலவி வரும் சூழலில், அனைத்து மக்களும் ஒற்றுமையுடன், ஒன்றிணைந்து நிறைவாக அனைத்தையும் பகிர்ந்து வாழ வேண்டும் என்பதேயாகும்.

இன்றைக்கு சமூக, அரசியல், பொருளாதார, ஏற்ற தாழ்வுகள் என்பவற்றைக் களைந்தெறிந்து அனைவரும் உண்மையான மகிழ்ச்சியோடு, சமாதானத்தோடு வாழ தாழ்மையின் கோலத்தில் பிறந்த இயேசு கிறிஸ்துவை உள்ளத்தில் ஏற்று வாழும்போது நிறைவான, முழுமையான வாழ்வு, அனைவருக்கும் நிலவும் என்பதில் எந்தவித ஐயமுமில்லை. எனவே, ஏழை எளிய மக்களின் வாழ்வில் அன்றாடம் மகிழ்ச்சியைக் காண ஆதிக்க, பணக்கார, முதலாளித்துவ நிலையிலிருந்து நம் எண்ணங்களை மாற்றி எளிமையான உள்ளத்தோடு, தாழ்மையின் பணிவோடு நம் அனைத்து உடைமைகளை, உரிமைகளைப் பிறருக்குப் பகிர்ந்து வாழும்போது தினமும் அது நத்தார் நாளாகவே அமையும்.

இத்தகைய வாழ்வே இம்மண்ணில் நமக்கு முழுமையான மகிழ்ச்சியையும், சமாதானத்தையும் அனுதினமும் அருளச்செய்யும். அதன் மூலம் விண்ணுலகின் கடவுள் மகிமை பெறுகின்றவராக இருக்கிறார். அனைத்து மக்களும் நலமுடன் வாழ நம்மை எளிமையின் வாழ்வுக்குள் அர்ப்பணிப்போம். இயேசு கிறிஸ்துவின் ஆசீர்வாதமும் கிருபையும் நம் அனைவருடனும் என்றும் நிலைத்திருப்பதாக. கடவுள் அனைவரையும் இந்தக் நத்தார் காலங்களிலும், புதிய ஆண்டிலும் ஆசீர்வாதமாக வழி நடத்துவாராக. ஆமென்.



### மண்ணில் இயேசு பிறந்தாரே சோகம் தீர்த்திட வந்தாரே.. !

பாரெங்கும் ஒலி தீபம் ஏற்றிட
பாலகன் இயேசு பிறந்தாரே
காரிருள் அகலும் போது
கர்த்தராம் இயேசு வந்தாரே .. !

கடும் குளிர் அவனியில் பரவிடவே
மார்கழி மாதம் மாண்புறவே
மாந்தரெல்லாம் திளைத்திடவே
பாலகன் இயேசு மண்ணில் மலர்ந்தாரே..!

பார்க்கும் கண்கள் பிரகாசித்திடவே
பாலகன் குளிரில் நடுங்கிடவே
பாவங்களிலிருந்து மக்களை மீட்டிடவே
பாலகன் இயேசு பிறந்தாரே..!

கன்னி மரியாளின் புதல்வனே
அகிலம் காக்க வந்த மீட்பரே
மனித உருவில் பிறந்தவரே
எங்கள் சோகம் தீர்க்க வந்தீரே..!

நானிலம் போற்றும் நத்தாரில்
நன்மை புரிய வந்த வந்தவரே
இல்லை எமக்கினி சோகம் என்று
துதிக்கின்றோம் உம் பாதம் தொட்டு..!

**உடப்பூர் வீரசொக்கன்**


செய்திகளை உடனுக்குடன் துல்லியமாக அறிந்துகொள்ள
உலக தமிழர்களுக்கான ஒரே தளம்!
Oruvan.com
ஒருவன் ஒருவன் Plus
@oruvannews


# சுப்பர் மார்க்கெட் சுமைகள்...!



அநேகமானவர்கள் சிறு பிள்ளைகளை சுப்பர் மார்க்கெட் பக்கம் கூட்டிச் செல்லவே அச்சப்படுகின்றனர். கூட்டிச்சென்றால் என்ன நடக்கும்...? அம்மாக்கள், அப்பாக்கள் அத்தியாவசிய பொருட்களை எடுக்க வேண்டியது தான்.., பிள்ளைகளோ சொக்லேட், பிஸ்கெட் தொடக்கம் காண்பதையெல்லாம் அள்ளி அள்ளி வண்டியில் போட வேண்டியது தான்.. அப்போது அதை தடுக்கவா முடியும்..? கௌரவப் பிரச்சினை வேறு.. கடைசியில் “பில்“லை பார்த்தால் பிள்ளைகளின் ‘பில்’தான் அதிகமாக இருக்கும்.. பிறகெப்படி அவர்களை சுப்பர் மார்க்கெட் பக்கம் கூட்டிச் செல்வார்களாம்..?

சுப்பர் மார்க்கெட் செல்வதென்பதும் ஒரு வகையில் ஃபெஷன் என்றாகி விட்டது.. விலைக்கழிவு விலைக்கழிவு என கிரடிட் கார்ட் விளம்ரங்களை பார்ப்பதும் அதை பார்த்து சுப்பர் மார்க்கெட் செல்வதும் கடைசியில் விலைக்கழிவை மிஞ்சிய அளவில் பொருட்களை வாங்குவதே ஒரு வகை போதை என்றாகி விட்டது .. இறுதியில் மாதக்கடைசியில் கடன்காரன் போல் பில் பட்டியல் வரும்போது தான் லாபமோ நஷ்டமோ கண்ணைக் கட்டும்..

பெருநாள் காலங்களில் சுப்பர் மார்கெட்களில் தொழில் பார்ப்பவர்கள் பெருநாளை குறிக்கும் உடை அணிந்தே கவுண்டரில் இருப்பதை பரவலாக காணலாம்.. இவற்றை அவர்கள் விரும்பி அணிவதில்லையாம்.. முகாமைத்துவத்தின் பணிப்பின் பேரில் தான் இப்படி அணிவார்களாம்.. இவ்வாறு அணிந்து கொண்டு வேலை செய்வது தமக்கு பெரிய இடைஞ்சல் தானாம்.. என்ன செய்ய கடமையின் நிமித்தம் தவிர்க்க முடியவில்லையே என்பதே அவர்களின் ஆதங்கம்..



சுப்பர் மார்கெட்களில் பொருட்களை எடுக்கின்றோம், வண்டியில் கெஷியர் கவுண்டருக்கு கொண்டு செல்கின்றோம்.. கவுண்டரில் பில் போடுகின்றனர்.. பணத்தை செலுத்துகின்றோம்.. வீடு வந்தே பார்க்கின்றோம்.. எடுக்காத பொருட்களுக்கெல்லாம் பணம் அறவிட்டிருப்பது அப்போதே அறிகின்றோம்.. ஓடிச்சென்று “பில்“லை காட்டினால், தவறுதலாக நடந்து விட்டது என்றே பதில் கிடைக்கும், சிறிய சமாளிப்புடன் அந்த காசு திருப்பி வழங்கப்படும்.. ஆனாலும், அநேகமான இடங்களில் இப்படித்தான் வழமையாக நடக்கின்றதாம்..

விலை அதிகரிப்பு காரணத்தினால் சிக்கனமாக பொருட்களை வாங்கச் செல்பவர்கள் பெக்கெற்கள் மற்றும் போத்தல்களில் அடைக்கப்பட்ட பொருட்களை வாங்குவது அவை சிறிய அளவில் இருந்தால் கையில் உள்ள பணத்திற்கு அது கட்டுப்படி ஆகும் என்பதாலாகும்.. ஆனால், சுப்பர் மார்கெட்களில் நடப்பதோ வேறு, எதை தேடினாலும் அவை பெரிய பெரிய அளவில் தான் காணப்படும்.. அவற்றின் விலையோ மிகப்பெரிய அளவில் தான் காணப்படும். பிறகெப்படி சிக்கனமாக பொருட்களை வாங்குவதாம்..

சுப்பர் மார்கெட்களுக்கு பொருட்களை வாங்கச் சென்றாலும் அங்குள்ள மேற்பார்வையாளர் ஏதோ சீசீடி கெமரா போல் வாடிக்கையாளர்களையே பின் தொடர்ந்து வருவதும் அவர்களை கண்காணிப்பது போல் நடந்து கொள்வதும், வாடிக்கையாளர்களுக்கு ஏதோ சங்கோஜத்தை தருகின்ற ஒன்றாகவே இருப்பதுண்டு.. வாடிக்கையாளர்களை களவெடுக்க வந்தவர்களைப் போலவே அவர்கள் கண்காணிப்பதுண்டு.. மொத்தத்தில் கள்ளன் - பொலிஸ் விளையாட்டு போல் தான் இந்த காட்சி இருக்கும்..

– ரிஷா –



## தந்திர முறைகளை யையாளும் ரணில்

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இந்தியாவிற்கு வெற்றிகரமான உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்ட பின்னர் ஜனாதிபதி மீது அவதூறு பரப்பும் நடவடிக்கைகளை ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசகர் மேற்கொண்டுள்ளார்களாம்.

முன்னாள் ஜனாதிபதி என பெருமை பேசிக் கொண்டு, நாட்டில் மக்களால் தெரிவு செய்யப்பட்டுள்ள புதிய அரசாங்கத்தை பல மேடைகளில் பகிரங்கமாக ரணில் விமர்சித்து வருகின்றார்.

எனினும், அநுரவின் பல திட்டங்களின் பின்னால் ரணில் ஆலோசனை வழங்கி வருவதாக அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர். ரணில் விக்கிரமசிங்க, அரசியலில் இருந்து மக்களால் அகற்றப்பட்டவர் என்ற வகையில் மேலும் தந்திரமான முயற்சிகளில் ஈடுபட்டு வருவதாக அரசியல் அவதானிகள் குறிப்பிட்டுள்ளனர்.

# அரசியல் அந்தப்புரம்

கனுஷியா புஷ்பகுமார்



## முன்னாள் சபாநாயகரின் பட்டத்தை எடுத்து வர இந்தியா பயணம்

ஜப்பானில் உள்ள வசேதா பல்கலைக்கழகம் வழங்கியதாக கூறப்படும் கலாநிதி பட்டத்தை பெற்றுக்
கொள்வதற்காக முன்னாள் சபாநாயகர் அசோக ரன்வலவின் பிரதிநிதி ஜப்பான் சென்றுள்ளதாக தெரியவருகிறது.

அதன்படி, அவருடைய நெருங்கிய நண்பர் ஒருவர் குறித்த பல்கலைக்கழகத்துக்குப் புறப்பட்டு சென்றுள்ளாராம். 2005ஆம் ஆண்டுக்கு முன்னர் அவருக்கு முனைவர் பட்டம் வழங்கப்பட்டதாகவும் அதனால் அது இணையத்தில் வெளியிடப்பட மாட்டாது என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தற்போது, 2005ஆம் ஆண்டுக்குப் பிறகு பெறப் பட்ட முனைவர் பட்டச் சான்றிதழ்களை மட்டுமே பல் கலைக்கழகம் நிகழ்நிலையில் வழங்குவதாகக் கூறப்



## அரசாங்கத்தின் நடவடிக்கைகள் மீளாய்வு

ஏறக்குறைய மூன்று மாதங்களுக்கு முன்னர் தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க ஆட்சிக்கு வந்தமை தொடர்பில் மீளாய்வை ஆரம் பித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்த ஒரு மாத காலத்திற்குள் பொருளாதார துறையில் நாடு அடைந்த வளர்ச்சிகள் குறித்த மீளாய்வே இவ்வாறு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பெரும்பான்மையான மக்களின் ஆதரவால் தற்போது ஆட்சிக்கு வந்துள்ள அநுரகுமார திஸாநாயக்கவின் அரசாங்கத்தின் ஆரம்பமே நாட்டு மக்கள் மத்தியில் பல குழப்ப நிலையை உருவாக்கியுள்ளது. அரிசி, தேங்காய் போன்ற அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றம் மற்றும் தட்டுப்பாடு, போலியான கல்வித் தகைமை குளறுபடிகள் என பல்வேறு சிக்கல்நிலை காணப்பட்டு வருகிறது. இதன்காரணமாகவே குறித்த மீளாய்வு மேற்கொள்ளப்படவுள்ளதாகக் கூறப்படுகின்றது.



## சஜித்திற்கு சவால்!

ஐக்கிய மக்கள் சக்தியின் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களையும் ஒன்று சேர்ப்பது கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கு தற்போது, தற்போது தீர்க்கமான சவாலாக மாறியுள்ளதாக அறியக் கிடைத்துள்ளது.

சஜித் பிரேமதாசவை எதிர்க்கட்சித் தலைவராக அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஏற்றுக் கொள்வது முதலாவது சவாலாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இரண்டாவது ஐக்கிய மக்கள் சக்தியின் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களையும் ஓரணியில் ஒன்று சேர்ப்பதும் சஜித்துக்கு பாரதூரமான சவால் என அரசியல் விமர்சகர்கள் கூறுகின்றனர்.

கட்சிக்குள் இருந்து சிலர் நீங்கி சென்றுள்ள நிலையில் மேலும் சிலர் கட்சித் தலைவர் தொடர்பில் அதிருப்தியில் உள்ளதாகவும் கூறப்படுகிறது.

## முன்னாள் மாகாண சபை உறுப்பினருக்கு சொந்தமான மதுபானசாலையில் சோதனை



பத்தரமுல்லையில் உள்ள முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ஒருவருக்கு சொந்தமான மதுபானசாலைக்கு மதுவரி திணைக்களம் சீல் வைத்துள்ளது.

வரி செலுத்தாத வெளிநாட்டு மதுபான போத்தல்கள் தொகை கண்டுபிடிக்கப்பட்டமையே இதற்குக் காரணம் என கூறப்படுகிறது. இது குறித்து மதுவரி திணைக்களத்திற்கு கிடைத்த தகவலொன்றையடுத்தே, அதிகாரிகள் குழுவொன்று சோதனை நடத்தி சுமார் நூறு வெளிநாட்டு மதுபான போத்தல்களை இங்கிருந்து கைப்பற்றியுள்ளனர்.

விசாரணை முடியும் வரை குறித்த மதுபானக் கடைக்கு சீல் வைக்குமாறு மதுவரி ஆணையாளர் நாயகம் பணிப்புரை விடுத்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

# ஆன்மீகத் தேடலில் இருப்பவருக்கு தனிமை ஒரு அருமையான காலம்

-சத்குரு



நெருக்கடியான காலகட்டத்தில்தான் எந்தவகையான மனிதராக நீங்கள் இருக்கின்றீர்கள் என்பது மிகவும் மதிப்புமிக்க ஒன்றாக மாறும்.

தற்போது நம் மனதில் ஒன்றை இருத்திக்கொள்ள வேண்டும் – நாம் மனிதர்களா, இல்லை மனித விலங்குகளா? நாம் மனிதர்கள் என்றால், எவ்வாறு இருக்க வேண்டும் என்பது நமக்கு தெரிந்திருக்க வேண்டும். எவ்வாறு இருக்க வேண்டும் என்பது தெரிந்திருந்தால், சமூக தொடர்பு என்பது தேவைப்படும்போது மட்டும் நிகழும் தேர்வாக அமையும். அது தேவைப்படாதபோது நீங்கள் உங்களை உங்களுடனே வைத்திருப்பீர்கள்.

மேலும், ஆன்மீகத் தேடலில் இருப்பவருக்கு தனியாக இருப்பது ஒரு அருமையான காலம். தனியாக இருப்பது, மக்களிடம் இருந்து விலகி இருப்பது, அமைதியாக இருப்பது அவர்களுக்கு பிரச்சினை இல்லை. இவை வாய்ப்புகளே ஆகும். ஆனால், பெரும்பாலான மனிதர்கள் இத்தகைய வாழ்க்கை நிலையில் இல்லை. அதனால் அவர்கள் போராடுவார்கள். அவர்களுக்கு எளிய முறையில் எவ்வாறு பல்வேறு தீர்வுகளை வழங்குவது என்பது பற்றி நாம் சிந்தித்து வருகிறோம்.

ஆனால், தன்னை ஆன்மீக தேடலில் இருப்பவர் என்று

**எல்லாம் சரியாக நிகழும்போது அனைவரும் அற்புதமானவராக இருக்கின்றார்கள். ஆனால், சோதனையான காலம் நம் கண்முன் வரும் போதுதான் நாம் எத்தகையவர் என்பது தெரிகிறது**

கூறிக் கொள்ளும் அனைவரும், மிக விழிப்புடன் இருப்பதோடு மட்டுமல்லாமல், தேவைப்படும்போது வெளியில் சென்று செய்ய வேண்டிய செயல்களை செய்வதற்கு விருப்பத்தோடு இருக்க வேண்டும் என்பது மிக முக்கியமான ஒன்றாகும். எல்லாம் சரியாக நிகழும்போது அனைவரும் அற்புதமானவராக இருக்கின்றார்கள். ஆனால், சோதனையான காலம் நம் கண்முன் வரும் போதுதான் நாம் எத்தகையவர் என்பது தெரிகிறது.

அடிப்படையான கேள்வி இதுதான்: நாம் என்றுமே தீர்வின் ஒரு பகுதியாக இருக்கும் மனிதரா, இல்லை பிரச்சனையின் ஒரு பகுதியாக இருக்கும் மனிதரா? இது ஒன்றை மட்டும்தான் நாம் முடிவு செய்ய வேண்டும்.

நான் முடிவு செய்துவிட்டேன், நீங்கள் அனைவரும் – நாட்டின் எந்த பகுதியில் இருந்தாலும், உலகின் எந்தப் பகுதியில் இருந்தாலும் – இப்போதே, உடனடியாக இந்த ஒரு முடிவை எடுக்க வேண்டும். நீங்கள் தீர்வின் ஒரு பகுதியாக இருக்க வேண்டும், பிரச்சனையின் பகுதியாக அல்ல. இந்த தீர்மானத்தை ஒவ்வொருவரும் எடுக்கவேண்டும், இது மிக மிக முக்கியம்.




## கழிவறைகளில் WC என குறிப்பது எதனை?

வர்த்தக கட்டடங்கள், திரையரங்குகள் மற்றும் பொது இடங்களில் பயன்படுத்துகின்றன. கழிவறைகளில் WC என குறிப்பிட்டு எழுதப்பட்ட அறிவிப்புப் பலகைகளை கண்டிருப்பீர்கள். இதன் அர்த்தம் என்ன என்று தெரியுமா?

பொதுவாக கழிவறை என்பதற்கு பாத்ரூம், டொய்லெட் அல்லது ரெஸ்ட் ரூம் என்ற வார்த்தைகள் பயன்படுத்தப்படுகின்றன. இந்த வார்த்தைகளில் எதிலும் WC என்ற எழுத்துக்களை பார்க்க முடியாது.

குளியலறைக்கு பல பெயர்கள் உள்ளன. WC என்பது குளியலறையின் மற்றொரு பெயர். இது ஒரு சுருக்கமான எழுத்து வடிவம். அதற்கு Water Closet என்ற விரிவாக்கம் உள்ளது.




இதற்கு தண்ணீருடன் கூடிய கழிவறை அல்லது குளியலறை என்று பொருள்.

1900 ஆண்டுகளில் குளியலறையை பெரும்பாலும் Water Closet என்றுதான் அழைத்திருக்கிறார்கள். அது பின்னாளில், பல பெயர்களால் குறிக்கப்பட்டு வந்தது. இருப்பினும், Water Closet என்பதன் சுருக்கமான வடிவமாகவே WC குறிப்பிட்டு வருகிறார்கள்.



எம்.எஸ்.அமீர் ஹுசைன்

# நாடாளுமன்றை ஆட்டுவித்து வரும் கல்வித் தகைமைகள் குறித்த சர்ச்சை





பத்தாவது நாடாளுமன்றம் இயங்க ஆரம்பித்து ஒரு மாத காலப்பகுதிக்குள் இரண்டாவது சபாநாயகராக பொலன்னறுவை மாவட்டத்தில் இருந்து தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவாகிய கலாநிதி ஜகத் விக்கிரமரத்ன நியமிக்கப்பட்டுள்ளார். தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் முதலாவது சபாநாயகர் அசோக சபுமல் ரன்வல அவர் வகித்த சபாநாயகர் பதவியிலிருந்து விலகியதால், அந்த பதவிக்கான வெற்றிடத்தை நிரப்பவே கலாநிதி ஜகத் விக்கிரமரத்ன நியமிக்கப்பட்டார்.

ஏற்கனவே பதவி வகித்த சபாநாயகர் அசோக சபுமல் ரன்வல கலாநிதி பட்டம் பெற்றவர் என்று வழங்கப்பட்டிருந்த தகவல்களில் உண்மைத் தன்மை இல்லை என்ற தகவல்கள் வெளியாகியதால் அந்த விடயம் நாட்டில் பரவலாக பேசு பொருளாக மாறி சமூக ஊடகங்கள் வாயிலாக கிளப்பட்ட சர்ச்சை காரணமாக அவர் சபாநாயகர் பதவியை இராஜினாமாச் செய்யும் நிலை ஏற்பட்டது.

சபாநாயகரின் பதவி விலகலுடன்



தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் இருக்கின்ற அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களது கல்வித் தகைமைகள் பட்டதாரி சான்றிதழ்கள் தொடர்பாக தீவிரமாக சந்தேகங்கள் எழுந்த நிலையில் புதிய சர்ச்சைகள் உருவாகி இருக்கின்றன. கல்வி அமைச்சரும் பிரதமருமான ஹறிணி அமரசூரியவின் கலாநிதி பட்டம் தொடர்பாகவும் சந்தேகங்கள் கிளப்பப்பட்டிருக்கின்றது. பிரதமர் ஹறிணி எடின்பரோ பல்கலைக் கழகத்தில் Phd செய்து கலாநிதி பட்டம் பெற்றதாக கூறப்படுகின்றது. எனினும், அது பற்றிய தகவல்கள் தேடப்பட்ட போது எடின்பரோ பல்கலைக்கழகத்தில் 03 மாத கால கற்கை நெறி ஒன்றுக்காக புலமைப் பரிசில் பெற்று சென்றவர் எனவும், இரண்டு வருடங்கள் அல்லது முழுநேர கற்கை நெறியை பயின்று கலாநிதி பட்டம் பெற்றவர் அல்ல என்ற தகவல்கள் வெளியாகியுள்ளன. அதனால், அவரது கலாநிதி பட்டமும் போலியானது என்ற தகவல் நிரூபிக்கப்படுமானால் பிரதமர் பதவியில் இருந்து ஹறிணியும் பதவி விலகுவாரா என்ற கேள்வியும் எழுப்பப்படுகின்றது. ஆனாலும், பிரதமர் ஹறிணி இவ்விடயம் தொடர்பாக டிசம்பர் 17 ஆம் திகதியன்று நாடாளுமன்றத்தில் உரையாற்றுகையில், “முன்னைய ஆட்சி நிலவிய காலப்பகுதிகளில் அரச சொத்துக்களை விழுங்கி ஏப்பம் விட்ட சம்பவங்கள், ஊழல் சம்பவங்கள் பற்றி பேசுவதையே எதிர்க்கட்சியினர் வழக்கமாகக் கொண்டிருந்தனர். ஆனாலும், இந்த அரசாங்கத்தின் ஆட்சியாளர்கள் பற்றி அத்தகைய குற்றச்சாட்டுக்கள் இல்லாததால் இப்போது வேறு வழியின்றி கல்வி சான்றிதழ்கள் பற்றி பேசுகின்றனர் ” என குறிப்பிட்டிருந்தார்.

அத்துடன், மேலும் பத்துப் பேர்களது கலாநிதி பட்டம் மற்றும் பல்கலைக்கழக சான்றிதழ் தொடர்பாகவும் புதிய சர்ச்சைகள் கிளம்பி உள்ளன. அதிலும், பிரதி

**பிரதமர் ஹறிணி அமரசூரிய எடின்பரோ பல்கலைக் கழகத்தில் Phd கலாநிதி பட்டம் பெற்றதாக கூறப்படுகின்ற போதிலும், அது தொடர்பான தகவல்கள் தேடப்பட்ட போது அவர் முழுநேர கற்கை நெறியை பயின்று கலாநிதி பட்டம் பெற்றவர் அல்ல என்ற தகவல்கள் வெளியாகியுள்ளன என கூறப்படுகின்றது...**



சபாநாயகர் பதவி வகிக்கின்ற ரிஸ்வி சாலி மருத்துவத்துறை டொக்டர் பட்டம் பெற்றவர் எனவும் சிறப்புப் பயிற்சி பெற்ற (ஸ்பெஷலிஸ்ட்) டொக்டர் என பதிவுகளில் கொடுக்கப்பட்ட தகவல்கள் தவறானவை எனவும் உண்மையில் அவர் ஒரு சாதாரண வைத்தியரே (டொக்டர்) தவிர சிறப்பு அல்லது விசேட மருத்துவர் அல்ல என்ற தகவலும் வெளியாகி உள்ளது. அவர் பாகிஸ்தானின் முஸ்தாக் நிஸ்தர் மருத்துவ கல்லூரியில் மருத்துவராக மட்டுமே டொக்டர் பட்டம் பெற்றதோடு இலங்கை மருத்துவ சபையில் பதிவு செய்யப்பட்ட 38 வருட கால அனுபவத்தை பெற்ற வைத்தியர் எனவும் தெரிவித்துள்ளார். இதில் ஆச்சரியம் என்னவென்றால், தேர்தலுக்கு முன்னர் ஸ்பெஷலிஸ்ட் டொக்டராக இருந்தவர் தேர்தலின் பின்னர் சர்ச்சைகள் கிளம்பியவுடன் சாதாரண டொக்டராக மாறியது எவ்வாறு என்பதாகும்.

இவ்வாறாக இன்னும் 10 பேரின் பட்டம் தொடர்பாக புதிய சந்தேகங்கள் கிளப்பப்பட்டு வருகின்றன. அதிலும் மின்சக்தி அமைச்சர் புன்னிய ஸ்ரீ ஜயகொடி பீஎஸ்சி பட்டம் பெற்றவர் என பதிவுகளில் குறிப்பிட்டிருந்தாலும் அவர் 2017 ஆம் ஆண்டு வரையில் பல்கலைக்கழகத்தில் அந்த பட்டத்தை நிறைவு செய்திருக்கவில்லை எனவும் கூறப்படுகின்றது. நிதி அமைச்சராக இருக்கின்ற ஹர்சன நாணயக்காரவின் கலாநிதி பட்டம் நாடாளுமன்ற இணையத் தளத்தில் இருந்து நீக்கப்பட்டிருக்கின்றது. ஏற்கனவே அவர் கலாநிதி பட்டம் பெற்றவர் என்று பிரபல்யப்படுத்தப்பட்டிருந்தாலும் இப்போது அவருக்கு பீ.எச்.டி பட்டம் இல்லை என்பதும், அவர் வழங்கி இருந்த தகவல்கள் தவறானவை என்றும் தெரிவிக்கப்படுகின்றது. ஆனாலும், அவரது கலாநிதிப்பட்டம் நீக்கப்பட்டமை தொடர்பாக அவர் குற்றத் தடுப்பு விசாரணை பிரிவுக்கு டிசம்பர் 16ஆம் திகதி முறைப்பாடொன்றை செய்துள்ளார். அந்த முறைப்பாடு தொடர்பாக அவர் கருத்து தெரிவிக்கையில், தாம் ஒரு போதும் கலாநிதி என்ற பட்டத்தை பயன்படுத்தியதில்லை எனவும், அப்படி இருக்க எவ்வாறு தனது பெயருக்கு முன்னால் கலாநிதி என்ற தகைமை சேர்க்கப்பட்டது எனவும் பின்னர் நீக்கப்பட்டிருக்கின்றது எனவும் கேள்வி எழுப்பியுள்ளார்.

இவ்வாறே அநுர கருணாதிலக்க, அசோக ரன்வல, அருண ஜயந்த, ஹர்சன நாணயக்கார, அருண ஜயகொடி, நலிந்த ஜயதிஸ்ஸ, பிமல் ரத்னாயக்க, தருண திசாநயக்க, கோசல ஜயவீர ஆகியோர்களது பல்கலைக்கழக பட்டம் தொடர்பாகவும் சந்தேகங்கள் கிளப்பப்பட்டு வருகின்றன. அவ்வாறாயின், அரசாங்கம் தேர்தல் காலங்களில் அவர்களுடன் நல்ல கற்றறிந்த அறிவாளிகள், கல்விமான்கள், விற்பன்னர்கள், நிபுணத்துவம் மிக்கவர்கள் இருப்பதாகவும் படிப்பறிவு இல்லாதவர்களால் கடந்த 70 வருடங்களாக நாடு நாசப்படுத்தப்பட்டதாக கூறி வந்த நிலையில் அந்த கூற்றுக்களுக்கு முற்றிலும் மாற்றமான நிலையையே தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் உள்ள அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களது நிலை தற்போது நிலவி வருவதாக கூறப்படுவதால் இவர்களில் யார் உண்மையானவர்கள், யார் போலியானவர்கள் என்பதை நிரூபிக்க



வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

அத்துடன், எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, நாமல் ராஜபக்ஷ ஆகியோரது கல்வித் தகைமை தொடர்பாகவும் எதிர்க்கட்சியில் இருக்கின்ற இன்னும் சில உறுப்பினர்களது தகைமைகள் பற்றியும் ஆளும் தரப்பால் கேள்விகள் எழுப்பப்பட்டுள்ளன.

இந்நிலையிலேயே , கடந்த 18 ஆம் திகதியன்று நாடாளுமன்றில் உரையாற்றிய எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தனது கல்வித் தகைமைகளை உறுதிப்படுத்தும் வகையில் சான்றுகளை முன்வைத்ததுடன், யாரேனும் இவை போலியானவை என நிரூபித்தால் தான் எதிர்க்கட்சித் தலைவர் பதவி, நாடாளுமன்ற உறுப்பினர் பதவி உட்பட அரசியலிலிருந்து விலகுவதற்கு கூட தயாராக இருப்பதாகவும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறே , கல்வித் தகைமைகள் தொடர்பான சர்ச்சைகள் இன்னும் சில வாரங்களுக்கு நீளும் என்றே எதிர்பார்க்கப்படுகின்றது.

---

எம்.ஐ.முபாறக்

# விலை அதிகரிப்பை கட்டுக்குள் கொண்டுவர அரசு கையாளவுள்ள தந்திரோபாய திட்டம்





மக்கள் இந்த அரசை உருவாக்குவதற்குப் பல காரணங்கள் உள்ளன. அவற்றுள் ஒன்றுதான் வாழ்க்கை செலவின் குறைப்பு. அரசு உருவாகி மூன்று மாதங்களை அண்மிக்கின்றது. இந்தக் காலப்பகுதில் மக்கள் மத்தியில் சிறு சலசலப்பு ஏற்படத் தொடங்கியுள்ளது.

அதற்கு காரணம் தேங்காய் மற்றும் அரிசி போன்றவற்றின் தட்டுப்பாடும் விலையேற்றமுமே ஆகும். இதனால் மக்களில் சிலர் குழம்பிப் போயுள்ளனர். எல்லா அரசும் ஒன்றுதான் என்ற மனோநிலைக்கு வந்துள்ளனர்.

இந்த விவகாரத்தை கடந்த அரசுகளின் செயற்பாடுகளுடன் சேர்த்து அலசுகின்ற போதுதான் உண்மை நிலையைப் புரிந்துகொள்ள முடியும். வாழ்க்கைச் செலவினத்தைக் கட்டுப்படுத்த வேண்டும் என்ற நோக்கில் மக்கள் இந்த அரசை உருவாக்கினர் என்பதில் மாற்றுக் கருத்துக் கிடையாது. ஆனால், எடுத்த எடுப்பில் வாழ்க்கைச் செலவினத்தைக் கட்டுப்படுத்த முடியாது என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

ஆட்சி மாறிய உடனேயே வாழ்க்கைச் செலவினத்தைக் கட்டுப்படுத்த வேண்டும் என்றால் திறைசேரியில் போதுமான அளவு பணம் இருக்க வேண்டும். அப்படி இருந்திருந்தால் ரணில் விக்ரமசிங்கவே அவரது ஆட்சியில் அதைச் செய்திருப்பார். ரணில் ஆட்சியைப் பொறுப்பேற்கும் போதே போதுமான நிதி இருக்கவில்லை. இருந்த நிதிகூட அவருக்கு அப்போது ஆதரவு வழங்கிய எம்பிக்களை சந்தோசப்படுத்துவதற்காக அப்படியும் இப்படியுமாக செலவு செய்யப்பட்டு விட்டது.

மீண்டும் தானே ஜனாதிபதியாவதாகவும், ஜனாதிபதியானதும் அடுத்த ஐந்து வருடங்களுக்குள் இதைச் சரி செய்துவிடலாம் என்ற எண்ணத்திலேயே ரணில் இருந்தார். எனினும் அவர் ஆட்சியை இழந்ததும் ஆட்சியைக் கைப்பற்றிய புதிய அரசு விலை குறைப்பைச் செய்வதற்கு திறைசேரியில் போதிய நிதி இருப்பு இருக்கவில்லை. அதற்கமைய பணத்தை ஈட்டுவதற்கான புதிய திட்டங்களையும் நிலுவையில் உள்ள வரிப் பணத்தை அறவீடு செய்வதற்கான திட்டங்களையும் அரசு விரைவாக மேற்கொள்ள வேண்டிய நிலையே தற்போது நிலவுகின்றது.

## ரூபா ஒரு லட்சம் கோடி வரி நிலுவை

குறிப்பாக கடந்த பல வருடங்களாக நிலுவையில் உள்ள வரி அறவிடப்படவில்லை. ராஜபக்ஷ சகோதரர்களின் ஆட்சியிலும் பின்னர் ரணிலின் ஆட்சியிலும் இந்த வரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. நாட்டிலுள்ள சில வர்த்தக முதலாளிமார் அரசியல்வாதிகளையும் அதிகாரிகளையும் தமது பிடிக்குள் வைத்துக்கொண்டு அவர்களுக்கு சில தனிப்பட்ட கவனிப்புக்களை செய்தவாறு இந்த வரி ஏய்ப்பைச் செய்து வந்துள்ளனர். இவ்வாறு வரி ஏய்ப்பு செய்யப்பட்ட நிலுவைத் தொகை ஒரு லட்சம் கோடி ரூபாவாகும்.

கடந்த ஆட்சியாளர்கள் இதை முறையாக அறவிட்டிருந்தால் நிலைமை எப்போதோ மாறி இருக்கும்.பொருட்களின் விலைகளும் மின்கட்டணமும் குறைந்திருக்கும். ஆனால், அவர்கள் முதலாளிமார்களை பாதுகாத்ததில் ஏழை மக்களின் வயிற்றில் அடித்துவிட்டார்கள். புதிய அரசு இந்த வரியை அறவிடுவதாக தேர்தல் காலத்தில் வாக்குறுதி வழங்கியிருந்தது. அதை முறையாக செய்தால் மட்டுமே இந்தப் பிரச்சினைக்கு உரிய தீர்வைக் காண முடியும்.

## அரிசி பதுக்கலும் பின்னால் உள்ள சூழ்ச்சியும்

அரிசி தட்டுப்பாடு எல்லா ஆட்சியிலும் அவ்வப்போது ஏற்படுகின்ற ஒன்றுதான். இது உண்மையில் திட்டமிட்டு மேற்கொள்ளப்படுகின்ற ஒரு செயற்கைத் தட்டுப்பாடு ஆகும். இதன் பிரதிபலனாகவே நாட்டில் போதுமான விளைச்சல் கிடைத்திருந்த போதிலும் அரிசித் தட்டுப்பாடு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**செயற்கை தட்டுப்பாட்டை ஏற்படுத்தி அதை நிவர்த்தி செய்தல் என்ற போர்வையில் தமது பினாமிகளை வைத்து அரிசியை இறக்குமதி செய்வதையே வர்த்தகர்கள் இத்தனை நாளும் கையாண்டுள்ளனர்**

## இது எப்படி சாத்தியமாகும் ?

இந்த அரிசி தட்டுப்பாடானாது அரிசி மாஃபியாக்களின் ஒரு பெரும் சூழ்ச்சியாகும். இந்த சூழ்ச்சியை செய்பவர்கள் அரிசி ஏகபோகத்தை தமது கட்டுக்குள் வைத்திருக்கும் மிகப் பெரிய நெல் ஆலை உரிமையாளர்களாகும். தட்டுப்பாட்டை ஏற்படுத்தி அதை நிவர்த்தி செய்தல் என்ற போர்வையில் அவர்களின் பினாமிகளை வைத்து அரிசியை இறக்குமதி செய்வர்.

குறித்த இறக்குமதி அரிசியை உண்ண முடியாது என்பதை காரணம் காட்டி, 50க்கு 50 என்ற அடிப்படையில் இந்த மாஃபியாக்களிடம் கையிருப்பில் இருக்கும் உள்நாட்டு அரிசியை குறித்த இறக்குமதி செய்யப்பட அரிசியுடன் கலந்திடுவர். அதுமட்டுமல்லாமல் அதை இலங்கை அரிசி எனக்கூறி விற்பனை செய்வர், இவ்வாறு இறக்குமதி செய்து கலப்படம் செய்யும்போது இந்த மாஃபியாக்களுக்கு அதிக லாபம் கிடைக்கின்றது. இதனால்தான் அவர்களால் செயற்கை தட்டுப்பாடு ஏற்படுத்தப்படுகின்கிறது. இந்த நடைமுறையே கடந்த ஆட்சிக்காலங்களில் நிலவி வந்தது.

எனினும், இம்முறை இந்த புதிய ஆட்சியிலும் அதே விளையாட்டைக் காட்டப் பார்த்தனர். அது சரிப்பட்டு வரவில்லை. அரசு முந்திக்கொண்டு வேறு வர்த்தகர்களை வைத்து அரிசியை இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது. இவ்வாறு வேறு வர்த்தகர்களின் மூலம் இந்த அரிசு நாட்டுக்கு வந்தால் இந்த பதுக்கல் வியாபாரிகளின் அரிசியின் விலைகள் குறைந்தே தீரும்.

## எரிபொருள் விலை குறைப்பு : - அரசின் நல்லதொரு திட்டம்

எரிபொருட்களின் விலைகள் குறைந்துவிட்டால் ஏனைய பொருட்களின் விலைகள் தானாகவே குறையும். அதன்படி எரிபொருட்களின் விலையைக் குறைப்பதற்கு அரசு நல்லதொரு திட்டம் வைத்துள்ளது. அதாவது, தனியார் நிறுவனங்களிடமிருந்து எரிபொருளை கொள்வனவு செய்யாது நேரடியாக மத்திய கிழக்கு நாடுகளின் அரசிடம் இருந்து கொள்வனவு செய்வதற்கான திட்டமே அது.

இவ்வாறு செய்தால் இடைத் தரகர்களின் தலையீடு இருக்காது. அவர்களுக்கு கொமிஷன் செல்லாது. கொமிஷன் செல்வதால்தான் எரிபொருட்களின் விலையை அதிகரிக்க வேண்டிய நிலை நிலவுகின்றது. அதன்படி, மிக விரைவில் மூன்று மத்திய கிழக்கு நாடுகளுக்குச் சென்று இது தொடர்பில் பேச்சு நடாத்துவதற்கு அரசு திட்டமிட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

இவ்வாறு வாழ்க்கைச் செலவினை கட்டுப்படுத்துவதற்கு அரசு பல திட்டங்களை வகுத்துள்ளது. அந்தத் திட்டங்களை நிறைவேற்றும்வரை – நீண்டகாலமாக நிலைத்து நிற்கும் மாஃபியாக்களை இல்லாதொழிக்கும் வரை மக்கள் பொறுமையாகத்தான் இருக்க வேண்டியுள்ளது.

எடுத்த எடுப்பில் மக்கள் எதிர்பார்க்கும் மாற்றத்தை ஏற்படுத்த முடியாது. அதற்கான காரணமே மேலே விளக்கப்பட்டுள்ளது. ஊழல், மோசடிமிக்க முழு கட்டமைப்பையும் மாற்றியமைக்க வேண்டும். மாஃபியாக்களை இல்லாதொழிக்கவும் வேண்டும். அதை மெதுவாகத்தான் செய்ய முடியும். பொறுமையாக இருந்து எல்லாவற்றையும் அவதானிப்பதைத் தவிர வேறு வழிகள் கிடையாது.

# கனவில் வந்த காரிகையைத் தேடி...?

ஆர். ராஜலிங்கம்

**அத்தியாயம் 6**



பூங்குழலி என்ன சொல்லப்போகிறாள் என்று ராம்குமார் மிகுந்த ஆர்வத்துடன் கேட்டுக்கொண்டிருந்தார். அவள் சொன்னாள்.

"உங்களிடம் அவனைப்பற்றித்தான் சொல்லவேண்டி இருக்கிறது"

"என்ன? அவனைப்பற்றியா?"

"ஆமாம். வந்து..., அவன் இங்கு இருப்பது எனக்குப் பிடிக்கவில்லை. அவனை உடனே இங்கிருந்து அனுப்பிவிடவேண்டும்".

"அவனையென்றால்...? யாரைச் சொல்கிறாய்?"

"அவன்தான் உங்கள் அசிஸ்டென்ட் தீபன். அவனைத்தான் அனுப்பிவிடவேண்டும்".

"தீபனையா? ஏன் அவன் உன்னை என்ன செய்தான்?"

"அவனால் ஏதும் பிரச்சினைகள் வந்துவிடுமோ என்று பயப்படுகிறேன்"

"பிரச்சினையா? என்ன பிரச்சினை? அவன் உன்னோடு ஏதும் தவறாக நடந்துகொண்டானா?"

பூங்குழலியால் பதில் சொல்லமுடியவில்லை. அவள் தலையைக் குனிந்தபடி கேவிக்கேவி அழலானாள்.

ராம்குமாருக்குப் புரிந்தது. ஓஹோ, அவன் பூங்குழலியுடன் ஏதோ தவறாக நடக்க முயன்றிருக்கிறான். அதனால்தான் அவளுக்கு அவனைப் பிடிக்கவில்லை.

"துரோகி.. உதவி செய்த எனக்கே தீங்கு செய்ய வந்துவிட்டானா? இப்பொழுதே போய் அவனை...." என்று ஆத்திரத்துடன் எழுந்தார் ராம்குமார்.

பூங்குழலியின் குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுத்தது.

"அவன் எதுவுமே செய்யவில்லையே! அபாண்டமாக அவன்மீது பழி சுமத்தலாமா? உண்மையை சொல்லிவிட வேண்டியதுதான்"

"ஆனால் எந்த உண்மையை? விமலா அவனுக்கு தேனீர் கொண்டு போகும்போது அதனை நானே வலிய வாங்கிக்கொண்டு அவனுக்குக் கொடுக்கச் சென்றேனே. அதனையா?"

"அவனுக்கு தேநீர் கொண்டுபோய் கொடுக்கவேண்டிய அவசியம் உனக்கு ஏன் ஏற்பட்டது என்று அவர் கேட்கமாட்டாரா? அவன் தேநீர் அருந்தும் அழகை பார்த்து இரசித்துக் கொண்டு இருந்தேனே அதனையா?"

"அவன் ஓரக் கண்ணால் என்னைக் கள்ளப் பார்வை பார்ப்பது போல் பார்த்தானே. அதனையா?"

"ஏன் என் மனம் இப்படி தடுமாறுகின்றது? இவ்வளவு காலமும் தூய்மையாக வாழ்ந்த எனக்கு ஏன் இப்படி எண்ணம் ஏற்படுகிறது? அவனுக்கும் எனக்கும் என்ன தொடர்பு? அவனை பார்க்கும் போதெல்லாம் என் மனதில் ஏதோ ஓர் உணர்வு ஏற்படுவது போல் இருக்கிறதே. அது ஏன் என்று எனக்குப் புரியவில்லையே! இதையெல்லாம் நான் அவரிடம் எப்படிச் சொல்வேன்?"

இப்படி அவளுடைய மனம் பலவாறு குழப்பம் அடைந்து கொண்டிருந்தது.

அப்பொழுது ராம்குமார் கேட்டார், "என்ன பூங்குழலி தீபனைப் பற்றி ஏதோ சொல்ல வந்தாய். இப்பொழுது பலமாக சிந்தித்துக் கொண்டிருக்கிறாயே! சொல் என்ன நடந்தது? அவன் என்ன செய்தான்" என்று அவர் மீண்டும் மீண்டும் வற்புறுத்திக் கேட்டார்.

"அவன்... அவன் எதுவுமே செய்யவில்லை"

"அப்படியானால் ஏன் அவனை உடனே அனுப்பிவிடவேண்டும் என்று சொன்னாய்?"

"அது வந்து... அவன்மீது எந்தத் தவறும் இல்லை"

"அப்படியானால்?"

"நான்தான் அவனை...?" என்றவள் பேசமுடியாமல் விக்கி விக்கி அழுதாள்.

அவளின் செயல் ராம்குமாருக்கு மிகுந்த ஆத்திரத்தை ஏற்படுத்தி இருக்கவேண்டும். அவர் பூங்குழலியை எரித்துவிடுவதுபோல் பார்த்தார். ஆனாலும் அவர் எதுவும் சொல்லவில்லை. அமைதியாக எழுந்து சென்றார். அவருக்கு ஏதோ புரிவதுபோல் தெரிந்தது.

அன்றைய தினமும் இரவு பூங்குழலி உறக்கம் வராமல் புரண்டு புரண்டு படுத்துக் கொண்டிருந்தாள். அவளுக்கு தீபனைப் பற்றிய சிந்தனை ஏற்பட்டுக் கொண்டே இருந்தது.

"அவன் ஏன் என்னை அப்படி ஓரக்கண்ணால் பார்த்துக் கொண்டிருந்தான்? எனக்குப் புரியவில்லையே! அவனுடைய பார்வை ஏன் அப்படி இருந்தது? அவன் ஏன் என்னை அப்படிப் பார்க்க வேண்டும்? அவனை வீட்டைவிட்டு அனுப்பிவிடவேண்டும் என்று நான் எடுத்த முடிவும் வீணாகிவிட்டதே. நான் அவரிடம் ஏன் அப்படிச் சொன்னேன்? நான்தான் அவனை... என்று சொன்னேனே. அந்த வார்த்தை எப்படி என் வாயிலிருந்து வந்தது? அவரும் டக்கென்று எழுந்து போய்விட்டாரே. அவர் என்னைப் பற்றி என்ன நினைத்திருப்பார் என்று தெரியவில்லையே!" இப்படி பலவாறு சிந்தித்துக் கொண்டிருந்தவள் தன்னையுமறியாமல் உறங்கிப் போய்விட்டாள்.

நள்ளிரவு... தனக்கு முன்னால் ஏதோ சத்தம் கேட்கவே நிமிர்ந்து பார்த்தாள்.

அங்கே? அவள் கண்ட காட்சி? அவளுக்குப் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்துவதாக இருந்தது.

அங்கே..., தீபன்தான் நின்று கொண்டிருந்தான். அவனுடைய முகம் வெறிபிடித்தது போல் தோன்றியது.

இவன் ஏன் இந்த நேரத்தில் இங்கு வந்தான் என்று அவள் சிந்தித்துக் கொண்டிருக்கும் போதே அவன் அவளை நோக்கி நெருங்கி வந்தான். அவளுக்குப் புரிந்தது. இவன் ஏதோ தீய நோக்கத்துடன்தான் இங்கு வந்திருக்கிறான் என்று புரிந்துகொண்டாள்.

அவன் அவளை இன்னும் நெருங்கி வந்தான்.

**(தொடரும்)**

பூங்குழலியின் குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுத்தது. "அவன் எதுவுமே செய்யவில்லையே! அபாண்டமாக அவன்மீது பழி சுமத்தலாமா? உண்மையை சொல்லிவிடவேண்டியதுதான்" "ஆனால் எந்த உண்மையை? விமலா அவனுக்கு தேனீர் கொண்டு போகும்போது அதனை நானே வலிய வாங்கிக்கொண்டு அவனுக்குக் கொடுக்கச் சென்றேனே அதனையா?"

## குறுக்கெழுத்துப் போட்டி - 07

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | 2 | ■ | 3 | |
| | ■ | ■ | ■ | 4 | 5 | | ■ |
| 6 | | | ■ | 7 | | | ■ |
| | ■ | ■ | 8 | ■ | | ■ | 9 |
| 10 | 11 | | | 12 | ■ | 13 | |
| ■ | | ■ | 14 | | 15 | | ■ |
| 16 | | | ■ | 17 | | | ■ |
| | ■ | ■ | 18 | | | ■ | ■ |

**இடமிருந்து வலம்**

1. மிகப்பெரிய பரிசு இதுதானாம்.
3. கொட்டும் இயல்புடைய உயிரினம்.
4. திசை என்றும் சொல்லலாம். குழம்பி.
6. நட்சத்திரத்தை குறிக்கும்.
7. நெற்களஞ்சிய அறையை குறிக்கும். திரும்பி.
10. விடியலையும் குறிக்கும்.
13. கடல் என்றும் சொல்லலாம்.
14. திருமண வீட்டிலும் போடப்படும். குழம்பி.
16. சிறிய நீர் பாத்திரம்.
17. விநோதம் என்றும் பொருள்படும்.
18. அறிவும் சிலவேளைகளில் குழம்புவது உண்டு.

**மேலிருந்து கீழ்**

1. பெரும்பாலும் பண்டிகை காலங்களில் சிறுவர் கரங்களில் மின்னும்.
2. புரியாமல் இருப்பது.
3. சக்திமிக்க மரவகை ஒன்று.
5. வேகமாக ஓடும் விலங்கு இனம் ஒன்று.
8. இருமனங்களில் ஏற்படும் அன்பு பிணைப்பு.
9. பள்ளத்தையும் குறிக்கும்.
11. இனிப்பு பண்டம் ஒன்று.
12. புத்திரி என்றும் சொல்லலாம். குழம்பி.
13. இது அலறினால் அபசகுனம் என்பார்கள்.
15. இதுவும் திருமண வீட்டிலும் போடப்படுவது தான்.
16. மழை வரும்போது தான் இதன் நினைவு வருகிறது.

**உங்கள் பதில்களை தபால் அட்டையில் ஒட்டி பெயர், முகவரியுடன் எமக்கு அனுப்பி வைக்கலாம்.**

ஒருவன் வாரவெளியீடு, ஆசிரியர் பீடம், பெல்லாட்ரிக்ஸ் கட்டிடம், 2ஆம் மாடி, டெனிஸ்டர் சில்வா மாவத்தை, கொழும்பு - 09

## குறுக்கெழுத்துப் போட்டி 05 இற்கான விடை

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 மா | 2 லை | க் | 3 க | 4 ண் | ■ | 5 கா | 6 வி |
| 7 ணி | கா | ■ | 8 ட் | ப | டி | ■ | டு |
| க் | ■ | ■ | டெ | ■ | ■ | ■ | த |
| 9 க | ண் | ணூ | று | ■ | 10 மு | த | லை |
| ம் | ■ | ■ | ம் | ■ | லா | ■ | ■ |
| ■ | 11 அ | ற் | பு | 12 த | ம் | ■ | 13 பி |
| 14 தி | ர | ■ | ■ | ம் | ■ | ■ | ள் |
| ■ | 15 ணை | வீ | ■ | 16 பி | த் | த | ளை |

## பாராட்டுப் பெறுவோர்

1. ஏ.செபஸ்தியன், உக்குவளை
2. எஸ்.நேஹா, மன்னார்
3. எச்.முனவ்வர், பதுளை
4. சி.யொஹான், கொழும்பு
5. கே.வகீஷா, வத்தளை

# நம்பிக்கை எனும் தாரக மந்திரம்...!

மனமே

சுபா




**நா**ம் வாழும் வாழ்க்கையின் அஸ்திவாரமே நம்பிக்கை எனும் வார்த்தையில் தான் தங்கியுள்ளது. ஆனால் அந்த நம்பிக்கை தவறான மனிதர்கள் மீது வைக்கப்படும் போது நம்மையே அது நிலைகுழையச் செய்துவிடுகின்றது. அதனால், எந்த ஒரு சந்தர்ப்பத்திலும், யாரையும் எவரையும் கண்மூடிதனமாக நம்பி விடக்கூடாது.

குறிப்பாக, தேவைக்காக மட்டுமே பழகும் மனிதர்கள் பலரை நாம் பார்த்துக் கொண்டு தான் இருக்கிறோம். தேவை என்றால் நம்மை புகழ்வதும், அதுவே அவர்களின் தேவை முடியும் பட்சத்தில் நம்மை கண்டுகொள்ளாததுமாக பலரை நாம் சந்தித்திருக்கலாம். அதனால், தேவைக்காக பழகும் மனிதர்கள் மீது நம்பிக்கை வைத்தால் கஷ்டமும் நஷ்டமும் தான் நமக்கு எஞ்சும். அதேநேரம், யாரையும் நம்பாமலிருப்பது அதைவிடவும் மோசமானது. அது நம்மீது உண்மையிலேயே அக்கறையுள்ள சொந்தங்களை நம்மை விட்டு விலக்கிவிடும். ஆகவே, நமது நம்பிக்கையை சரியான நபர் மீதுதான் வைத்துள்ளோமா என்பதை நாம் தான் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.

யாரை நம்பக்கூடாது என்பதற்கான பதில் பல காரணங்களால் மாறுபடலாம். பொதுவாக, நம்பிக்கையைக் கொடுக்காதவர்களை அல்லது நம்பிக்கைக்கு பொருத்தமான முறையில் செயல்படாதவர்களை நம்பாமல் இருப்பது நல்லது.

அடுத்தது, வெளிப்படையாக பொய்யாற்றுவோரை சற்று தூரத்தி லேயே நாம் வைத்திருக்க வேண்டும். அந்தவகையில், பொய்யாற்றுவது ஒருவரின் நம்பகத்தன்மையை இழப்பதற்கு முதன்மையான காரணமாகும். இது அவர்களின் மற்ற வார்த்தைகளையும் சந்தேகப்படுத்தும். அதுபோல், ஒரு நபர் தொடர்ந்து தனது வாக்குறுதிகளை நிறைவேற்ற தவறினால், அவரிடமும் நம்பிக்கை வைக்க முடியாது.

தவிர, சுயநலம் கொண்டவர்கள் மீதும் நம்பிக்கை கொள்வது ஆபத்தானது. தன் நலனுக்காக மட்டுமே செயல்படுவோர் பொதுவாக மற்றவர்களின் நலனை மதிக்காமல் இருப்பதால், அவர்களை நம்புவது தேவையற்ற கசப்புக்களை ஏற்படுத்தலாம்.

அதுபோல், முறைகேடுகளில் ஈடுபடுபவர்களிடம் எப்போதும் நாம் எட்டியே இருப்பது நல்லது. வஞ்சகம், மோசடி, அல்லது குற்ற நடவடிக்கைகளில் ஈடுபடும் நபர்கள் நம்பகத்தன்மையை இழக்கிறார்கள்.

முக்கியமாக, பொய்யானவர்களை அல்லது நம்பகமில்லாதவர்களை நம்புவதால் பொருளாதார ரீதியாக மட்டுமல்ல, உணர்ச்சி மற்றும் சமூக ரீதியாகவும் நாம் வீழ்ந்துவிடக்கூடும் என்பதை எப்பொழுதும் நினைவிற் கொள்வது நல்லது. ஆகவே, நம்பகமில்லாதவர்களால் நம்முடைய வாழ்க்கையில் நீண்டகால பிரச்சினைகள் அல்லது தடைகள் ஏற்படலாம்.

அந்தவகையில், நம்பகமில்லாதவர்களை அடையாளம் கண்டு, அவர்கள் மீது அதிக நம்பிக்கை வைக்காமல் இருப்பது நல்லது. முடிந்தவரை வெளிப்படையான, நம்பகமானவர்களுடன் மட்டுமே உறவுகளை பேணி காப்பதென்பது, நம்மையும், நம் உணர்வுகளையும் பேணி காக்கும் என்பதை என்றும் நினைவிற் கொள்ளத் தவறவேண்டாம்.

# "தன்னைப் போல் பிறரையும் நேசி"

சிறுகதை

ஆர்.சுபாஷினி



அவன் பெயர் ஹென்றி தோமஸ். 15ஆவது வயதிலேயே தகப்பனை இழந்தவன். மூத்த மகனாகப் பிறந்ததால் குடும்பப் பொறுப்பு சிறுவயதிலேயே அவன் தலையில். அவனுக்கு 3 தங்கைகள். அம்மா, தங்கைகள் மற்றும் இவன் என குடும்பத்தில் மொத்தம் 5 பேர்.

அம்மா உழைக்கும் பணம் அவர்கள் உணவுக்கே சரியாக இருந்தது. பாடசாலை சென்று வந்ததும், கிடைக்கின்ற வேலையையெல்லாம் செய்வான். அவனுக்குக் கிடைக்கும் சொற்ப பணம் அவன் கல்விக்குக் கூட போதவில்லை. நாளுக்கு நாள் குடும்ப வறுமை அதிகரித்த வண்ணமே இருந்தது.

ஹென்றியின் 20ஆவது வயதில், வெளிநாட்டு வேலைவாய்ப்பொன்று கிடைத்தது. நல்ல சம்பளத்துடன் வேலை. நேர்முக தேர்வுக்கு சென்றவன், தெரிவும் செய்யப்பட்டான். ஆனால், வெளியே வரும் போது அந்த அலுவலகத்தில், "இந்த வெள்ளிக் கிழமைக்குள் 2 இலட்சம் ரூபாய் கட்ட வேண்டும். அப்படிச் செய்தால் அடுத்த மாதம் நீ வேலைக்குச் சேரலாம்" என்று ஒரு தகவலை சொன்னார்கள்.

ஹென்றிக்கோ பெரும் அதிர்ச்சி. "இவ்வளவு பெரிய தொகைக்கு எங்கே போவேன்" என்று கலங்கினான். தெரிந்த சில உறவினர்களிடம் சென்று உதவி கேட்டான். ஆனால், யாரும் உதவ முன்வரவில்லை. அவர்களிடமிருந்து வந்த ஒரே பதில், "ஒரு வேளை உன்னால் அந்த பணத்தை கட்ட முடியாவிட்டால், எங்களில் ஒருவனை அதற்கு சிபாரிசு செய்" என்பதுதான்.

உடைந்துபோன மனதுடன், வாடி வதங்கி கறுத்துபோன முகங்களுடன் வீட்டுக்குச் சென்றான். அவன் தாய் ஓடி வந்து, "நேர்முக தேர்வு என்ன ஆயிற்று?" என்று கேட்டார் பதைபதைப்புடன்.

ஹென்றி மெல்லிய குரலில், "எனக்கு அந்த வேலை கிடைக்கல அம்மா" என்றான்.

அவன் பொய்தான் சொல்கிறான் என்பதை அவன் தாய் மிகத்துல்லியமாகக் கண்டுபிடித்தார்.

"பொய் சொல்லாதே. உண்மையை மறைக்காமல் சொல்"

"வேலை எனக்குத்தான் அம்மா, ஆனால், வெள்ளிக் கிழமைக்குள்ள 2 இலட்ச ரூபா கட்டணுமாம். அதுக்கு நாம எங்கே போவோம்" தேம்பி தேம்பி அழுதான் ஹென்றி.

மகனின் விம்மலை தாங்கிக்கொள்ள முடியாத தாய், நேராக தன் அறைக்குள் சென்று, கவர் ஒன்றை எடுத்து வந்து அவனிடம் கொடுத்தார். பிரித்துப் பார்த்தால் அதில் அவர்கள் வீட்டுப் பத்திரம் இருந்தது.

"இதை வைத்து அந்த பணத்தை வாங்கிக் கட்டு. தைரியமாக செய். எல்லாம் நன்மைக்கே"

"அம்மா, என்னதான் கஷ்டமா இருந்தாலும் அத மத்தவங்கக் கிட்ட மறைச்சு வாழ இந்த வீடு தானே நமக்கு இருக்கு? வேணவே வேணாம்" மறுத்தான் ஹென்றி.

"ஹென்றி உன் மேல் எனக்கு நம்பிக்கை இருக்கு. தைரியமாக இந்த காரியத்தைச் செய். எல்லாம் நன்மைக்கே" என்றார் அவனின் தாய் நிதானமாக.

சற்றுநேரம் சிந்தித்தவன், அந்தப் பத்திரத்தை வாங்கிக் கொண்டான். இத்துடன் தமது துன்பமெல்லாம் ஒரு முடிவுக்கு வரப் போகின்றது என்ற மகிழ்ச்சி அவனுக்கு புதுத்தெம்பை தருவதை அவனாகவே உணர்ந்தான்.

அடுத்த நாள், பத்திரத்தை எடுத்துக் கொண்டு பணம் வாங்கச் சென்றான். வீட்டு செலவு, பயண செலவு என மொத்த தேவைக்கும் சேர்த்து 5 இலட்சம் ரூபா பெற்றவன், அதை பையில் வைத்துக் கொண்டு, சைக்கிளில் வீட்டை நோக்கிச் சென்றான். அந்த இடத்தில் இருந்து, அவன் இல்லத்திற்கு 3 கிலோ மீற்றர் தூரம் இருக்கும்.

வீட்டை அடைந்தவன் பையை எடுக்கலாம் என்று பார்த்தால், அந்தோ.... பையைக் காணவில்லை. அதிர்ந்து போனான்.

"இயேசுவே, இப்போது நான் என்ன செய்வேன்? ஏன் இப்படி... நாம் என்ன பாவம் செய்தோம்... அம்மாவும் வீட்டில் இல்லையே... கர்த்தரே எனக்கு உதவுங்கள்..." என்று அழுது கொண்டே வந்த வழியே சைக்கிளில் வேகமாகப் பறந்தான்.

கண்ணீரோடு திரும்பிச் சென்று கொண்டிருந்தான். அப்போது, அங்கு பஸ் நிலையத்தில் நின்றுகொண்டிருந்த நபர் ஒருவர் ஹென்றியைப் பார்த்து, "என்ன தம்பி தேடிகிட்டே போறீங்க?"

"ஒரு முக்கியமான பையை தவற விட்டு விட்டேன்"

"அப்படி என் முக்கியம்?"

"என் வாழ்க்கையே அதில தான் இருக்கு, கடன் வாங்கிய பணம் மற்றும் ரசீது"

"இதுவா பாருங்க"

"ஆ.... இது... இதுவே தான், ரொம்ப நன்றிங்க!"

"கவனமா இருங்க தம்பி. வாழ்க்கையே அடங்கியிருக்குனு சொல்றீங்க"

"இது எப்படி உங்க கையில?"

"உங்க சைக்கிள்ள இருந்து இந்த பை கீழ விழுந்துச்சி. அப்போ, அத எடுத்துட்டு உங்க பின்னாடியே ஓடிவந்தேன். ஆனா உங்கள பிடிக்க முடியல. நீங்க வேகமா போய்டீங்க. சரி... எப்படியும் திரும்பி வருவீங்கனுதான் இங்கயே காத்துட்டு இருந்தேன்"

"ஐயா... என் குடும்பத்தையே காப்பாத்திட்டீங்க. இது மட்டும் திரும்ப கிடைக்காம இருந்திருந்தா நான் குடும்பத்தோட தற்கொல தான் பண்ணியிருக்கனும். ரொம்ப நன்றி. நான் உங்களுக்கு எப்படி நன்றி சொல்றதுனு தெரியல. இதில் முக்கியமான செலவு போக ஐம்பதாயிரம் ரூபா, என் கை செலவுக்குதான். அதில் பாதி உங்களுக்கு தான் சொந்தம் வாங்கிக் கொள்ளுங்க"

"ச்சே வேணாம் தம்பி. பலன் எதிர்பார்த்து நான் இத செய்யல" என்று கூறியவர், அந்த இடத்திலிருந்து வேகமாக விடைபெற்று சென்றார்.

அவர் செய்த உதவிக்கு எப்படி கைம்மாறு செய்யப்போகின்றோம் என தவித்த ஹென்றி, ஒரு நிமிடம் என்னசெய்வதென்று தெரியாமல் சிந்தித்துக் கொண்டிருந்தான். பின்னர் ஏதோ நினைவு வந்தவனாய், அவரையே பின்தொடர்ந்து சென்றான்.

அவர் நேராக அருகிலிருந்த புடவைக் கடைக்குள் நுழையச் சென்றார். அப்போது அவரை இடைமறித்த ஒரு நபர், "என்னப்பா அல்பர்ட்... என்கிட்ட கடனா வாங்கிய பத்தாயிரம் பத்தி கொஞ்மாவது ஞாபகமிருக்கா? ரெண்டு மாசமா வட்டியயும் காணல. முதலையும் கொடுக்குற மாதிரி தெரியல... என்ன தான் நினைச்சுட்டு இருக்க...? வாங்கின கடன திருப்பி கொடுக்க முடியல. ஆனா புது உடுப்பு மட்டும் எடுக்க வந்துட்ட..." அந்த நபர் சற்று கோபமாகத் தான் கேட்டார்.

அதற்கு அவர், "மன்னிச்சிருங்க ஐயா. நான் வேல செஞ்ச கம்பெனிய திடீர்னு மூடிட்டாங்க. எங்கெங்கயோ வேல தேடி அலைஞ்சிட்டேன். எதுவும் சரி வருதில்ல. நாளைக்கு கிறிஸ்மஸ். என் மகனுக்கும், மகளுக்கும் குறைஞ்ச விலையில சரி ஒரு உடுப்பு எடுக்கலாம்னு தான் வந்தேன். சீக்கிரமே உங்ககிட்ட வாங்கின கடன திருப்பி தந்திருவேன். தயவு செஞ்சு எனக்கு ஒரு மாசம் டைம் தாங்க..." கெஞ்சிய படி கேட்டார்.

"இது நல்லா இருக்கே. புது உடுப்பு எடுக்க முடியும். கடன திருப்பி கொடுக்க கசக்குதா. மரியாதையா என் கிட்ட வாங்கின பணத்தை வட்டி, முதலோட இப்பவே வைங்க. இல்லணா என் மறுமுகத்த பார்ப்பீங்க..." அந்த நபர் கடுமையாக பேசுவதைக்கேட்ட அந்த நல்ல மனிதர், தன் கையிலிருந்த பணத்தை, அப்படியே அவனிடம் கொடுத்துவிட்டு, கலங்கிய கண்களுடன் அங்கிருந்து சென்றார்.

ஹென்றிக்கு என்னவோ போல் இருந்தது. அத்தகைய வறுமையிலும், நேர்மை தவறா அந்த நல்ல மனிதனின் குணத்தை கண்டு பூரித்து போனான்.

இரவு 8 மணி இருக்கும்.

அல்பர்ட் வீட்டில் மிகுந்த கவலையோடு உட்கார்ந்திருந்தார். இதற்கு முன்னர் எந்த கிறிஸ்மஸ் பண்டிகையின் போதும் அவர் குடும்பம் இப்படியிருந்ததில்லை. சரியாக 12 மணி நள்ளிரவு தேவாராதனைக்கு அவர்கள் செல்லத் தவறியதில்லை. ஆனால் இந்த வருடம் போகக் கூடிய சூழ்நிலையும் இல்லை. நீண்ட நேரமாக பட்டாசும், புத்தாடையும் கேட்டு அழுத அவரின் பிள்ளைகள் பசியுடன் உறங்குவதைப் பார்த்து அவர் இதயமே வெடித்துவிடும் போலிருந்தது.

அப்போது யாரோ அவர் வீட்டுக் கதவை தட்டும் சத்தம் கேட்டது. அவர் மனைவி போய் கதவைத் திறந்தார்.

அங்கே....

ஹென்றி தான்.

நின்றுகொண்டிருந்தான். அவன் கைகளில் இரண்டு, மூன்று பைகள்.

"வாங்க தம்பி... நீங்க எங்க இங்க..." ஆச்சரியமாகக் கேட்டார் அல்பர்ட்.

"என்ன ஐயா, எனக்கு அவ்வளவு பெரிய உதவி செஞ்சிட்டு, எதுவுமே நடக்காத மாதிரி வந்துட்டீங்க. நீங்க மட்டும் இல்லனா குடும்பத்தோட நாங்க இன்னைக்கு தற்கொலை செஞ்சிருக்கணும். நிச்சயமா உங்க இடத்தில யார் இருந்திருந்தாலும் உங்களப் போல நடந்திருக்க மாட்டாங்க. தயவு செஞ்சு இத வேணான்னு சொல்லாதீங்க" என்று கூறியவன், அந்தப் பைகளை அங்கேயே வைத்துவிட்டு கண்ணிமைக்கும் நேரத்தில் அங்கிருந்து கிளம்பிச் சென்றான்.

அந்தப் பைகளில் அந்தக் குடும்பத்தில் உள்ள அனைவருக்குமான புத்தாடைகள், பட்டாசுகள், இனிப்புப் பண்டங்கள் மற்றும் நாளை பண்டிகைக்குத் தேவையான உணவுப் பொருட்களுடன் பத்தாயிரம் ரூபாய் பணமும் இருந்தது.

அல்பர்ட் மனதில், ஆண்டவனாகிய இயேசு பிரான் கூறிய "தன்னைப் போல் பிறரையும் நேசி" என்ற பொன்னான வார்த்தைகள் நினைவுக்கு வந்தன.

●

# நத்தார் கொண்டாட்டங்கள்



மேலை நாடுகளில் கிறிஸ்மஸ் மரத்தைச் சுற்றியும், கிறிஸ்மஸ் காலுறைகளுக்கு உள்ளேயும் பரிசுகளை மறைத்து வைத்து விடியற்காலையில் குழந்தைகளிடம் கிறிஸ்மஸ் தாத்தா இரவில் வந்து வைத்துவிட்டுப் போனதாகச் சொல்லி குழந்தைகளை குதூகலிக்கச் செய்கின்றனர்.

- இயேசு பிரான் பௌர்ணமி தினத்தன்று அவதரித்தார். எனவே எந்த ஆண்டுகளிலெல்லாம் பௌர்ணமி வருகிறதோ அந்த கிறிஸ்மஸை விசேட கிறிஸ்மஸ் ஆக கொண்டாடுகின்றனர். அந்த வகையில் கிறிஸ்துவுக்குப் பின், இதுவரை 72 தடவைகள் கிறிஸ்மஸ் தினத்தன்று பௌர்ணமி வந்துள்ளது. இந்த நூற்றாண்டில் 1901, 1920, 1931, 1970, 1996, 2015 ஆகிய ஆண்டுகளில் 6 தடவை விசேட கிறிஸ்மஸ் வந்துள்ளது.

- பசிலிக்கா என்பது கிரேக்க சொல். இதற்கு பெரிய கிறிஸ்தவ ஆலயம் என்று பொருள். கிறிஸ்தவ ஆலயங்களில் பேராலயம் என்ற பெருமைக்குரியதை பசிலிக்கா என்று அழைப்பார்கள்.

- ஜேர்மனி இரண்டாகப் பிரிந்திருந்த காலத்தில் இரண்டு நாடுகளுக்கும் நடுவே ஒரு சுவர் அமைக்கப்பட்டிருந்தது. சுவரின் நடுவே ஒரு கதவு அமைக்கப்பட்டது. கிறிஸ்மஸ் அன்று மட்டுமே, இந்தக் கதவு திறக்கப்பட்டு இருநாட்டு மக்களும் வாழ்த்துக்களை பரிமாறிக் கொள்வர். மற்ற நாட்களில் இந்தக் கதவு மூடப்பட்டிருக்கும்.

- இங்கிலாந்தில் கிறிஸ்மஸ் மரம் அறிமுகப்படுத்துவதற்கு முன்னதாகவே ஜேர்மன், ஆஸ்திரியா உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளில் "பிர்" என்ற மரத்தை அலங்கரிக்கும் வழக்கம் இருந்தது. இருப்பினும், மரங்களில் இலைகள் மற்றும் மலர்களைக் கட்டி அலங்கரிக்கும் வழக்கம் இங்கிலாந்தில் தான் 1841ஆம் ஆண்டில் ஆரம்பித்தது.

- ஸ்காட்லாந்து நாட்டில் 20 நாட்கள் கிறிஸ்மஸ் விழா கொண்டாடப்படும். "யூல்" எனப்படும் டிசம்பர் 18ஆம் திகதி கிறிஸ்மஸ் கொண்டாட்டம் துவங்கி ஜனவரி 6ஆம் திகதி வரை நடக்கும். கடைசிநாள் விழாவை "எபிபனி" என்கிறார்கள்.

- சுவீடன் நாட்டில் மக்கள் கிறிஸ்மஸ் மரங்களை நடும்போது பச்சை இலைகளைப் பயன்படுத்துவதில்லை. ஏனெனில், அந்நாட்டில் யாராவது இறந்து போனால் பச்சை மரங்களை சமாதி அருகில் நடுவதுண்டு. இறப்பின் சின்னமாக பச்சை மரம் இருப்பதால் கிறிஸ்மஸ் மரங்களுக்கு முழுக்க முழுக்க பூக்களையே பயன்படுத்தி அலங்கரிக்கிறார்கள்.

- இயேசுநாதர் பிறந்ததைப் போல சித்தரிக்கும் கிறிஸ்மஸ் குடில்கள் விதவிதமான அலங்காரங்களுடன் உலகெங்கும் அமைக்கப்படுகின்றன. இதை முதன்முதலாக புனித பிரான்சிஸ் என்பவர் 1722ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தினார்.



# அரிசியை கடவுளாகப் பார்க்கும் மக்கள்

அரிசியை கடவுளாகப் பார்க்கும் மக்கள் யார் தெரியுமா? அது தாய்லாந்து மக்கள்தான். அரிசியைப் பழித்தால் மட்டும் அவர்களுக்குப் பிடிக்காதாம். யாராவது அரிசி உணவு சாப்பிட்டுவிட்டு அதன் மூலம் வயிற்று வலி என்று சொல்வது கூட அரிசியைப் பழிப்பதாம். அப்படிக் கூறினால் அந்த மக்களுக்கு மிகுந்த கோபம் வந்துவிடுமாம். அரிசியை உணவாகப் பார்க்காமல் கடவுளாகவே பார்க்கிறார்கள் இவர்கள்.

உலகில் 30சதவீத அரிசி இங்குதான் உற்பத்தியாகிறது. ஆண்டுதோறும் "விதை வழங்கும் விழா" மன்னர் முன்னிலையில் பிரமாண்டமாக நடைபெறும். இவ்விழாவில் மன்னர் தன் கையால் வழங்கும் விதை நெல்லை விவசாயிகள் தங்கள் விதை நெல்லோடு சேர்த்து விதைக்கின்றனர். இதனால், விளைச்சல் அதிகரிக்கும் என்பது அவர்களின் நம்பிக்கை.






# குகைக்குள் 28 மணித்தியாலங்கள் உயிருக்குப் போராடியவர்

ஜோன் எட்வர்ட் ஜோன்ஸ் என்பவர் தனது வாழ்நாளின் கடைசி 28 மணித்தியாலங்களைக் கழித்த அவரின் இறுதி ஓய்விடமாகவும் இருப்பது நட்டி புட்டி (Nutty Putty Cave) என்னும் குகை.

இந்தக்குகைக்கு இப்பெயரை வைத்தவர் கேவர் டேல் கிரீன் (Caver Dale Green) என்பவராவார். இவரே இந்தக் குகையை 1960ஆம் ஆண்டு கண்டுபிடித்தார்.

அக்குகையில் அவர் 1400 அடி நீள சுரங்கங்கள் மற்றும் களிமண் என்பவற்றைக் கண்டபின்னரே இந்தப்பெரைச் சூட்டினார். சூடான உயரும் நீர், பிளவுகள் மற்றும் இதமான காற்று என்பவற்றையும் அந்தக் குகையில் உணரக்கூடியதாக இருந்ததாம்.

பசுமையான அதன் பல சுரங்கங்களில் களிமண்ணின் மென்மையான பழுப்பு நிற புட்டி (மக்கிய) போன்ற அமைப்புடன் இந்தப்பெயர் தொடர்புடையதென நம்பப்படுகிறது. நீர் வெப்பம் நிறைந்த இந்த நட்டி புட்டி குகை அமெரிக்காவின் உட்டா (Utah County) என்னும் பிரதேசத்தில் அமைந்துள்ளது.

முன்னர் இக்குகை துணிச்சல் மிக்கவர்கள் மத்தியில் பிரபலமாக இருந்தது. 2009ஆம் ஆண்டு நடைபெற்ற ஜோன்ஸனின் மரண விபத்தை அடுத்தே மக்கள் இங்கு செல்வதற்கு தடை விதிக்கப்பட்டது.

ஜோன்ஸனின் மரணம் ஒரு துயரமான நினைவாகும். 2009ஆம் ஆண்டு நொவம்பர் 24ஆம் திகதி ஜோன்ஸன் இந்தக் குகையில் சிக்கி 28 மணித்தியாலங்கள் உயிர் பிழைக்கப்போராடி மரணமடைந்தார். அவரைக் காப்பாற்றுவதற்காக மீட்புப் பணியில் 27 மணித்தியாலங்கள் போராடிய அவரின் சகோதரரும் அங்கேயே மாண்டார்.

இந்த நிலையால் இக்குகை நிரந்தரமாக மூடப்பட்டு சீல் வைக்கப்படும் என்றும் மீட்புப் பணியாளர்கள் ஜோன்சனின் உடலை அகற்ற முயற்சிக்கக் கூடாதென்றும் அதிகாரிகள் அறிவித்தனர்.

இந்த இரண்டு மரணங்களால் உள்ளூர் மக்கள் இன்னும் துயரங்களில் இருந்து விடுபடாமல் இருந்தாலும் இந்தக் குகை இன்னும் உட்டா பிரதேசத்தில் தலைநிமிர்ந்து நினைவுச் சின்னமாக நிற்கிறது.



# வகுப்பறைக்குள் வெளவால்! ஆசிரியைக்கு ஏற்பட்ட நிலை?

மத்திய கலிபோர்னியாவில் வகுப்பறைக்குள் ஆசிரியை ஒருவரை வெளவால் கடித்ததையடுத்து அவர் கிருமித தொற்றுக்குள்ளாகி மரணமடைந்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இச் சம்பவத்தில் லீ செனேக் (Leah Seneng) என்னும் பெண்ணே மரணமடைந்தவர். வெளவால் கடித்ததால் இவர் ரேபிஸ் என்னும் உயிர்கொல்லி கிருமித் தொற்றுக்கு உள்ளானதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

மரணமடைந்த பெண்ணின் தோழி இதுபற்றிக் கூறுகையில் வகுப்பறைக்குள் ஒரு வெளவால் கிடந்ததாகவும், அதனை அகற்றுவதற்காக தூக்கிய போது அது அவரைக் கடித்துவிட்டதாகவும், ஆரம்பத்தில் அதன் தாக்கம் எதுவும் அவருக்கு தெரியவில்லையென்றும், ஆனாலும் சில வாரங்களுக்குப் பின்னர் அவர் சுகவீனமுற்று ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டதை அடுத்து அவருக்கு, கிருமி தொற்று ஏற்பட்டு இறந்ததாகவும் அந்தத் தோழி தெரிவித்தார்.

இதேவேளை, வெளவால்களிடமிருந்து பாதுகாப்பாக இருக்குமாறு சுகாதார அதிகாரிகள் பொதுமக்களுக்கு அறிவுறுத்தல் விடுத்துள்ளனர்.

# உலக நத்தார் வழிபாட்டு முறைகள்

## இத்தாலியில்



இத்தாலியில் இயேசுநாதரின் பிறப்பை நினைவு கூரும் வகையில் தேவாலயங்களிலும், வீடுகளிலும், பிரதான இடங்களிலும் அவர் மாட்டுத் தொழுவத்தில் பிறந்த நிகழ்வை அப்படியே வடிவமைத்து காட்சிப்படுத்துகின்றனர். நத்தார் பண்டிகை அலங்காரங்களில் இதுவே பிரதானமானதாகக் கருதப்படுகிறது.

இத்தாலியில் நடக்கும் இந்த பாரம்பரிய நிகழ்வையே உலகெங்குமுள்ள மற்ற நாடுகளிலும் தொடர்கின்றனராம்.

## இங்கிலாந்தில்



இங்கிலாந்தில் பெரும்பாலான மக்கள் நத்தார் பண்டிகைக் கொண்டாட்டங்களை நொவம்பர் மாத மத்தியிலேயே ஆரம்பித்து அலங்கார வேலைகளையும் செய்வார்கள். அநேக மக்கள் தம் வீடுகளை ஏராளமான அழகிய பண்டிகை விளக்குகளால் அலங்கரிப்பதுடன் கண்ணைக் கவரும் பல அலங்கார வேலைப்பாடுகளையும் செய்வர். அத்துடன் இவர்கள் நிதிகளை சேகரித்து தர்ம காரியங்களிலும் ஈடுபடுகின்றனர்.



## ஜேர்மனியில்

நத்தார் பண்டிகை நெருங்கும் வாரங்களில் ஜேர்மனியில் பல இடங்களில் கிறிஸ்மஸ் சந்தைகள் திறக்கப்படுகின்றன. பிரபலமான சந்தையாகக் காணப்படுவது நியுரேபெர்க் (Nuremberg) கிறிஸ்மஸ் மார்க்கெட் ஆகும். இது மிகவும் பழைமையானதும், பிரபலமானதுமாகும்.

வீடுகள் வண்ணமயமான விளக்குகளாலும், பொருட்களாலும் அலங்கரிக்கப்பட்டு மிக அழகாகக் காட்சியளிக்கும். கிறிஸ்மஸ் மரம் ஒவ்வொரு வீடுகளிலும் தலைநிமிர்ந்து காட்சியளிக்கும். மறுநாள் குடும்பங்கள் ஒன்று கூடி கிறிஸ்தவ தேவாலயங்களுக்குச் சென்று பிரார்த்தனை நடத்தி அருகில் உள்ள பூங்காவுக்குச்சென்று மகிழ்ச்சியுடன் பொழுதைக்

## ஐஸ்லாந்தில்



ஐஸ்லாந்தில் 24ஆம் திகதியே நத்தார் பண்டிகை ஆரம்பமாகும். இந்த பண்டிகையின்போது குடும்பங்கள் ஒன்றிணைந்து சிறந்த உணவு பொருட்களை உண்டு மகிழ்ச்சியடைந்து இரவு பிரார்த்தனையில் கலந்து கொள்கின்றனர்.



## நோர்வேயில்

நோர்வையில் பிள்ளைகள் ஜு லேனிஸேன் (Julenissen) என்று அழைக்கப்படும் நத்தார் தாத்தாவை எதிர்பார்த்திருப்பர். பண்டிகையின் போது அவர் பிள்ளைகளுக்கு பரிசுப் பொருட்களை வழங்கி மகிழ்ச்சிப் படுத்துவார். மக்கள் ஒருவரை ஒருவர் சந்திக்கும் போது "கோட்ஜுல்" (God Jul) என்று வாழ்த்துவார்கள். அதாவது மகிழ்ச்சிகரமான நத்தார் பண்டிகை வாழ்த்து என்பதாகும்.

## பிலிப்பைன்ஸில்

பிலிப்பைன்ஸில் நத்தார் பண்டிகையின்போது மக்கள் பாரம்பரியரீதியில் நட்சத்திர வடிவிலான விளக்கை வடிவமைத்து கொண்டாடுகின்றனர். இதனை அவர்கள் மூங்கில் மற்றும் வர்ண கடதாசிகளைக் கொண்டு வடிவமைக்கின்றனர். பண்டிகை காலத்தில் இந்த நட்சத்திர வடிவிலான விளக்குகள் பிலிப்பைன்ஸ் சந்தைகளிலும் விற்பனைக்கு வைக்கப்படுகின்றன.



## போர்த்துக்கலில்

போர்த்துக்கலில் நத்தார் பண்டிகையின் போது குடும்பத்தவர்கள் குழந்தை இயேசு வடிவத்தை வைத்து இயேசுவின் பிறப்பை நினைவுகூர்ந்து வழிபடுகின்றனர். அங்குள்ள சில கிராமங்களில் சமூகங்கள் ஒன்றிணைந்து தீ மூட்டி வழிபட்டு ஒருவருக்கொருவர் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றனர். தலைநகர் லிஸ்பனில் உள்ள சந்தையானது கிறிஸ்மஸ் மரங்களை கொள்வனவு செய்வதற்கான பிரபல சந்தையாக விளங்குகிறது.



மனதை வென்ற மங்கையர்

மனிதி

# இலங்கையின் தமிழ் ஊடகத்துறையில் ஒரு பெண் ஆளுமை திருமதி கௌரி பிருந்தன்



திருமதி கௌரி பிருந்தன்... இலங்கை 90 கிட்ஸ்களின் ஆஸ்தான தமிழ் பெண் அறிவிப்பாளர்களுள் ஒருவர். பிரபல தமிழ் வானொலியில், இவர் தொகுத்து வழங்கிய 'இசைச்சமர்', 'தங்கத் தேன் மழை' மற்றும் அரசியல் தொடர்பான நிகழ்ச்சியான 'சூரியப் பார்வை' போன்ற நிகழ்ச்சிகளுக்கென்றே தனி இரசிகர் பட்டாளம் இருந்தது என்றால் அது மிகையாகாது.

ஊடகத்துறையில் இவருக்கிருந்த ஆர்வம் காரணமாக, மாணவ பருவத்தில் பல கலை நிகழ்ச்சிகளிலும், அறிவிப்பாளராக பங்குபற்றியுள்ளார். சிறு வயதிலிருந்தே அறிவிப்புத் துறையில் இவருக்கிருந்த ஆற்றல் பின்னாளில் அவரை ஊடகத்துறையில் மிளிரச் செய்தது. பாடசாலைக் கல்வியை திறம்பட நிறைவு செய்து கணினித் துறையில் தனது மேல் படிப்பை மெற்கொண்ட இவர், வெற்றிகரமாக தனது பட்டப்படிப்பையும் நிறைவு செய்துள்ளார்.

இலத்திரனியல் ஊடகத்துறையில் அறிவிப்பாளர், செய்திவாசிப்பாளர் மற்றும் நிகழ்ச்சித் தொகுப்பாளர் என பன்முகத் திறமைகளை வெளிப்படுத்தியுள்ள திருமதி கௌரி பிருந்தன், தமிழ் எப்.எம் வானொலியில் நிகழ்ச்சி முகாமையாளராகவும், ஆதவன், தொலைக்காட்சியில் செய்தி வாசிப்பாளராகவும் பணியாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சென்னையில் உள்ள SRM பல்கலைக்கழகத்தில் ஊடகத்துறை தொடர்பான கற்கைநெறியொன்றை தொடர்ந்துள்ள இவர், இலங்கையின் முன்னணி ஊடகத்துறைகள் பலவற்றிலும் கடமையாற்றியுள்ளமை கூடுதல் சிறப்பு. திருமணத்திற்கு பின்னர் ஒரு சிறு இடைவேளை எடுத்துக்கொண்ட திருமதி கௌரி, மீண்டும் ஊடகத்துறையில் மிளிர்ந்து வருகின்றார்.

தற்போது சுயாதீன ஊடகவியலாளராக பணி புரியும்



அதேவேளை, தனியார் செய்தி நிறுவனம் ஒன்றில் செய்தியாசிரியராகவும் பணியாற்றி வரும் இவர், தன் தந்தையின் தனியார் நிறுவனத்தையும் பொறுப்பேற்று நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. குடும்பத் தலைவியாக பல பொறுப்புகள் காணப்பட்டாலும் சிறந்த ஊடகவியலாளராக ஊடகத்துறைக்கு தனது பங்களிப்பை வழங்கி எதிர்வரும் சந்ததியினருக்கு ஒரு சிறந்த முன்னுதாரணமாக விளங்கி வரும் இவருக்கு, கனடா விழித்தெழு பெண்ணே அமைப்பு, 'சிறந்த பெண் ஆளுமைக்கான' விருது வழங்கி கௌரவித்துள்ளது.

அதேவேளை, கண்டியிலுள்ள இரத்னதீபம் அமைப்பின் மூலமும் சிறந்த பெண் ஆளுமை என்ற விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார் திருமதி கௌரி பிருந்தன்.

இரண்டு தசாப்தங்களுக்கும் மேல் ஊடக அனுபவம் கொண்ட திருமதி கௌரி, இந்தியாவில் இருந்து சர்வதேச செய்தி நிருபர் மற்றும் தொலைக்காட்சி தொகுப்பாளராக பணியாற்றிய இலங்கையின் முதல் தமிழ் பெண் என்ற சிறப்புக்கும் சொந்தக்காரர்.

தமிழ் பேசும் பெண் ஊடக அமைப்பின் செயலாளர், ஊடகப் பயிற்சியாளர் மற்றும் சுயாதீன ஊடகவியலாளராகவும் பிரகாசித்து வரும் கௌரி பிருந்தன், மனதை வென்ற மங்கையருள் ஒருவராக தமிழ் ஊடகத்துறையின் எதிர்கால பெண் ஊடகவியாலாளர்களுக்கு சிறந்ததோர் எடுத்துக்காட்டாக திகழ்கின்றார் என்றால் அது மிகையாகாது.



# அடடா !

திடீரென்று தாங்கமுடியாத வலி ஏற்படும் பொழுது நொடியில் வலி நீங்க இளநீரில், ஒரு எலுமிச்சம் பழத்தின் சாற்றை பிழிந்து அப்படியே குடித்து விடுங்கள். உஷ்ணம் தணிந்து உஷ்ணத்தால் ஏற்படும் வயிறு வலி நீங்கிவிடும்.

பழைய சோறு ஊறிய தண்ணீரில் இருக்கும் சத்துக்கள் அளவற்றவை, எனவே, எஞ்சிய சோற்றில் தண்ணீர் ஊற்றி, அந்த தண்ணீரால் தலை முடியை கழுவினால், மயிர்களின் கால்களுக்கு சத்துக்கள் கிடைத்து ஆரோக்கியத்துடனும், பளபளப்பாகவும் இருக்கும்.

எலுமிச்சை ஊறுகாய் தயாரிக்கும் பொழுது அதனுடன் சிறிது சீனி, மிளகாய்த்தூள், 2 தேக்கரண்டி ஓமம் சேர்த்து நன்கு குலுக்கி பின்னர் வெயிலில் உலர வைத்து சாப்பிட, சுவையும் நன்றாக இருக்கும், ஆரோக்கியமும் பலப்படும்.

பேன் தொல்லை நீங்க, சீயக்காய், கடுக்காய் மற்றும் வேப்பிலையை காய வைத்து சேர்த்து அரைத்துக் குளித்தால் எத்தகைய பேன் தொல்லையும் நீங்கிவிடும்.

உருளைக்கிழங்குச் சமைப்பதாக இருந்தால் அதனுடன் சேர்த்து கொஞ்சம் ஓமம் மற்றும் சீரகம் ஆகியவற்றை சேர்த்து உருளைக்கிழங்கு கறி தயாரித்தால், கறி மிகவும் சுவையாக இருப்பதோடு, நல்ல மணமாகவும் இருக்கும். மேலும், உருளைக்கிழங்கின் மூலம் ஏற்படும் வாய்வு நீங்கி செரிமானம் அடையும்.

ஆஸ்துமா போன்ற நோய்கள் இருப்பவர்கள் தூதுவளை பூவை பசும் பாலில் சேர்த்து நன்கு காய்ச்சி வடிகட்டி பருகினால் நோயின் தீவிரம் குறையும்.

செம்பருத்தி இலைகளை மைய அரைத்து தலை முழுவதும் தடவி 10 நிமிடம் ஊறவிட்டு அலசினால் கூந்தல் கருகருவென்றிருப்பதோடு, மிருதுவாகவும் இருக்கும்.






# கூந்தல் உதிர்வா? கவலை வேண்டாம்...!

- பாதாம் அல்லது தேங்காய் எண்ணெய்யை சூடாக்கி, உச்சந்தலையில் மசாஜ் செய்யவும். இதன் மூலம், மயிர்க்கால்களுக்கு இரத்த ஓட்டமும், இழைகளின் வேர்களின் வலிமையும் அதிகரிக்கப்படும் என்பதோடு உச்சந்தலை சீரமைக்கப்படும்.
- தேங்காய் எண்ணெய்யில் 'லொரிக் அமிலம்' உள்ளது. இது கொழுப்பு அமிலத்தின் ஒரு வடிவமாகும். இது முடி தண்டுகளில் ஊடுருவி, புரத இழப்பைக் குறைக்கிறது. மேலும், தேங்காய் எண்ணெய் உச்சந்தலையின் நுண்ணுயிரியை வளப்படுத்துகிறது.
- சிலருக்கு பூச்சி வெட்டால், தலையில் முடியில்லாமல் ஆங்காங்கே வழுக்கை விழுந்ததுபோலத் தோன்றும். இதற்குச் சிறந்த மருந்து, வெங்காயம்தான். வெங்காயச் சாற்றை தலையில் தேய்த்து, நன்கு மசாஜ் செய்து, ஒரு மணி நேரத்துக்குப் பிறகு தலையை நன்கு அலச வேண்டும். இப்படி வாரத்துக்கு மூன்று முறை தொடர்ந்து ஆறு மாதங்களுக்கு செய்துவர, பூச்சி வெட்டு மற்றும் பொடுகுத் தொல்லைகள் நீங்கும். முடியின் வேர்கள் வலுவடையும். வெங்காயம் மட்டுமல்லாமல் பூண்டும் மேலே குறிப்பிட்டுள்ள பலன்களை அளிக்கக்கூடியது. தினமும் இரண்டு முறை பூண்டின் சாற்றை தலையில் தேய்த்து வந்தால், மூன்றே மாதங்களில் நல்ல பலன் கிடைக்கும்.



- மன உளைச்சலும் கூந்தல் உதிர்வுக்கு முக்கிய காரணமாகின்றது. அந்த வகையில், 'ஹிப்னோதெரபி' பயிற்சியை எடுத்துக்கொள்வதால், உதிர்ந்த இடத்திலும்கூட முடி வளர்வதை சில ஆய்வுகள் நிரூபித்துள்ளன.
- புரதச்சத்து, இரும்புச்சத்து மற்றும் விட்டமின் நிறைந்த உணவுகள் அவசியம். பச்சைக் காய்கறிகள், மிளகு, எலுமிச்சை, திராட்சை, உலர் பழங்கள், மீன், முட்டை போன்ற உணவுகள் கூந்தலை அடர்த்தியாகவும் ஆரோக்கியமாகவும் பளபளப்பாகவும் வைத்திருக்க உதவும்.

FASHION

# குழந்தைகளுக்கான கிறிஸ்மஸ் ஆடைகள்








# கிறிஸ்மஸ் கேக்



### தேவையான பொருட்கள்

- கோதுமை மா - 220 கிராம்
- கருப்பட்டி - 220 கிராம்
- உலர்ந்த பழங்கள் - தேவையான அளவு
- முட்டை - 3
- பட்டர்- 220 கிராம்
- பாதாம் - தேவையான அளவு
- வெனிலா எசன்ஸ் - 1 தேக்கரண்டி
- பேக்கிங் சோடா - 1 தேக்கரண்டி
- உப்பு - - தேக்கரண்டி
- தோடம்பழம் மற்றும் எலுமிச்சை தோல் சீவியது - 1 தேக்கரண்டி
- ஏலக்காய், கிராம்பு, பட்டை அரைத்தது - 1 தேக்கரண்டி

### செய்முறை

முதலில் பட்டர் மற்றும் கருப்பட்டியை ஒரு பாத்திரத்தில் கொட்டி நன்கு கலக்க வேண்டும். அடுத்ததாக முட்டைகளை உடைத்து அதையும் நன்கு கலந்து கொள்ளவும். பின் கோதுமை மா அத்துடன் தேவையான அளவு உப்பு, வெனிலா எசன்ஸ் மற்றும் பேக்கிங் சோடா ஆகியவற்றையும் சேர்த்து கிளறவும்.

இறுதியாக உலர்ந்த பழங்கள், எலுமிச்சை சேர்த்து நன்கு சீராகக் கலக்கவும். அதன் பின் அதை ஒரு வட்டமான பாத்திரத்தில் கொட்டி அதன் மேல் பாதாமை தூவவும்.

அவன் (Oven) இல் வேக வைக்கவும். பின்னர், திறந்து பார்த்தால் கேக் உப்பி வந்திருக்கும். இப்போது சுவையான கிறிஸ்மஸ் கேக் தயார்.




# கண்கள் மற்றும் புருவங்களின் மேக்கப்

கண்கள் மற்றும் புருவங்களின் தோற்றத்தை மேம்படுத்துவதில் 'ஐ ப்ரோ ப்ரஷ்' (Eyebrow Brush) முக்கிய பங்கு வகிக்கின்றது. புருவத்தில் உள்ள முடியை ஒன்று போல இழுக்க தட்டையான மற்றும் கோண வடிவ தூரிகை ப்ரஷ்களை பயன்படுத்துங்கள். அதுபோல், புருவங்களை நிரப்ப சாய்ந்த தூரிகை ப்ரஷ்களை பயன்படுத்லாம். பிறகு சீப்பு கொண்டு சீவி அதை ஒழுங்குபடுத்வும்.

- ஸ்மோக்கி ஐ மேக்கப் (Smokey Eye) தேவை என்றால் அதற்கு பென்சில் ப்ரஷ் சிறந்த ஒன்றாக இருக்கும். கண்களுக்கு மென்மையான தோற்றத்தை அளிக்க ஸ்மட்ஜ் ப்ரஷ் உதவி செய்யும். இந்த ஸ்மட்ஜ் ப்ரஷ் (smudge brush) குட்டையான முடிகளுடன் தனித்துவமான மற்றும் தட்டையான வடிவங்களில் வருகிறது. இது கண்ணிமைக்கு ஆழமான தோற்றத்தையும், நிறத்தையும் சேர்க்கிறது.
- ஐ ஷேடோ ப்ரஷ் (Eye Shadow Brush), கண் இமைகளுக்கு சரியான தோற்றத்தை அளிக்கிறது. இந்த ஐ ஷேடோ ப்ரஷ் தட்டையாகவும், வட்டமாகவும், நுனியில் அடர்த்தியாகவும் இருக்கும். பல்வேறு வகையான ஐ ஷேடோ ப்ரஷ்கள் இருக்கின்றன. அவற்றில் ஒன்றை தேர்ந்தெடுத்து பயன்படுத்தலாம்.
- திரவ மேக்கப் செய்யும் போது விரல்களுக்கு பதிலாக பவுண்டேஷன் ப்ரஷ்களை (Foundation Brush) பயன்படுத்துவது நல்லது. பவுண்டேஷன் பௌடர் பயன்படுத்தும் போது பவுண்டேஷன் ப்ரஷ்கள் உங்களுக்கு ஏற்ற ஒன்றாக இருக்கும். பவுண்டேஷன் ப்ரஷ்கள் அடர்த்தியானவை மற்றும் தட்டையான தூரிகைகள் வடிவில் வருகிறது.




- மஸ்காரா போடுவதில் மஸ்காரா ப்ரஷ் (Mascara Brush) மிக முக்கிய பங்கு வகிக்கிறது. மஸ்காரா ப்ரஷ்ஷை தனியாக வைத்திருக்க வேண்டும். ஒவ்வொரு பயன்பாட்டிற்கு பிறகும் அதனை கழுவ வேண்டும்.
- மஸ்காரா ஃபேன் ப்ரஷ் விசிறி வடிவம் கொண்டது. இது கீழ் மற்றும் மேல் இமைகள் இரண்டிலும் மஸ்காராவை துல்லியமாக பயன்படுத்த உதவுகிறது.



- ஐ லைனர் ப்ரஷ் (Eyeliner Brush) ஜெல், கிரீம் அல்லது திரவ ஐ லைனரை பயன்படுத்த உதவுகிறது. இது, திரவ ஐ லைனரை துல்லியமாக பயன்படுத்த சிறந்த ஒன்றாகும்.

# வளையணிந்த என் கைகளைப் பற்றி நடந்து செல்வாயா?

## நிரைவளை முன்கைபற்றி வரைநிழற் சேர்கம் நடத்திசிற் சிறிதே

போருக்குச் செல்லுதலும் போரில் இறத்தலும் வெற்றி வாகை சூடுதலும் பண்டைய சமூகங்களில் இயல்பானதாக இருந்தன.அக்கால மக்கள் தம்மைப் பாதுகாத்துக் கொள்ள போர் அவசியமாயிற்று. தேவை ஏற்படும்போது அச்சமூகத்து ஆண்கள் போருக்குச் செல்ல வேண்டும். பெண்கள் தமது குழந்தைகளைப் பெற்று வளர்த்து சிறுவயதிலிருந்தே போருக்குத் தயார் படுத்த வேண்டும்.

"ஈன்று புறந்தருதல் என்றலைக் கடனே
சான்றோ னாக்குதல் தந்தைக்குக் கடனே
வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே
ஒளிறுவா ளருஞ் சமமுருக்கி
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே"

என்று தாய் சொல்வதாக அமைந்த






புறநானூற்றுப் பாடல் அதனைக் காட்டும். குழந்தையைப் பெற்று வளர்த்தல் தாயின் கடனென்றும் அக்குழந்தையைப் போர்வீரனாக உருவாக்குதல் தந்தையின் கடன் என்றும் அவன் எதிரிகளோடு போராடுவதற்காக வேல் வடித்துக் கொடுத்தல் கொல்லனின் கடன் என்றும் யானையோடு போராடி வெல்லுதல் இந்த இளைஞனின் கடமை என்றும் சொல்லப்படுகிறது. போரை வாழ்க்கையாகக் கொண்ட ஒரு சமூகத்தில் போரினால் ஏற்பட்ட வெற்றிகள், பெருமிதங்கள் ஒருபக்கமிருக்க போரினால் ஏற்பட்ட இழப்புகளும் அவலங்களும் அதிகமாக இருந்தன. போருக்குச் சென்றவர்களில் மணம் செய்த ஆண்களும் இருந்தனர். மணம் முடிக்காத இளைஞர்களும் இருந்தனர். இவர்கள் போருக்குச் செல்லும்போது தம்மனைவியரை, காதலியைப் பிரிந்து செல்வர். அவ்வாறு செல்லும்போது பாசறையில் இருக்கும்போது போர்ச்சூழலை எதிர்கொண்டாலும் ஊரிலிருக்கும் மனைவியைப் பற்றியோ காதலியைப் பற்றியோ எண்ணிக் கொண்டுமிருப்பது தவிர்க்க முடியாதது. போர் வீரர்கள் மன்னருடன் சென்று பாசறையில் தங்கினர். தமது எல்லையில எதிரிப்படைகளை எதிர்பார்த்து பாசறையில் மன்னனுடன் காத்திருப்பர் இவர்கள் வெற்றி கொண்டால் திரும்பி வருவர். அல்லது போரில் புறங்காட்டாது மடிவர். இந்தப்போர் எப்போதும் ஏற்படலாம் என்ற நிலையில் வேந்தனுடன் பாசறையில் இருக்கின்ற தலைவன் தன் நிலையையும் மன்னனின் வீரத்தையும் பற்றிக் கூறும்போது தான் தன்மனைவியைப் பிரிந்திருக்கும் நிலையை எண்ணி வருந்துதல் பற்றிக் கூறும் பாடல்கள் பல உள்ளன அவ்வாறான பாடல் ஒன்று வருமாறு.

"மலைமிசைக் குலைஇய உருகெழு திருவின்
பணை முழங்கு எழிலி பௌவம் வாங்கி
தாழ்பெயற் பெருநீர் வலன் ஏர்பு வளைஇ
மாதிரம் புதைப்பப் பொழிதலின் காண்வர
இருநிலம் கவினிய ஏமுறு காலை
நெருப்பின் அன்ன சிறுகட் பன்றி
அயிர்க்கட் படாஅர்த் துஞ்சுபுறம் புதைய
நறுவீ முல்லை நாண்மலர் உதிரும்
புறவு அடைந்திருந்த அருமுனை இயவின்
சீறூரோளே ஒண்ணுதல்- யாமே
எரிபுரை பல்மலர் பிறழ வாங்கி
அரிஞர் யாத்த அலங்கு தலைப் பெருஞ்சூடு
கள்ஆர் வினைஞர் களம் தொறும் மறுகும்
தண்ணடை தழிஇய கொடிநுடங்கு ஆர்எயில்
அருந்திறை கொடுப்பவும் கொள்ளான் சினம் சிறந்து
வினைவயின் பெயர்க்கும் தானை
புனைதார் வேந்தன் பாசறை யேமே"

[அகம்: 84: முல்லைப்பாடல்]




இப்பாடலில் 1-10 வரையான அடிகள் முல்லை நிலத்துத் தலைவி பற்றியும் 11-16 வரையான அடிகள் வேந்தனோடு பாசறையிலிருக்கும் தலைவன் பற்றியும் கூறுகின்றன.

மலைமீது குவிந்திருந்த மேகம் கடலிலே நீரையுண்டு பெரிதாக முழங்கிக் கீழிறங்கி உலகம் புதையுமாறு மழையைப் பொழிகின்றதனால் நிலம் கவின் பெறுகின்ற அழகிய கார்காலத்திலே நெருப்பைப் போன்று சிவந்த சிறிய கண்களையுடைய பன்றி மணலிலே படுத்துறங்கும். அவ்வேளையிலே அதன் முதுகு மறையுமாறு மணம் வீசும் முல்லைமலர்கள் வீழ்ந்து கிடக்கும் சிற்றூரிலே அழகிய நுதலையுடைய என் தலைவி என் பிரிவை ஆற்றாது வருந்தி இருக்கிறாள்.

நெருப்புப்போன்ற சிவந்த பல மலர்களையும் சேர்த்துக் கட்டிய கதிர்க்கட்டுகளை கள்ளுண்டு களித்திருக்கும் களமரிடம் கொண்டு செல்கின்ற நிலவளம் சூழப்பெற்ற, கொடிகள் அசைந்தாடும் இந்த எயிலை பகைவர் திறையாகக் கொடுப்பதாகச் சொல்லவும் அதனையும் ஏற்றுக்கொள்ளாது போர்க்களம் செல்வதை எண்ணமாகக் கொண்டு போரிற் சிறந்த தானைகளைக் கொண்ட, மாலைகளை அணிந்த வேந்தனுடைய பாசறையிலே எப்போதும் போர்வரக்கூடிய சூழலிலே நான் இருக்கின்றேன் என்பதாக எண்ணி இரங்கும் பாடல் இது.

(இன்னும் சில அடுத்த வாரம்)

அம்மன்கிளி முருகதாஸ்
தகைசால் பேராசிரியர்








# அமரர் மு. பொன்னம்பலத்திற்கு தமிழ்ச் சங்கத்தில் நினைவுப்பகிர்வு

கொழும்புத் தமிழ்ச் சங்கம் நடத்திய மூத்த எழுத்தாளர், கவிஞர் அமரர் மு.பொன்னம்பலம் பற்றிய நினைவுப்பகிர்வு கடந்த டிசம்பர் 13 வெள்ளிக்கிழமையன்று மாலை 5.30 மணிக்கு "சங்கரப்பிள்ளை மண்டபத்தில்" கொழும்புத் தமிழ்ச் சங்கத் தலைவர் சட்டத்தரணி சுகந்தி இராஜகுலேந்திரா தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் திருமதி உமா பொன்னம்பலம் மு பொ வின் படத்திற்கு மாலை அணிவித்து நினைவஞ்சலி செலுத்துவதனையும், உரை பெயர்ப்பாளர் எஸ் சிவகுருநாதன், பேராசிரியர் மௌனகுரு மற்றும் மெய்யியல் ஆசான் த. இராஜரட்ணம் ஆகியோர் உரையாற்றுவதனையும் படங்களில் காணலாம். தமிழ் சங்கத்தின் இலக்கியக் குழுச் செயலாளர் தெட்சணாமூர்த்தி மதுசூதனன் மு.பொ வின் குடும்பத்தினர் சார்பில் ஏற்புரை நிகழ்த்தினார். மதுசூதனன் உரையாற்றுகையில் "மு.பொ வை ஆன்மிகம் என்னும் குறுகிய தளத்திற்குள் பார்ப்பது ஏற்புடையதல்ல" எனும் கருத்தினை வலியுறுத்தியமையும் குறிப்பிடத்தக்கது.

## இலங்கையின் புயல் நாள் புன்னகைக்கிறது...



வானம் உடைந்து உடைந்து ஒழுகிக்
கொண்டிருந்தது......
ஊழியின் பெருமூச்சு
உயிர்க் கலங்களின்
சாட்டை கொண்டடித்தது...
எங்கும் மரங்கள்
உருவந்து ஆடின
வீடுகள் ஒவ்வொன்றும் தீவாகின......
சில அடுப்புகள் புகைந்தன....
சில அடுப்புகள் ஓய்வாகின..
சிலரின்
முகவரிகள் மாற்றப்பட்டன,
பலருடைய பசியை விழுங்கின...
சில கிழட்டு முதலைகள் மட்டும்
வெப்பமூட்டிய அறையில்
அம்மணக்கனவுகள்
கண்டன........
இது இலங்கையின் புயல் நாள்
புன்னகைக்கிறது...!!!

- எஸ் தனேஸ்வரி -

## ஆக்கங்களை அனுப்பலாம்

"இலக்கிய லயம்" பக்கத்திற்கு ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன. இலக்கிய கட்டுரைகள், நிகழ்வுகள், மாற்று சிந்தனைகள் என இன்னோரன்ன அம்சங்களை நீங்கள் அனுப்பலாம். அவை தரம் கண்டு "ஒருவன்" ஞாயிறு பத்திரிகையில் பிரசுரிக்கப்படும். ஆக்கங்களை unicode முறையில் டைப் செய்து மின்னஞ்சலில் அனுப்பலாம்.

**அனுப்ப வேண்டிய மின்னஞ்சல் முகவரி**
Oruvanelakkiyam@gmail.com

# நவீன தமிழ் எழுத்துக்களுடன் பரிச்சயம் அடைவதற்கு எழுத்தாளர் இளங்கோ வழங்கும் ஆலோசனைகள்

## வாசியுங்கள்! கேளுங்கள்!! உங்களைப் புதுப்பியுங்கள்!!!



இளங்கோ




தற்கால ஈழத்து எழுத்துத் துறையில் அறியப்படுகின்ற இளங்கோ" நாவல், சிறுகதை, கவிதை, கட்டுரை, விமர்சனம் என தொடர்ந்தும் எழுத்துலகில் இயங்கி வருபவர். இவரது ஆக்கங்களான, கள்ளி (சிறுகதை), சாம்பல் வானத்தில் மறையும் வைரவர் (சிறுகதை), பேயாய் உழலும் சிறு மனமே (கட்டுரைகள்), மெக்சிக்கோ (நாவல்), தாய்லாந்து (நாவல்), நாடற்றவனின் குறிப்புகள் (கவிதைகள்) என்பன வாசகர்களின் அதிக கவனிப்புக்குள்ளாகியவை ஆகும். இவர் வாசகர்களுக்காக தற்போதைய இயங்குதளத்தில் வாசிக்க வேண்டியவற்றையும் கேட்க வேண்டியவற்றையும் தனது அனுபத்தினூடே அறியத் தருகின்றார்.

தற்செயலாக இணையத்தில் துழாவியபோது மாளவிகா பின்னியின் "சொல்லப்படாத தமிழ் வரலாறு" பற்றிய ஒரு நேர்காணலைப் பார்க்க முடிந்தது. மலையாளப் பின்னணியுள்ள ஒருவர் இவ்வளவு விரிவாக சங்ககாலம், சிலப்பதிகாரம், சோழர்காலம், பக்திக்காலம் குறித்துப் பேசுகின்றார் என்பதைப் பார்க்க மிக்க மகிழ்ச்சியாக இருந்தது. நேர்காணலைச் செய்பவர் அறிவியலை / வரலாற்றை விஞ்ஞானபூர்வமாக ஏற்றுக்கொள்ள மறுக்கின்றவராக இருந்தாலும், கோபப்படாது மாளவிகா அதை தனது புன்னகையால் எதிர்கொண்டு தான் சொல்ல வந்த விடயங்களை தெளிவாக எடுத்துச் சொல்வதை நம்மில் பலர் தமது உரையாடல்கள் / நேர்காணல்களில் கற்றுக்கொள்ளவேண்டும். சங்ககாலத்தைப் பற்றி அறிய எந்த நூல்களை வாசிக்கலாம் எனக் கேட்கின்றபோது அவர் சொல்கின்ற நூல்களில் ஒன்று கா.சிவத்தம்பியினது.

மாளவிகாவின் இந்த நேர்காணலில் வசீகரிக்கப்பட்டு அவரை இணையத்தில் பின்தொடரத் தொடங்கியிருந்தேன். தன்னை ஒரு தலித்தாக முன்வைக்கும் மாளவிகா ஒரு பல்கலைக்கழக மேடைப் பேச்சின் தொடக்கத்திலேயே "நீங்கள் இடஒதுக்கீட்டுக்கு எதிரானவர் என்றால், நீங்கள் ஒரு சாதி வெறியரே, இப்படிச் சொல்வது உங்களை அசௌகரியப்படுத்தும், ஆனால், நான் இப்படிச் சொல்லியே என் பேச்சை ஆரம்பிப்பேன்" என்று உறுதியாகச் சொல்கின்றார். மாளவிகாவின் சங்ககால நேர்காணலைப் பார்த்த நெகிழ்ச்சியில், இதை என் நண்பர்கள் சிலருக்குப் பகிர்ந்துமிருந்தேன். விரும்பியவர்கள் பாருங்கள்! https://youtu.be/hdzasYoSmGk?si=5Sl6OPpeqI_UUuwQ

வாசுதேவன் தமிழ்ப்பதிப்புகளுக்கு எழுத்துக்களில் அவசியமான செப்பனிடல் பணியை மேற்கொள்ளும் எடிட்டிங் செய்வோர் பற்றி நல்லதொரு கட்டுரை எழுதியிருக்கின்றார். இதைப் பற்றி நானுட்பட பலர் நீண்டகாலமாகப் பேசி வருகின்றோம். தமிழ்ப் பதிப்புகள் வடிவமைப்பிலும், தரத்திலும் அடைந்த வளர்ச்சியில் இன்னும் அடிப்படை விடயமான எடிட்டர்களின் விடயத்தில் எவ்வித காலடியையும் எடுத்து வைக்கவில்லை.

இந்த எடிட்டர்கள்-எழுத்தாளர்கள் குறித்த ஒரு உரையாடல் சில வருடங்களுக்கு முன் க்ரியா குறித்து தொடங்கியபோது, ஜெயமோகன் தொடக்கத்திலேயே ஒருபக்கச் சார்பெடுத்து எடிட்டர்களின் திருத்தம் / வெட்டல் தேவையில்லை என்று சொல்லி அதை ஒழித்துக்கட்டிய துயரமும் நடந்தது.

சர்வோத்தமன் சடகோபனின், ஹன்னா அரெண்ட் எழுதிய "ஜெருசலத்தில் ஐக்மென்" (Eichmann in Jerusalem) என்ற நூலைப் பற்றிய திறனாய்வை எவரும் தவறவிடாது வாசிக்க வேண்டுமெனச் சொல்வேன். 2ம் உலகமகாயுத்தத்தில் யூதர்களைக் கொல்வதற்குத் துணைபோன நாஸி இராணுவ அதிகாரி ஆர்ஜெண்டீனாவில் தலைமறைவாக இருக்கின்றார். அவரை இஸ்ரேலிய மொஸாாட் கைதுசெய்து நாடு கடத்தி வந்து இஸ்ரேல் நீதிமன்றத்தில் நிறுத்தி மரணதண்டனை கொடுப்பதை விவரிக்கும் நூலிது. இந்த நூலினூடாக இனப்படுகொலை / சட்டம் / அறம் என்பவற்றை மட்டும் பேசி அன்றைய யூதர்களின் பக்கம் நிற்காது சர்வோத்தமன் இன்றைய இஸ்ரேலிய அரசு காஸாவில் செய்யும் அட்டூழியங்களையும் குறிப்பிட்டுப் பேசுவதால்தான் இந்தக் கட்டுரை இன்னும் முக்கியமாகின்றது.

https://www.facebook.com/permalink.php?story_fbid=2763141163859860&id=100004920105846

ஒருவர் தொடர்ச்சியாக எழுதுகிறார், எழுத்தில் மனமகிழ்ச்சி கொள்கிறார் என்றால் அதுவே அவர் வாழ்க்கையில் அடையும் வெற்றிதான்.

இலக்கியமெனும் தனியுலகை கண்டடைந்து அதில் ஈடுபடுபவர், அதைக்கொண்டே அனைத்து வெறுமைகளையும் நிரப்பிக்கொள்ள முடியும். அத்தனைச் சரிவுகளிலும் தன்னைக் காத்துக்கொள்ள முடியும். அந்தப் பெரிய அருள் கிடைத்த ஒருவருக்கு உண்மையில் அதற்குமேல் எதுவுமே தேவையில்லை. எவருடைய ஏற்பும் தேவையில்லை. எவரும் வாசிக்கவில்லை என்றாலும் கூட குறையில்லை." என்று ஜெமோ சொல்வதை நம்மில் பலர் பலவேளைகளில் உணர்ந்திருக்கக் கூடும்.

https://www.jeyamohan.in/208907/



**குறளும் பொருளும்**

அதிகாரம் 3 : நீத்தார் பெருமை

**குறள் 21 :** ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து வேண்டும் பனுவல் துணிவு

**பொருள் :** ஒழுக்கத்தில் நிலைத்து நின்று பற்று விட்டவர்களின் பெருமையைச் சிறந்ததாக போற்றி கூறுவதே நூல்களின் துணிவாகும்.

**குறள் 22 :** துறந்தார் பெருமை துணைக் கூறின் வையத்து இறந்தாரை எண்ணிக்கொண் டற்று

**பொருள் :** பற்றுக்களைத் துறந்தவர்களின் பெருமையை அளந்து கூறுதல், உலகத்தில் இதுவரை பிறந்து இறந்தவர்களை கணக்கிடுவதைப் போன்றது.

## ஒருவன் மின்மினி

அன்பு தம்பி, தங்கையரே, இது உங்களுக்கான பக்கம். இதில் உங்கள் சித்திரங்கள், ஆக்கங்கள், பிறந்தநாள் வாழ்த்துகள், உங்கள் பாடசாலையில் இடம்பெற்ற நிகழ்வுகள் தொடர்பான புகைப்படங்கள் மற்றும் இப்பகுதி பற்றிய உங்கள் கருத்துகளை நீங்கள் எங்களுடன் வட்ஸப் அல்லது தபால் மூலம் பகிர்ந்துகொள்ளலாம். அவை, ஒருவன் மின்மினி பக்கத்தில் வெளியாகும்.

ஆசிரியர் பீ.ம., பெல்லாரிக்ஸ் கட்டிடம், 2ஆம் மாடி, டீ.விஸ்டர் சில்வா மாவத்தை, கொழும்பு – 09 0740162534

தெரியுமா?

# எப்படி வந்தார் நத்தார் தாத்தா?



நத்தார் தாத்தாவை கிறிஸ்மஸ் தாத்தா, சென்ட்டா க்ளோஸ், நத்தார் பப்பா என்ற பெயர்களில் அழைப்பதுண்டு. அந்தவகையில் நத்தார் தாத்தாவின் வரலாறு மிக சுவாரஷ்யம் நிறைந்ததாகும்.

துருக்கி நாட்டின் மிரா நகரில் நான்காம் நூற்றாண்டில் ரோமன் கத்தோலிக்க ஆயராக (பிஷப்) வாழ்ந்தவர் தான் புனித நிக்கோலஸ். மனித நேயத்தின் சின்னமாக விளங்கிய நிக்கோலஸ் தேவையானவர்களுக்கு உதவுவதையே வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டிருந்தார். அத்துடன் வாழ்க்கையின் அடித்தள மக்களின் மேம்பாட்டிற்காகவும், ஒடுக்கப்பட்ட சமுதாயத்திற்க்காகவும் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட அற்புதமான மனிதராக விளங்கினார்.

வறுமையின் வீரியத்தையும், ஏழைகளின் துயரையும் நேரடியாகச் சந்தித்த அனுபவம் அவரை மனித நேயவாதியாக மாற்றியது. அவருடைய வாழ்க்கையில் குழந்தைகளை அவர் அபரிமிதமாக நேசித்தார். குழந்தைகள் இருக்கும் வீடுகளில் யாருக்கும் தெரியாமல் பரிசுகளை வைப்பதை மிகவும் ஆனந்தத்துடன் செய்து வந்தார்.அவர் மறைவுக்குப் பின் அவர் மேற்கொண்டிருந்த அப்பழக்கமே பின்னர் 'செண்ட்ட க்ளோஸ்' என்ற உருவாகச் சித்தரிக்கப்பட்டு கிறிஸ்மஸ் தினத்திற்கு முன்பு குழந்தைகளுக்கு பரிசு வழங்கும் வழக்கம் பின்பற்றப்படலாயிற்று.

டொக்டர் கிளெமென்ற் மூர் ஒரு கவிஞராவார். அவர் 1822இல் இயற்றிய 'ஜிங்கிள் பெல் ஜிங்கிள் பெல்...' என ஆரம்பிக்கும் தன் கவிதையில் நிக்கோலஸ் அவர்களைக் கதாநாயகனாக வடிவமைத்தமையே நிக்கோலஸின் புகழ் அமெரிக்கா எங்கும் பரவ மூல காரணமாயிற்று.

கிளெமென்ற் மூர் எழுதிய கவிதைக்கு அமெரிக்க ஓவியர் உருவம் கொடுத்து அழகிய மணிகளால் அலங்கரிக்கப்பட்ட பனிச்சறுக்கு வண்டி ஒன்பது கலைமான்களால் இழுத்துச் செல்லப்படுவதையும் அதில் கம்பீரமாக அழகிய சிவந்த ஆடை அணிந்த நத்தார் தாத்தா செல்வதையும் காண முடிந்தது.

அந்த மான்கள் ஒவ்வொரு வீட்டின் கூரையின் மேலாகப் பறந்து செல்வதும் புகைக்கூடுகளின் ஊடாக நத்தார் தாத்தா குழந்தைகளுக்குப் பரிசுப் பொருள் வழங்குவதும் கண்கொள்ளாக் காட்சிகளாக சித்திரிக்கப்பட்டுள்ளது.

அழகிய சிவந்த கன்னங்கள், பழுப்பு நிறத் தாடி, சிறிய வாய், பெருத்த தொப்பை, சிவப்பு நிற அழகிய மேலாடை, பனிக்கால தொப்பி, தோளிலே ஒரு மூட்டை – இவையெல்லாம் ஒன்று திரண்ட உருவம் தான் நாம் பார்த்து மகிழும் செண்ட்டா க்ளோஸ்.

கிளெமென்ற் மூர் தான் புனைந்த 'ஜிங்கிள் பெல்....' கவிதையை தனது குழந்தைகளுக்கு நத்தார் பரிசாகவே புனைந்தார். ஆனால், இக்கவிதையால் கவரப்பட்ட மூரின் நண்பர் இரகசியமாக இக்கவிதையை நிவ்யோர்க் பத்திரிகை நிறுவனமொன்றுக்கு அனுப்பி வைத்தார். 1823ஆம் ஆண்டு கிறிஸ்மஸிற்கு முந்தைய நாள் பத்திரிகையில் அது பிரசுரிக்கப்பட்டது.

சில ஆண்டுகளிலேயே அமெரிக்க மக்கள் மத்தியில் நிலையான இடத்தைப் பெற்று அவர்கட்கு மகிழ்வளித்தது இக்கவிதை. கிளெமென்ற் மூர் இதற்கு இறுதி வரை உரிமை கோரவில்லை. ஆயினும், அனைவரது மனங்களிலும் நுழைந்து குழந்தைகளின் சொத்தாக இது மாறியது. அத்துடன், நத்தார் தாத்தா பாரம்பரியமும் உலகெல்லாம் பரவியது.








எம்.எஸ்.எஃப்.ஷபியா,
தரம் 05,
ஸாஹிரா வித்தியாலயம்,
நுவரெலியா.



என்.நுஸ்கா,
தரம் 05,
ஸாஹிரா வித்தியாலயம்,
நுவரெலியா.





3. ஏ.அனீஷா,
தரம் 05,
ஸாஹிரா வித்தியாலயம்,
நுவரெலியா.





என்.எஃப்.இஸ்மா,
தரம் 03,
ஸாஹிரா வித்தியாலயம்,
நுவரெலியா.





ஹிஷாம்,
தரம் 03,
ஸாஹிரா வித்தியாலயம்,
நுவரெலியா.




# உலகின் முதலாவது கிறிஸ்மஸ் வாழ்த்து அட்டை

இங்கிலாந்து நாட்டை சேர்ந்த ஹென்றி என்ற தொழிலதிபரே, கிறிஸ்மஸ் வாழ்த்து அட்டையை முதல் முதலில் அறிமுகப்படுத்தினார். பத்தொன்பதாம் நூற்றாண்டில் வசித்த இவர், கிறிஸ்மஸ் சமயத்தில் உறவினர்களுக்கு கடிதம் எழுத இயலாததால் அட்டையில் படத்தை அச்சிட்டு வாழ்த்தாக அனுப்பினார். ஆயிரம் பேருக்கு அவர் வாழ்த்து அட்டை அனுப்பினார்.

அதன்பிறகே கிறிஸ்மஸ் சமயத்தில் வாழ்த்து அட்டைகள் அனுப்பும் பழக்கம் ஏற்பட்டது. ஹென்றி அனுப்பிய ஆயிரம் வாழ்த்து அட்டைகளை இப்போதும் ஒருவர் லண்டனில் தன் வசம் வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வர்ணம் தீட்டுங்கள்



**பிறந்தார் பிறந்தார் கிறிஸ்து பிறந்தார்**
**விண்ணிலும் மண்ணிலும் வெற்றி முழங்க**

**அவரே வெளிச்சமாய் அவரே சத்தியமாய்**
**அவரே நித்தியாய் அவரே நிச்சயமாய்**

**மண்ணில் சமாதானம்**
**விண்ணிலும் மகிழ்ச்சி**
**என்றென்றும் தொனிக்க**
**நம் மன்னன் பிறந்தாரே**

**தூதர் சேனைகள் எக்காளம் முழங்க**
**எந்நாளும் தொனிக்க**
**நம் மன்னன் பிறந்தாரே**

**மாந்தர் யாவரும் போற்றி பாடுவோமே**
**நாதன் இயேசுவை வாழ்த்தி பாடுவோமே**



# கிறிஸ்மஸ் மரம்



கிறிஸ்மஸ் மரம் அலங் கரிக்கப்படுவதற்கு ஒரு சுவையான காரணமும் கதையும் உண்டு. 17ஆம் நூற்றாண்டின் குளிர்கால இரவில் மார்டின் லூதர் காட்டில் சென்று கொண்டிருந்தார். அப்போது தேவாலயத்தில் கூற வேண்டிய போதனைகளை நினைத்துக் கொண்டே சென்று கொண்டிருந்தார். வானில் இருள் சூழ்ந்து கொண்டது. அந்த காலத்தில் ஜெர்மன் காடுகளில் கொடிய மிருகங்கள் இருக்கும்.

இருள் சூழ்ந்ததும் மார்ட்டினுக்கு பயம் பிடித்துக் கொண்டது. மனதிற்குள் இறைவனை வேண்டியவாறே காட்டை கடந்து கொண்டிருந்தார். காட்டிலிருந்து ஒரு மரத்தை பார்க்கும் போது நீல நிறத்திலும், வெள்ளி நிறத்திலும் விளக்குகள் போல நட்சத்திரங்கள் மின்னுவதை பார்த்தார். அப்போது வியப்பில் ஆழ்ந்தார்.

இயேசு பிரான் இறந்த இடத்திற்கு சாஸ்திரிகளை அழைத்து சென்ற நட்சத்திரம் போல் தான் இவையும் என உணர்ந்தார். பின்னர் அந்த சிறிய மரத்தை எடுத்துக் கொண்டு தனது வீட்டிற்கு வந்தார். பின்னர் தன் குடும்பத்தினரை அழைத்து சுற்றி நிற்க வைத்து தனக்கு நேர்ந்த அனுபவங்களை தெரிவித்தார். தான் மிகவும் பயந்ததாக சொன்ன அவர், நட்சத்திரங்களின் ஒளி இறைவன்தான், நான் உன்னை கைவிட மாட்டேன் என நம்பிக்கை அளிக்கும் விதமாக அமைந்ததாகவும், உடல் சிலிர்த்தாகவும் தெரிவித்தார். இறைவன் அருட்பார்வை துன்பப்படுபவர் மீது பட்டு அவர்களை காப்பாற்றும் என கூறினார்.

அன்று முதல்தான் கிறிஸ்மஸ் மரத்துக்கு மெழுகுவர்த்திகள் ஏற்றி வைக்கும் வழக்கம் தோன்றியது. இன்றும் அது பின்பற்றப்பட்டு வருகிறது. கிறிஸ்மஸ் மரத்தில் ஏற்றி வைக்கப்பட்டிருக்கும் விளக்கின் ஒளி மார்ட்டின் லூதர்கிங் கூறியது போல் இறைவன் தம்மை காப்பாற்ற காத்திருக்கிறார் என்பதை உணர்த்தும் நம்பிக்கை ஒளியாக ஜொலித்துக் கொண்டிருக்கிறது.




# பச்சிளம் குழந்தைகளின் திடீர் மரணங்களைத் தடுக்கும் தாய்ப்பால்




பச்சிளம் குழந்தைகள் திடீரென மரணிப்பதை நாம் கேள்விப்பட்டிருப்போம். ஒரு வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் திடீரென காரணமே இல்லாமல் இறந்து போவதை, பச்சிளம் குழந்தையின் திடீர் மரண நோய் (SIDS - Sudden Infant Death Syndrome) எனப்படுகின்றது.

பெரும்பாலான பச்சிளம் குழந்தையின் திடீர் மரண நோய் (SIDS) இறப்புகள், 4 மாதங்களுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கே ஏற்படும். எடைக் குறைவு அல்லது குறை மாதத்தில் பிறக்கும் குழந்தைகளை இது எளிதில் பாதிக்கும். இது பல காரணங்களால் ஏற்படலாம்.

ஆனால், மருத்துவக் காரணங்களால் நோய்வாய்ப்பட்டு இறக்கும் குழந்தைகளின் மரணம், SIDS வகையைச் சேராது என்பதை கவனத்திற் கொள்ளவும். குறிப்பாக இதற்கு, சூழ்நிலைக் காரணிகள்தான் முதன்மையான காரணங்களாக இருக்கும்.



குழந்தை உறங்க வைக்கப்படும் மெத்தை, குழந்தை வளர்க்கப்படும் சூழல், சுவாசிக்கும் காற்றின் தன்மை, குடும்பத்தார் பயன்படுத்தும் வாசனைத் திரவியங்கள், நுளம்புச்சுருள் புகை எனப் பல்வேறு காரணங்கள் சில நேரங்களில் சற்றும் எதிர்பார்க்காத வகையில் குழந்தை உயிரிழக்கக் காரணமாகலாம்.

மேலும், மிருதுவான மெத்தையில் உறங்க வைக்கும்போது, குழந்தை குப்புற விழுந்தால் மூச்சுத்திணறல் ஏற்படும் சாத்தியங்கள் உள்ளன. இவை மரணத்திலும் முடியலாம். தாய்ப்பால் கொடுப்பதால் நிச்சயமாக இவ்வகை மரணங்களைக் கட்டுப்படுத்த முடியும். ஏனெனில், தாய்ப்பால் புகட்டும்போது, குழந்தைகளின் வாய், தொண்டை, நாக்கு போன்றவை அசைகின்றன, தானாகப் பயிற்சி பெறுகின்றன. இது குழந்தைகளுக்கு ஓர் எதிர்ப்பாற்றலை வழங்குகிறது. குறிப்பாக, தாய்ப்பாலூட்டலானது, மூச்சுத்திணறலால் ஏற்படும் மரணங்களைத் தவிர்க்க உதவுகிறது.

மேலும், கிருமிகளால் நோய்த்தொற்று ஏற்படுவதையும், வேறு உணவு சார்ந்து நோய் ஏற்படுவதையும் தாய்ப்பாலில் உள்ள எதிர்ப்புசக்தி தடுக்கிறது. தவிர, தாய்ப்பால் புகட்டப்பட்டு வளர்க்கப்படும் சிசுக்களுக்கு காய்ச்சல், சளி போன்றவையும் குறைவாகவே ஏற்படும்.

அடுத்தது, தாயின் கர்ப்பப்பை வாயின் அகலம் காரணமாகவும் சிசுவின் திடீர் மரணம் ஏற்படலாம். கர்ப்பப்பை வாய் சிறிதாக இருந்தால் குழந்தை குறை மாதத்தில் பிறக்கலாம். அந்தத் தாயின் அடுத்தடுத்த குழந்தைகளும் குறை மாதத்தில் பிறக்கவும், இதனால் SIDS ஏற்படவும் சாத்தியங்கள் உள்ளமை குறிப்பிடத்தக்கது.






காயம்பட்டவரை அவசரத்தில் கண்டபடி தூக்கிச் செல்லக் கூடாது. படுக்க வைத்து மட்டுமே தூக்கிச் செல்ல வேண்டும். ஒருவேளை தண்டுவடம் பாதிக்கப்படாமல் இருந்து, நீங்கள் உடலை மடக்கித் தூக்குவதன் மூலம் அது பாதிப்படையலாம். உடல் பாகங்கள் செயல் இழந்து, நிலைமையை மேலும் சிக்கலாக்கிவிடும்.



பிஸியோதெரபி என்பது இயற்கை வலி நிவாரணி. மாதக் கணக்கில் வலி நிவராணி மாத்திரைகள் சாப்பிடுவதன் மூலம் குணமாகும் பிரச்சினையை, வாரக் கணக்கிலேயே குணமாக்கிவிடும்.



எலும்பு முறிவு ஏற்பட்டால், எக்ஸ்-ரே எடுத்துப் பார்க்காமல் குத்துமதிப்பாக கட்டுப்போட்டு கொள்ளாதீர்கள். ஏனென்றால், எலும்புகள் கோணல்மாணலாக சேர்ந்துகொள்ளவும், தசைகள் தாறுமாறாக ஒட்டிக்கொள்ளவும் வாய்ப்பு இருக்கிறது. இதனால் கால்கள் கோணலாக, குட்டையாக மாறக்கூடிய ஆபத்து இருக்கிறது.



கால் தடுமாறி பிசகிவிட்டால் உடனே 'கையால் நீவிவிடு' என்பார்கள். அது தவறு. ஒருவேளை, எலும்பில் நூலிழை தெறிப்பு இருந்தால், நீவி விடுவதன் மூலம் அந்தத் தெறிப்பு அதிகரிக்கலாம்.






## அதிகளவு மன அழுத்தத்துக்கு வழிகோலும் "பிரெஞ்ச் ப்ரைஸ்"

பொரித்த உணவுகள் உடல் எடையை அதிகரிக்கும் என்பதுடன், இவை இரத்த அழுத்தம் மற்றும் இதய இரத்தக் குழாய்களை பாதிக்கும் நோய்களுக்கும் காரணமாகின்ற என்பது அனைவரும் அறிந்த ஒன்று தான். குறிப்பாக, தொடர்ந்து பல வருடங்கள் அதிகமாக பொறித்த உணவுகளை உட்கொள்வது உடற்பருமன், உயர் இரத்த அழுத்தம், இதய நோய்கள், நீரிழிவு நோய் போன்ற பல்வேறு உடல்நலப் பிரச்சினைகளுக்கு வழிவகுக்கும் என மருத்துவ ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில், பொரித்த உருளைக்கிழங்கை உண்பவர்கள், அதிக மன அழுத்தத்திற்கு ஆளாகின்றனர் என சமீபத்திய ஆய்வொன்றிலிருந்து தெரியவந்துள்ளது.

தேசிய அறிவியல் அகாடமி வெளியிட்டுள்ள தகவலின்படி, உருளைக்கிழங்கை எண்ணெயில் பொரிக்கும்போது 'அக்ரிலமைட்' என்ற வேதிப்பொருள் உருவாகிறது. இந்த வேதிப்பொருள் உடல்நலப் பிரச்சினைகளுக்கு முக்கிய காரணம் என்று கூறப்படுகிறது. தொடர்ந்து 'அக்ரிலமைடை' உட்கொள்வது மனச்சோர்வு மற்றும் கவலை போன்ற பிரச்சினைகளை ஏற்படுத்தும் என்று விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

இதன்படி, பொரித்த உருளைக்கிழங்கை உண்பவர்கள், பொறித்த மாமிசம் உண்பவர்களை விட அதிக மன அழுத்தத்திற்கு ஆளாகின்றனர் என்று குறித்த ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது. 12,000க்கும் மேற்பட்டோரிடம் மேற்கொள்ளப்பட்ட இந்த ஆய்வில், பெரும்பாலானோர் இளைஞர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த ஆய்வின் அடிப்படையில், அதிக அளவு பொரித்த உணவுகளை உட்கொள்வதைத் தவிர்க்குமாறு ஆராய்ச்சியாளர்கள்அறிவுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ரணக்கள்ளி




- ரணக்கள்ளி இலைகளில் நார்ச்சத்து அதிகம் இருப்பதால், உடல் ஆரோக்கியத்திற்கு மிகவும் நல்லது. இதனை நாம் சாறாக எடுத்துக் கொள்ளலாம்.
- ரணக்கள்ளியில் விட்டமின்கள், தாதுக்கள் மற்றும் ஒக்ஸிஜனேற்றங்கள் போன்ற ஊட்டச்சத்துக்கள் நிறைந்துள்ளன. எலும்பு ஆரோக்கியம், தசை செயல்பாடு போன்றவற்றிற்கு இது உதவுகிறது. இந்த ஊட்டச்சத்துக்கள் ஒட்டுமொத்த ஆரோக்கியத்திற்கும் பயனளிக்கின்றன.
- இதன் இலைகள் ஆரோக்கியமான சருமத்திற்கு உதவுகிறது. தோல் சம்பந்தப்பட்ட



அனைத்துப் பிரச்சினைகளுக்கும் இது நன்மைப் பயக்கிறது.

- காயங்கள், வெட்டுகள் போன்றவற்றிலிருந்து விரைவில் குணமுடைய இந்த இலை பயன்படுத்துப்படுகிறது. இந்த இலைகள் வரலாற்றில் அதிகம் அறியப்பட்ட ஒன்றாகும்.
- அழற்சி எதிர்ப்பு பண்புகளைக் கொண்ட இது வீக்கத்தைக் குறைக்கவும் உதவுகிறது.
- இது செரிமானத்திற்கு உதவுவதோடு மலச்சிக்கலைப் போக்கவும் குடல் ஆரோக்கியத்திற் கும் உதவும். நோயெதிர்ப்பு மண்டலத்தை மேம்படுத்தி நோய்களிலிருந்து குணப்படுத்துகிறது. இவை இரத்தத்தில் சீனியின் அளவைக் கட்டுப்படுத்த உதவுகின் றன. குளுக்கோஸ் வளர்சிதை மாற்றத்தை நிர்வகிப்பதற்கும் இது உதவுகிறது.
- முக்கியமாக இந்த இலைகள் எடை குறைவிற்கு மிகவும் பலனளிக்கும். அடிக்கடி பசி எடுப்பதைத் தடுக்கும்.
- இது சுவாச பிரச்சினைகளை போக்குகிறது. மூச்சுக்குழாய் அழற்சி போன்ற பிரச்சினைகளையும் தடுக்கிறது.
- காதுவலிக்கு ரணக்கள்ளி மூலிகையின் இலைகளை கசக்கி காதில் இரண்டு சொட்டுகள் விட, காது வலி உடனே குணமாகும்.
- ரணக்கள்ளி இலைகளை காலையில் வெறும் வயிற்றில் சாப்பிடலாம். ரணக்கள்ளி மற்றும் வெற்றிலை அரைத்து சேர்த்து புண்களில் வைக்கலாம். முதல் நாள் மிகச் சிறிய இலையில் இருந்து தான் சாபிட ஆரம்பிக்க வேண்டும். அடுத்த நாள் சற்று பெரிய இலை, அதற்கு அடுத்த நாள் அதைவிட சற்று பெரியது இப்படி படி படியாகதான் சாப்பிட வேண்டும்.

**குறிப்பு: கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள், இந்த இலைகள் சாப்பிடுவதைத் தவிர்க்கவும். மேலும் இந்த இலைகளை எடுத்துக் கொள்வதற்கு முன் மருத்துவ ஆலோசனையை பெற்றுக்கொள்வது நல்லது.**

## இந்த உணவுகளை சேர்த்து உண்ணாதீர்கள்



### பால் மற்றும் பழங்கள்

பால் மற்றும் பழங்கள் இரண்டும் எதிர் பண்புகளைக் கொண்டவை. பால் குளிர்ச்சி யானது என்பதால் செரிமானமாக நீண்ட நேரம் எடுக்கலாம். அதுபோல், பழங்கள் அமிலத்தன்மை கொண்டவை என்பதோடு, விரைவில் செரிமானமாகக்கூடியவை. இவை இரண்டும் ஒன்றாக சேரும்போது, பால் புளித்து, செரிமான பிரச்சினைகளை ஏற்படுத்தக் கூடும்.

### தயிரும் மீனும்

தயிர் மற்றும் மீன் இரண்டும் புரதச்சத்து நிறைந்தவை. இவற்றை ஒன்றாக உட் கொள்வது செரிமான அமைப்பில் எதிர் வினைகளை ஏற்படுத்தும். ஆயுர்வேதத்தின் படி, தயிர் மற்றும் மீன் இரண்டும் வெவ் வேறு வெப்ப மற்றும் செரிமான பண்பு களைக் கொண்டுள்ளன. இந்த சேர்க்கை உடலில் நச்சுத்தன்மையை உருவாக்கி தோல் நோய்கள், செரிமான கோளாறு கள் மற்றும் ஒவ்வாமை போன்ற பிரச்சினை களுக்கு வழிவகுக்கலாம் என்கின்றனர் மருத்துவ ஆய்வாளர்கள்.



### தேனுடன் சூடான உணவுகள்

தேன் ஒரு இயற்கையான இனிப்பு மற்றும் பல்வேறு மருத்துவ குணங்களைக் கொண்டது. ஆனால், தேனை சூடாக்கும் போது அதன் மூலக்கூறு அமைப்பு மாறு கிறது. சூடான தேன் உடலில் நச்சுத்தன்



மையை உருவாக்கலாம் என்று சில ஆய்வு கள் கூறுகின்றன. எனவே, தேனை சூடான பானங்கள் அல்லது உணவுகளில் சேர்ப் பதை தவிர்ப்பது நல்லது.

### தக்காளி மற்றும் பெஸ்தா

தக்காளி அமிலத்தன்மை கொண்டது. பெஸ்தா மாச்சத்து அதிகம் கொண்டது. இவற்றை ஒன்றாக உட்கொள்ளும்போது



செரிமான பிரச்சினைகள் மற்றும் நெஞ்செரிச்சல் ஏற்படலாம். தக்காளியுடன் மாச்சத்து கலவை உடலில் அதிகப்படியான அமிலத்தன்மையை உருவாக்கும்.

### சிட்ரஸ் பழங்கள் மற்றும் பால்

சிட்ரஸ் பழங்களில் அதிக அளவு விட்ட மின் 'சி' மற்றும் அமிலம் உள்ளது. இவற்றை பாலுடன் சேர்த்து உட்கொள்ளும்போது, பால் திரிந்து போக வாய்ப்புள்ளது. இந்த சேர்க்கை செரிமானப் பிரச்சினைகள், நெஞ்செரிச்சல் மற்றும் குமட்டல் போன்ற பிரச்சினைகளை ஏற்படுத்தும். எனவே, சிட்ரஸ் பழங்கள் மற்றும் பாலை தனித்தனி யாக உட்கொள்வது சிறந்தது.



## நகங்களில் தெரியும் நமது ஆரோக்கியம்

- நகங்களில் ஏற்படும் வெள்ளைப் புள்ளிகள் லுகோனிசியா என்று அழைக் கப்படுகிறது. இது, துத்தநாகக் குறை பாடு காரணமாக உருவாகிறது. சில சம யம் பூஞ்சை தொற்றுக்கான அறிகுறி



யாக இருக்கலாம் என்று மருத்துவர்கள் கூறுகின்றனர். இரத்தத்தில் ஹீமோ குளோபின் அளவு குறைந்தாலும், விட்ட மின் 'ஈ' குறைபாடு ஏற்பட்டாலும் கூட இப் படி வெள்ளை புள்ளிகள் தோன்றலாம்.

- எளிதில் உடையக் கூடிய மெல்லிய நகங்கள் பலருக்கு பொதுவாக உள்ளது. இது விட்டமின் 'பி' சார்ந்த ஊட்டச்சத்து குறைபாட்டால் உண்டாகிறது. உடலில் கல்சியம், இரும்புச்சத்து மற்றும் கொழுப்பு அமிலங்கள் குறைவாக இருப்பதையும் இது காட்டுகிறது. மேலும், நகம் வளர்வதற்குத் தேவையான கெரட்டின் குறைபாட் டாலும் இது உண்டாகிறது.
- நகங்கள் விரலோடு தோன்றும் இடத்தில் மஞ்சள் நிறத்தில் சிலருக்கு காணப்படும். இது அதிகப்படியான புகைபிடிப்பதால் ஏற்படலாம். பூஞ்சைத் தொற்று, சுவாச நோய், முடக்கு வாதம் அல்லது தைரொய்ட் நோய் அறிகுறி களையும் குறிக்கலாம்.

# தாஜுதீன் கொலை வழக்கில் அநுர சேனாநாயக்க என்ன செய்தார்?






பொலிஸ்மா அதிபராக இருந்த அநுர சேனாநாயக்கவும் கைது செய்யப்பட்டிருந்தார். தொடர்ந்து அநுர சேனாநாயக்கவுக்கு என்ன நடந்தது? தாஜுதீன் கொலை வழக்கில் சிக்கிய முக்கிய சாட்சி யார்? ஆம். 2012 ஆம் ஆண்டு முக்கிய சந்திப்பொன்று மூடிய அறையில் நடத்தப்பட்டிருந்தது. அதனை இரகசிய பேச்சுவார்த்தை என்றே கூறலாம்.

சிரேஷ்ட அதிகாரிகள் பலரும் இந்த கூட்டத்தில் கலந்து கொண்டிருந்தனர். குறிப்பாக அந்த காலகட்டத்தில் மேல்மாகாணத்துக்கு பொறுப்பாக இருந்த பொலிஸ்மா அதிபர் அநுர சேனாநாக்க தலைமையில் தான் இந்த கூட்டமே இடம்பெற்றிருந்தது. இவர் ராஜபக்ஷ குடும்பத்தினருடன் மிகவும் நெருக்கமானவர் என அந்நாட்களில் செய்திகள் வெளியாகி இருந்தன. இந்த ஒரு காரணத்துக்காகவே இவர் தாஜுதீன் வழக்கில் அதிகம் பேசப்பட்டவராக மாறினார்.

மேல் மாகாணத்துக்கு பொறுப்பான பொலிஸ்மா அதிபர் என்பதால் தாஜுதீன் வழக்கிற்கு பொறுப்பு கூறும் நிலையிலும் அவர் இருந்தார். இந்த கூட்டத்தின் போது மிக முக்கியமான தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. அதிலும் முக்கியமாக தாஜுதீனின் தந்தையை சந்திப்பதற்கான ஏற்பாடுகளை வெகு விரைவில் செய்யுமாறு மற்றுமொரு பொலிஸ் அதிகாரிக்கு அநுர சேனாநாயக்க பணிப்புரை விடுத்தார்.

அதனை தொடர்ந்து தாஜுதீனின் தந்தைக்கும் அநுர சேனாநாயக்கவுக்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றது. இதன்போது தாஜுதீன் பற்றிய மிக முக்கியமான விடயத்தை அவருடைய தந்தையிடம் அநுர சேனாநாயக்க கலந்துரையாடியதாக அந்நாட்களில் வெளியான பத்திரிகை செய்திகள் மூலம் காணமுடிந்தது.

அவரிடம் நடத்தப்பட்ட விசாரணைகளில் ஏதேனும் தகவல் கிடைத்ததா என்பது குறித்தும், ஜனாதிபதி செயலகத்திலிருந்து 70 இற்கும் அதிகமான தொலைபேசி அழைப்புகள் வந்திருந்தமை தொடர்பாகவும் குற்றப்புலனாய்வு பிரிவும் தீவிர விசாரணைகளில் ஈடுபட்டிருந்தனர். அதனைத் தொடர்ந்து அநுர சேனாநாயக்க மீதும் ஏராளமான குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டன. அதில் முக்கியமாக 2008 ஆம் ஆண்டு அநுர சேனாநாக்கவுக்கு ஒரு நியமனம் வழங்கப்பட்டிருந்தது.



அதாவது, அவர் கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவுக்கு பொறுப்பதிகாரியாக நியமிக்கப்பட்டிருந்தார்.

இதே காலகட்டத்தில் தான் பிரபல ஊடகவியலாளர் கீத்நொயார் கடத்தப்பட்ட சம்பவமும் பரபரப்பாக பேசப்பட்டு வந்தது. தெஹிவளை பொலிஸ் நிலையத்தில் இது தொடர்பாக முறைப்பாடும் பதிவு செய்யப்பட்டிருந்தது.

தொடர்ந்து, அவர் கடத்தப்பட்டு ஒருசில மணித்தியாலங்களிலேயே ஊடகவியலாளர்கள் சிலர் உடனடியாக தெஹிவளை பொலிஸ் நிலையத்துக்கு சென்று பொலிஸாரிடம் இச்சம்பவம்

**நடந்த சம்பவம் ஒரு கொலை கிடையாது. விபத்து என்பதன் அடிப்படையில் அதனை விசாரணை செய்யுமாறு பணித்ததுடன், தான் கூறுவது போல் செய்யாவிட்டால் என்ன நடக்கும் என்பது தெரியும்தானே..? என்ற தொனியில் அச்சறுத்தல் விடுக்கும் விதமாக அனுர சேனநாயக்க பேசியதாக செய்திகள் வெளியாகியிருந்தன**



குறித்து கேள்வி எழுப்ப ஆரம்பித்தனர். ஆனால், இங்குள்ள முக்கிய திருப்பம் என்னவென்றால், அதே சந்தர்ப்பத்தில் அநுர சேனாநாயக்கவும் அந்த பொலிஸ் நிலையத்தில் இருந்திருக்கின்றார். அப்போது அவர் ஊடகவியலாளர்களிடம் கீத்நொயாருக்கும் வேறொரு பெண்ணுக்கும் தகாத தொடர்பு இருந்திருக்கலாம். அதனால் அவர் கடத்தப்பட்டிருக்கலாம் என கூறியதாக பிரபல ஊடகவியலாளர் ஒருவர் அந்நாட்களில் எழுதியிருந்தார்.

தொடர்ந்து 2011ஆம் ஆண்டு, சிரேஷ்ட பொலிஸ்மா அதிபராக அவருக்கு நியமனம் வழங்கப்பட்டது. ஆனால், இந்த பதவியுயர்வுக்கு பிறகு பெரும் சர்ச்சைகள் எழுந்தமை அந்நாட்களில் பேசப்பட்டது.

இது தவிரவும் பல குற்றச்சாட்டுகளுக்கு அவர் இலக்காகியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. அவர்மீதான குற்றச்சாட்டுகளில் மிக பிரதானமானது தான் தாஜுதீன் கொலை வழக்கில் ஆதாரங்களை மூடிமறைக்க திட்டமிட்டார் என்பதாகும். அந்த சம்பவம் ஒரு திட்டமிடப்பட்ட கொலை என அறிந்தும் அதை விபத்து என சித்தரித்து விசாரணை செய்ய உத்தரவிட்டார் எனவும் கூறப்பட்டது. இதையெல்லாம் அடிப்படையாக வைத்தே முன்குறிப்பிட்டவாறு 2012 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி மூடிய அறைக்குள் முக்கிய பிரமுகர்களுடன் சந்திப்பு இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகின்றது.

முக்கிய சாட்சி என கூறப்பட்டாலும் சில ஊடகங்கள் அது அவர் அல்ல என்ற கருத்தை வெளிப்படுத்தும் விதமாகவும் செய்திகளை வெளியிட்டிருந்தன. ஆனால், அநுர சேனாநாயக்க நாராஹேன்பிட்டி குற்றப்பிரிவுக்கு அந்நாட்களில் ஒரு உத்தரவை பிறப்பித்திருந்தார். அதாவது, நடந்த சம்பவம் ஒரு கொலை கிடையாது. விபத்து என்பதன் அடிப்படையில் இதை விசாரணை செய்யுமாறு பணித்ததுடன், தான் சொல்வது போல் செய்யாவிட்டால் என்ன நடக்கும் என்பது தெரியும் தானே என்ற தொனியில் அச்சறுத்தல் விடுக்கும் விதமாக பேசியதாக செய்திகள் வெளியாகியிருந்தன.

மேலும், அந்த பொலிஸ் அதிகாரியின்

2016 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 16 ஆம் திகதி, இந்த வழக்கின் முக்கிய சாட்சியாக இருந்த ஒரு பொலிஸ் அதிகாரி, வாக்குமூலமொன்றை பதிவுசெய்திருந்தார். (இது தொடர்பாகவும் நாம் முன்னைய அத்தியாயத்தில் விபரமாக குறிப்பிட்டிருந்தோம்.) இதனை அடிப்படையாக வைத்துதான், அநுர சேனாநாயக்க தலைமையில் இந்த இரகசிய சந்திப்பு இடம்பெற்ற விடயம் வெளியானது. இந்த வாக்குமூலத்தை கொடுத்த சுமித் பெரேரா என்ற நபர், நாராஹென்பிட்டி பொலிஸ் நிலையத்தில் குற்றப்பிரிவுக்கு பொறுப்பதிகாரியாக இருந்தவர் என்பதும் சுட்டிக்காட்டத்தக்கது.

அந்நாட்களில் வெளியாகிய சில செய்திகளில், இவர் தான் அந்த வாக்குமூலத்தில் " நான் இரண்டு பிள்ளைகளின் தந்தை. தாஜுதீனுக்கு ஏற்பட்ட நிலையே எனக்கும் ஏற்பட்டு விடக்கூடாது என அச்சப்பட்டேன். எனது பிள்ளைகள் தமது தந்தையை இழந்தவர்கள் என்ற நிலை ஏற்படுவதை நான் விரும்பவில்லை. அதனால் மேலிடத்தார் கூறுவதைக் கேட்டு நடக்க வேண்டிய ஒரு நிர்ப்பந்த நிலைக்கு நான் ஆளானேன்" என வாக்குமூலத்தில் கூறியிருந்தமையானது, இன்றும் கூட வெளிப்படையாக தெரியவராத செய்தியாகவே இருந்து வருகின்றது.

**அடுத்து என்ன நடந்தது..?**
**அடுத்த வாரம் வரை காத்திருங்கள்...**

# மக்களுக்கான ஜனாதிபதி நிதியத்தில் கைவைத்த முன்னாள் அமைச்சர்கள்




பாலகணேஷ் டிலுக்ஷா

இலங்கையில் சாதாரண மக்களின் தேவைகளுக்காக நிறுவப்பட்ட ஜனாதிபதி நிதியமானது அமைச்சர்களின் தேவைகளுக்காக பயன்படுத்தப்பட்டுள்ளது என்ற தகவல் மிகவும் கவலைக்குரிய விடயம் ஆகும். இவ்வாறு ஜனாதிபதி நிதியத்தை அமைச்சர்கள் தமது தேவைகளுக்காக பயன்படுத்தியுள்ளமை தொடர்பிலான விபரங்கள் வெளியாகிய விடயம் பெரிதும் பேசப்படும் விடயமாக அமைந்துள்ளது.

அதற்கமைய , 2005 ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு




வரையான காலப்பகுதியில் ஜனாதிபதி நிதியத்திலிருந்து பணம் பெற்றுக்கொண்ட அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெயர் பட்டியலை கடந்த செவ்வாய்க்கிழமை (17.12.2024) அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ நாடாளுமன்றத்தில் பகிரங்கப்படுத்தியிருந்தார்.

முன்னாள் அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதி நிதியத்தின் பிரதான நோக்கத்திற்கு அப்பாற்பட்ட மருத்துவ சிகிச்சைக்கான நிதியுதவியை பெற்றுக்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

வறிய மற்றும் பின்தங்கிய மக்களுக்கு ஆதரவளிப்பதை மையமாகக் கொண்ட இந்த நிதியை பல முன்னாள் அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பெற்றுள்ளதாக அரசாங்கத்தின் பிரதம கொறடா நளிந்த ஜயதிஸ்ஸ சபையில் தெரிவித்தார்.

இதனூடாக கடந்த காலங்களில் மக்களின் பணம் சுரண்டப்பட்டு பாரியளவான ஊழல் இடம்பெற்றுள்ளதை அவதானிக்க முடிகிறது. இதற்கு

**மஹிந்த முதல் ரணில் வரை நடந்தது என்ன? நாடாளுமன்றத்தில் பகிரங்கப்படுத்தியதால் எழுந்த சர்ச்சை...**

அரசியல்வாதிகள் மாத்திரம் காரணமல்ல, இவ்வாறான ஊழல் மோசடிகளுக்கு அரச உயர் அதிகாரிகளின் பங்கும் காரணமாகியது என்பதை பலரும் அறிய வேண்டிய காலமிது. குறிப்பாக புதிய அரசாங்கம், தரவுகளை பகிரங்கப்படுத்தி மக்களுக்கு அறியத்தந்தமை வரவேற்கத்தக்கது.

இதன்படி, முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல 11 மில்லியன் ரூபா, ராஜித சேனாரத்னவுக்கு 10 மில்லியன் ரூபா,முன்னாள் அமைச்சர் அலெக் அலுவிஹாரே 2.2 மில்லியன் ரூபா, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான அவரது மகன் ரஞ்சித் அலுவிஹாரே 4.6 மில்லியன் ரூபா என நிதியை பெற்றுள்ளனர்.

மேலும், முன்னாள் பிரதமர் டி.எம். ஜயரத்னவுக்கு 30 மில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளது. இதற்கமைய இவரே அதிகளவான தொகையைப் பெற்றுள்ளாரர் என்பதும் குறிப்பிடத்தக்கது. அத்துடன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித் சொய்சா 18 மில்லியன் ரூபாவும், முன்னாள் சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா 2.7 மில்லியன் ரூபா நிதியையும் இவ்வாறு பெற்றுள்ளனர்.

தொடர்ந்து, ஜோன் அமரதுங்க 4 மில்லியன் ரூபா, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் விமலவீர திஸாநாயக்க 3 மில்லியன் ரூபா , விதுர விக்கிரமநாயக்க 1.5 மில்லியன் ரூபாவையும் பெற்றுள்ளனர்.

மேலும், மனோஜ் சிறிசேன, தயாசிறி ஜயசேகர, பி.ஹறிசன் , பி.தயாரத்ன, மேல்மாகாண முன்னாள் முதலமைச்சர் இசுர தேவப்பிரிய பெரேரா, பியல் நிஷாந்த டி சில்வா ஆகியோரும் இந்த நிதியில் இருந்து அண்மைய ஆண்டுகளில் உதவிகளைப் பெற்றுள்ளதாக அமைச்சர் சுட்டிக்காட்டியிருந்தார்.

இதில் குறிப்பிடத்தக்க விடயம் என்னவாயின், முன்னாள் ஜனாதிபதிகளான மஹிந்த ராஜபக்ஷ, மைத்திரிபால சிறிசேன, மற்றும் ரணில் விக்ரமசிங்க ஆகியோரே மேற்படி ஜனாதிபதி நிதியத்தின் தலைவர்களாக இருந்துள்ளனர் என்பதாகும்.

## ஜனாதிபதி நிதியத்தின் குறிக்கோள்

ஜனாதிபதி நிதியமானது 1978 ஆண்டின் 7 ஆம் இலக்கச் சட்டத்தால் இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட நிறுவனமாகும். அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்த்தனவின் பதவியேற்பை முன்னிட்டு நடாத்தப்பட்ட ஆரம்ப வைபவத்தின்போது பொது நலன்விரும்பிகளின் நிதிசார் பங்களிப்புடன் 237,120 ரூபாவை கொண்ட ஆரம்ப மூலதனத்தினால் ஜனாதிபதி நிதியம் ஆரம்பிக்கப்பட்டது.

இது ஜனாதிபதியின் நிதியம் எனக் குறிக்கப்படுவதுடன் இதனை முகாமை செய்து சட்ட ஏற்பாடுகளுக்கமையச் செயற்படுவதற்காக ஜனாதிபதி அவர்களுக்கு சட்டத்தால் அதிகாரமளிக்கப்படுகின்றது. அதற்கமைய, அரசின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் வருடாந்தம் ஜனாதிபதி நிதியத்தின் கணக்குகள் கணக்காய்வு செய்யப்படும்.

வறுமை ஒழிப்பு, கல்வி அல்லது ஞானத்தின் வளர்ச்சி,மதங்களின் எழுச்சிக்கு பங்களிப்பு செய்தல், நாட்டுக்கு சேவையாற்றியவர்களுக்கு விருதுகள் வழங்கல், ஜனாதிபதி மற்றும் ஆட்சிமன்ற செயற்பாட்டுக் குழுவின் கருத்துப்படி பொதுமக்களின் நலனுக்கான பணிகளைச் செய்தல் என்பன ஜனாதிபதி நிதியத்தின் குறிக்கோள்களாகும்.

இவ்வாறான உன்னதமான குறிக்கோள்களைக் கொண்டுள்ள இந்த நிதியமானது செயற்பாட்டு ரீதியில் விதிமுறைகளுக்கு மாறாக வேறு குறிக்கோள்களுடன் ஊழல் மற்றும் மோசடி ரீதியில் கையாளப்பட்டுள்ளமை மிகவும் வருந்தக்கது.

## நிதி கிடைக்கவில்லை என்கிறார் முன்னாள் எம்.பி

ஊழல் மோசடியில் ஈடுபட்டவர்கள் தாம் குற்றச்செயலில் ஈடுபட்டதை ஒப்புக்கொள்வது மிகவும் அரிது. ஜனாதிபதி நிதியத்தின் நிதியை துஷ்பிரயோகம் செய்தமை தொடர்பில் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ நாடாளுமன்றத்தில் தெரிவித்த மேற்படி கருத்து தொடர்பில், வாய்மொழியாகவும் எழுத்துப்பூர்வமாகவும் விளக்கமளித்துள்ளதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மனோஜ் சிறிசேன தெரிவித்துள்ளார்.

அதன்படி, 2009 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 9 ஆம் திகதி அக்குரஸ்ஸ பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்ட போது தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் தான் படுகாயமடைந்ததாகவும், அதற்காக கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று கண், காது மற்றும் வயிற்றுப் பகுதியிலும் சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டதாகவும், அவருக்கு செவிப்புல வெடிப்பு ஏற்பட்டதாகவும் குறிப்பிட்டுள்ளார். தனது சொந்த சொத்துக்களில் இருந்து 4.5 மில்லியன் ரூபாவை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சிகிச்சைகளுக்காக செலவிட்டதாகவும் மேலும் தெரிவத்துள்ளார்.

"ஆனால், உரிய முறையில் சரிபார்க்காமல் அமைச்சர் தரவுகளை முன்வைத்திருக்கிறார்" என்றார்.

ஜனாதிபதி நிதியத்தின் நிவாரணமானது அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட அரசியல்வாதிகளுக்கு கிடைப்பதைவிடவும் சாதாரண பொதுமக்களுக்கே பயன்படுவதாக அமைய வேண்டும். ஆனால், 2005 ஆம் ஆண்டு மஹிந்த ஜனாதிபதியாக இருந்த காலத்திலிருந்து 2023 நொவம்பர் மாதம் வரை ரணில் ஜனாதிபதியாகப் பதவி வகித்திருந்த காலப் பகுதியிலேயே ஜனாதிபதி நிதி அதிகளவில் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளது.

நோய் மற்றும் இயற்கை அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய முறையில் இந்த நிதி போய்ச் சேரவில்லை என்பது மேற்படி தகவல்கள் மூலம் தற்போது பகிரங்கப்பட்டுள்ளது என்பதே இங்கு கவனிக்கத்தக்க விடயமாகும்.

# ஒருவன் சினிமா



## விஜய் பட இயக்குனருடன் கைகோர்க்கும் அமீர் கான்

பொலிவுட் திரையுலகில் சூப்பர்ஸ்டாராக இரசிகர்களால் கொண்டாடப்பட்டு வருபவர் அமீர் கான். இவர் கடைசியாக கஜினி, லகான், தங்கல், பி.கே என பல சூப்பர்ஹிட் படங்களை கொடுத்துள்ளார்.

மேலும், தற்போது இவர் ரஜினியின் கூலி திரைப்படத்தில் சிறப்புத் தோற்றத்தில் நடிக்கிறார் என தகவல் வெளியாகியுள்ளது. இந்த நிலையில், தெலுங்கு இயக்குனர் வம்சி பைடிப்பள்ளி இயக்கத்தில் அமீர் கான் நடிக்கவுள்ளாராம். ஆனால், இதுகுறித்து அதிகாரப்பூர்வமான அறிவிப்பு இதுவரை வெளிவரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.




"பாலா உங்களுக்கு இயக்குநர். ஆனால் எனக்கு ஹீரோ. அவருடைய 'சேது' படத்தை நான் மிஸ் பண்ணிட்டேன். 'நந்தா' திரைப்படத்தைத்தான் தியேட்டரில் பார்த்தேன். எல்லா கலையிலும் நேர்த்தி இருந்தது. அவர் அன்று எப்படி இருந்தாரோ, அதே மாதிரிதான் இப்போதும். பாலாவிடம் "ரொம்ப மெதுவாக படம் பண்றீங்க"ன்னுதான் சொல்வேன். நிறைய படங்கள் தமிழ் சினிமாவை கீழே கொண்டு போகுது. நீங்க வந்து படம் பண்ணனும் பாலா"

–'பாலா 25' விழாவில்
இயக்குனர் மணி ரத்னம்






## இயக்குனராகிறார் கலை இயக்குனர் முத்துராஜ்

'நண்பன்', 'இந்தியன் 2', 'தெறி', 'பிகில்', 'மெர்சல்', 'ஜவான்', 'அயலான்' உட்பட பல திரைப்படங்களின் கலை இயக்குனராக அறியப்பட்டவர் டி.முத்துராஜ். இப்போது 'பேபி ஜோன்', 'இந்தியன் 3', 'எல்.ஐ.கே', 'இளையராஜா பயோபிக்' ஆகிய படங்களின் தயாரிப்பு வடிவமைப்பாளராகவும் இருந்து வருகிறார்.

இந்நிலையில், விரைவில் இயக்குனராக புது அவதாரம் எடுக்கவுள்ளார் முத்துராஜ். முத்துராஜ் இயக்குனராக மாறுவது சினிமா வட்டாரத்தில் தற்போது பேசுபொருளாகியுள்ளது.

சாபு சிரிலிடம் உதவியாளராக இருந்த இவருக்கு படம் இயக்க வேண்டும் என்பது பல வருட கனவென்று குறிப்பிட்டுள்ளார்.




## சினிமா விமர்சனம்

**2018 ஆம்** ஆண்டில் இந்திய மாநிலமான கேரளாவில் ஏற்பட்ட பேரழிவு தரும் வெள்ளத்தை அடிப்படையாகக் கொண்டு ஜூட் அன்டனி ஜோசப் இயக்கிய மலையாள மொழி சர்வைவல் டிராமா திரைப்படம் ஆகும். சமீபத்திய வரலாற்றில் மிக மோசமான இயற்கை பேரழிவுகளில் ஒன்றை எதிர்கொண்ட மக்களின் நெகிழ்ச்சி, தைரியம் மற்றும் ஒற்றுமையை இந்த படம் வெளிப்படுத்தி நிற்கின்றது.

**நடிகர்கள்:** டொவினோ தோமஸ், ஆசிப் அலி, குஞ்சாக்கோ போபன், வினீத் ஸ்ரீனிவாசன், அபர்ணா பாலமுரளி

### கதைச் சுருக்கம்

பல்வேறு துறைகளைச் சேர்ந்த பல கதாபாத்திரங்களை அறிமுகப்படுத்துவதன் மூலம் படம் தொடங்குகிறது. அனுப் (டொவினோ தோமஸ்), தனது கடந்த காலத்தால் வேட்டையாடப்பட்ட ஒரு மனிதன் ரமேசன் (ஆசிப் அலி), உள்ளூர் மீனவர் மற்றும் கோஷி (குஞ்சாக்கோ போபன்), ஒரு ஓய்வு பெற்ற இராணுவ வீரர். கேரளாவில் கனமழை பெய்யத் தொடங்கியவுடன் இவர்களின் வாழ்க்கையும் மற்றவர்களின் வாழ்க்கையும் வெளிப்படுத்தி நிற்கின்றது.

வெள்ள நீர் உயரும்போது, இந்த நபர்கள் வெளிப்புற அச்சுறுத்தல்கள் மற்றும் உள் மோதல்கள் இரண்டையும் எதிர்கொள்கின்றனர். இது அவர்களின் அச்சங்கள், குற்ற உணர்வு மற்றும் பொறுப்புணர்வை எதிர்கொள்ள தள்ளப்படுகின்றார்கள்.

மீனவர்கள், விவசாயிகள், இராணுவ வீரர்கள் மற்றும் தன்னார்வலர்கள் என அன்றாட மக்கள் உயிர்களைக் காப்பாற்ற ஒன்றிணைகையில், துணிச்சல் மற்றும் ஒற்றுமையின் ஒரு திரைச்சீலையை கட்டவிழ்ப்பதன் மூலம், சமூக உணர்வை வலியுறுத்துகிறது.

### உணர்ச்சித் தாக்கம்

'2018'இன் வலுவான அம்சங்களில் ஒன்று, இயற்கையின் சீற்றத்தின் முன்னால் மனிதர்களின் உதவியற்ற தன்மையை இது எவ்வாறு வெளிப்படுத்துகிறது என்பதுதான். இந்த படம் சோகத்தை பரபரப்பாக்குவதைத் தவிர்த்து, அதற்கு பதிலாக மனித ஆவி மற்றும் கூட்டு வலிமையை மையமாகக் கொண்ட ஒரு அடிப்படையான சித்தரிப்பை வெளிப்படுத்தி நிற்கின்றது.

தைரியம், தன்னலமற்ற தன்மை போன்ற கருப்பொருள்களில் இக்கதை நிறைந்துள்ளது, பார்வையாளர்கள் கதாபாத்திரங்களுடன் யதார்த்தமாகக் கொள்ளவும், பேரழிவுக்கு தங்கள் சொந்த பதில்களைப் பிரதிபலிக்கவும் செய்கிறது.

### ஒளிப்பதிவு மற்றும் காட்சிகள்

'2018'இன் தனித்துவமான அம்சங்களில் ஒன்று அதன் மூச்சடைக்கக் கூடிய ஒளிப்பதிவு. வெள்ளக் காட்சிகள் பேரழிவை உணர வைக்கும் தீவிரத்துடன் படமாக்கப்பட்டுள்ளன. கேரளாவின் பசுமையான நிலப்பரப்புகள், பேரழிவுடன் இணைந்து, படத்தின் உணர்ச்சிகரமான எடையை சேர்க்கின்றன. அழகு சிதைக்கப்படுவது போன்ற உணர்வு இருந்தாலும், பேரழிவுக்குப் பிறகு இயற்கை சூழல் எவ்வாறு மீண்டும் உருவாகிறது என்பதைப் பார்ப்பதில் நம்பிக்கையும் உள்ளது.

இயக்குனர் ஜூட் அன்டனி ஜோசப் மற்றும் ஒளிப்பதிவாளர் அகில் ஜோர்ஜ் ஆகியோர் பேரழிவின் அளவு மற்றும் அதில் சிக்கிய தனிநபர்களின் சிறிய தன்மை இரண்டையும் வலியுறுத்த வான்வழி காட்சிகள் மற்றும் பரந்த கோணங்களை திறமையாக பயன்படுத்துகின்றனர்.

### முடிவுரை

'2018' என்பது 2018 வெள்ளத்தின் போது கேரள மக்களின் மனித உணர்வு மற்றும் ஒற்றுமையின் பின்னடைவுக்கு ஆழமாக நகரும் மற்றும் பார்வைக்கு அதிர்ச்சியூட்டும் அஞ்சலி. ஜூட் அந்தோனி ஜோசப் பேரழிவின் நிஜ வாழ்க்கை நாயகர்களை கௌரவிப்பது மட்டுமல்லாமல், சமூகத்தின் வலிமை மற்றும் பச்சாத்தாபத்தை நினைவூட்டும் ஒரு படத்தை அமைத்துள்ளார்.

நாகராசா தனுஸ்காந்
ஊடகக் கற்கைகள் துறை,
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்

## 'ஸ்விட் கேம் சீசன் 3'

நெட்ஃப்ளிக்ஸ் ஓ.டி.டி தளத்தில் கடந்த 2021ஆம் ஆண்டு வெளியாகி பெரும் வரவேற்பைப் பெற்ற, மர்மங்கள் நிறைந்த தொடர் 'ஸ்குவிட் கேம்'.

தென்கொரியாவின் சிரன் பிக்சர்ஸ் தயாரித்த இந்தத் தொடருக்கு, உலகம் முழுவதும் இரசிகர்கள் அதிகம். 9 அத்தியாயங்களைக் கொண்ட இத்தொடரை, 'வாங் டோங் – யுக்' (Hwang Dong Hyuk) இயக்கி இருந்தார்.

பலத்த வரவேற்பைப் பெற்ற இந்தத் தொடரின் இரண்டாவது பாகத்தை, இரசிகர்கள் எதிர்பார்த்துக் காத்திருந்த நிலையில், டிசம்பர் 26ஆம் திகதி இரண்டாம் பாகம் வெளியாகும் என நெட்ஃப்ளிக்ஸ் அறிவித்திருந்தது.

இந்நிலையில் இதன் 3ஆம் பாகம், 2025ஆம் ஆண்டில் வெளியாகலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.




## உதவி இயக்குனர்களுக்கு வீடு வாங்கிக் கொடுத்த அட்லி



இயக்குநர் அட்லி தனது உதவி இயக்குனர்களாக பணிபுரிந்தவர்கள் அனைவருக்கும் சொந்தமாக வீடு வாங்கிக் கொடுத்துள்ளாராம். இந்த தகவலை பத்திரிகையாளர் அந்தணன் பகிர்ந்துள்ளார்.

அவர் தெரிவிக்கையில், "தான் சம்பாதித்தால் மட்டுமே போதும் என இருக்கும் இந்த திரையுலகில், தன்னுடன் வேலை பார்த்த உதவி இயக்குனர்களுக்கு வீடு வாங்கி கொடுத்துள்ளார் இயக்குநர் அட்லி" என தெரிவித்துள்ளார்.

## முடிவுக்கு வந்தது அருண் விஜய் - சிவகார்த்திகேயன் மோதல்

பாலா இயக்கத்தில் சூர்யா நடிக்கவிருந்த வணங்கான், சில காரணங்களால் அருண் விஜய் கைக்கு மாறியது. விரைவில் வெளியீட்டுக்கு தயாராகிவரும் நிலையில், இத்திரைப்படத்தின் இசை வெளியீட்டு விழா அண்மையில் நடைபெற்றது.

இதில் சூர்யா, சிவகுமார், சிவகார்த்திகேயன் என பல பிரபலங்கள் கலந்து கொண்டனர்.

இந்நிலையில், சிவகார்த்திகேயன் விழாவுக்கு வருவார் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை. ஏனென்றால் சில வருடங்களுக்கு முன்னர் அருண் விஜய், சீமராஜா படம் வெளிவந்த போது ஒரு பதிவு போட்டிருந்தார்.

"யாரெல்லாம் மாஸ் பண்றதுன்னு விவஸ்தை இல்லாம போச்சு" என பதிவிட்டிருந்தார். சிவகார்த்திகேயனை தான் அவர் கிண்டல் செய்கிறார் என இரசிகர்கள் கொந்தளித்தனர்.

இது பரபரப்பை கிளப்பிய நிலையில் தொடர்ந்து இவர்கள் குறித்த சர்ச்சைப் பதிவுகள் வெளியாகி வந்தன. இந்நிலையில், வணங்கான் இசை வெளியீட்டில், சிவகார்த்திகேயன் விழாவில் பங்கேற்றதன் மூலம், எங்களுக்குள் எந்த பிரச்சினையும் இல்லை என அவர் சொல்லாமல் சொல்லிவிட்டார்" என சினிமா வட்டாரத்தில் பேசப்படுகின்றது.



## சிகிச்சைக்காக அமெரிக்கா சென்றார் நடிகர் சிவராஜ் குமார்

கன்னட திரையுலகின் சூப்பர் ஸ்டாரான சிவராஜ்குமார் கடந்தாண்டு 'ஜெயிலர்' திரைப்படத்தில் நடித்து மாஸ் காட்டியிருந்தார். அதன் பிறகு இந்தாண்டு தனுஷுடன் இவர் நடித்திருந்த 'கெப்டன் மில்லர்' திரைப்படமும் வெளியானது.

இந்நிலையில், கடந்த சில நாட்களாக சுகயீனமுற்றிருந்த சிவராஜ்குமார், சிகிச்சைக்காக அமெரிக்காவுக்கு சென்றிருக்கிறார். இவர், ஃப்ளோரிடாவிலுள்ள மியாமி இன்ஸ்டிட்யூட்டில் சிகிச்சை பெறவிருக்கிறார். டிசம்பர் 24ஆம் திகதி இவருக்கு அறுவை சிகிச்சை நடைபெறவிருக்கிறதாம்.




இந்தப் பத்திரிகை கொழும்பு - 08 கலாநிதி என்.எம்.பெரேரா மாவத்தை, இலக்கம் 42 இல் அமைந்துள்ள "அபே ஜனஹண்ட பப்ளிகேஷன் பிரைவேட் லிமிடெட்" நிறுவனத்தினரால் 2024 டிசம்பர் 22ம் திகதி ஞாயிற்றுக்கிழமை தயார் செய்யப்பட்டு, எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட் அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.